பக்கங்கள்:24 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 03 ஞாயிற்றுக்கிழமை 16.01.2022 கதிர் 72


இது ரகசியம் அல்ல!

சர்ச்சை என்றாலே வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராசா என்று வந்து விட்டது போலும். அவர் எந்தக் காரியத்தை எடுத்தாலும் – கையாண்டாலும் – சர்ச்சை என்றாகி விட்டது.

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்கள். பக்கம்02

# இலங்கையின் நம்பகமான பங்காளியே இந்தியா!

## பஸிலிடம் ஜெய்சங்கர் உறுதி



இலங்கையின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று தொலைபேசியில் இடம்பெற்றுள்ளது.

இதனை இந்திய வெளிவிவகார அமைச்சர் தமது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் உறுதியான மற்றும் நம்பகமான பங்காளியாக இந்தியா எப்போதும் இருக்கும் என்பதை மீள உறுதிப்படுத்துவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தமது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் இதன்போது வலியுறுத்தப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த முக்கியமான தருணத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்காக ஏனைய உலக நாடுகளின் முயற்சிகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழர் நல்வாழ்வுக்காக துணைநிற்கும் இந்தியா

## தூதுவர் கோபால் பாக்லே தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி 16

இந்திய அரசு தமிழர் நல்வாழ்வுக்காக என்றென்றும் துணை நிற்கும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார். ☞2

## நாட்டில் மேலும் 160 ஒமக்ரோன் தொற்றாளர்கள்

### சந்திம ஜீவந்தர அதிர்ச்சி



இலங்கையில் மேலும் 160 ஒமக்ரொன் தொற்றாளர்கள் அடையாளம்காணப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீ ஜயவர்தனபுரம் பல்கலைக்கழகத்தின் ☞23

## நான்காவது தடுப்பூசி பற்றி அரசு அவதானம்

கொரோனாவுக்கு எதிரான நான்காவது தடுப்பூசி டோஸ் தேவைப்பட்டால் அதனை வழங்குவற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். ☞23

## பொரளையில் கைக்குண்டு மீட்பு; பின்னணியில் அரசியல் தலையீடு

### அநுரகுமார குற்றச்சாட்டு

பொரளை ஓல் செயின்ட்ஸ் தேவாலயத்துக்குல் வெடிகுண்டு கொண்டு வரப்பட்ட சம்பவத்தின் பின்னணியில், அரசியல் தலையீடு இருக்கின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ராகமவில் நேற்று நடைபெற்ற ☞23

## துன்பத்தை அறிந்த மக்களால் உருவாக்கப்பட்டதே நமது அரசு

### அமைச்சர் நாமல் கூறுகின்றார்



நாட்டு மக்களின் துன்பத்தை அறிந்த மக்களால் உருவான அரசே தற்போதைய அரசு என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்திய அரச நிதி உதவியின் ஊடாக இலங்கையில் மலையகப் பகுதிகளில் கட்டி அமைக்கப்பட்ட இந்திய வீடமைப்பு வீடுகளுக்கான ☞24

## அமைச்சரவை மறுசீரமைப்பு தாமதம்; ஏமாற்றத்தில் இரண்டு அமைச்சர்கள்!

புதிய ஆண்டின் ஆரம்பத்தில் அமைச்சரவையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என அரசின் தரப்பில் கூறப்பட்டு வந்தது. எனினும், அது விரைவில் நடக்காது எனக் கூறப்படுகின்றது. இந்தநிலையில், அமைச்சரவை மறுசீரமைப்பு நடக்காத காரணத்தால், இரண்டு அமைச்சர்கள் கடும் ஏமாற்றத்தில் இருந்து வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளனன.

வர்த்தக அமைச்சர் பந்துல ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்துக்கும் அபிவிருத்திக்கான தனியான மாவட்ட இணைப்புக் குழுக்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இணைத் தலைவர்கள். யாழ்ப்பாணம் – அங்கஜன் இராநாதன், கிளிநொச்சி – டக்ளஸ் தேவானந்தா, வவுனியா – திலீபன், மன்னார், முல்லைத்தீவு – காதர் மஸ்தான். இப்படி நான்கு எம்.பிக்கள், ஐந்து மாவட்டங்களுக்குமான இணைத் தலைவர்கள்.

இந்த ஐந்து மாவட்டங்களுக்கும் அவர்களுடன் மற்றொரு இணைத்தலைவராக பதவி வழியில் ஆளுநரும் உள்ளார்.

அதன்படி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஆளுநர் ஓர் இணைத் தலைவர் என்றால், அந்த மாவட்டத்துக்கென மற்றோர் இணைத் தலைவர் இருக்கின்றார்.

ஆனால், புதிய ஆளுநராகப் பதவியேற்ற ஜீவன் தியாகராஜா பெரும்பாலும் இந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களுக்குப் பிரசன்னமாவதில்லை. மற்றைய இணைத் தலைவரான அரசியல் பிரதிநிதியே அவற்றை நடத்துவது வழமை.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டம் கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை இணைத் தலைவரான டக்ளஸ் தேவனாந்தாவின் தலைமையில் நடைபெறும் என்று நேரத்துடனேயே அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. மற்றோர் இணைத் தலைவரான ஆளுநருக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தது.

வழமை போல அந்தக் கூட்டத்துக்கு ஆளுநர் போவில்லை. அதுவல்ல விடயம். அன்றைய தினம் காலையில் – அதேநேரம் – தமது யாழ்ப்பாண அலுவலகத்தில் மாவட்ட இணைத் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்றுக்கும், அதைத் தொடர்ந்து, யாழ்.மாவட்டச் செயலகத்தில் அதிகாரிகளின் – அடுத்த – கூட்டம் ஒன்றுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார் ஆளுநர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அந்த மாவட்டச் செயலகத்தில் காலை 10 மணிக்கு. அதே நேரத்தில் சகல மாவட்டங்களினதும் இணைத் தலைவர்களுக்குமான கூட்டம் அதே 10 மணிக்கு ஆளுநர் செயலகத்தில்.

எங்கு செல்வது என்று தெரியாமல் உயரதிகாரிகள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம செயலாளர் போன்றோர் தலையைப் பிய்த்துக் கொண்டனர்.

ஒன்றுக்குப் போய், மற்றதற்குப் போகாவிட்டால், எந்த மேலிடம் எப்படிப் பாயும், எப்படிச் சாதிக்கும் என்று தெரியாமல் அதிகாரிகள் பாடு பெரிய அல்லோலகல்லோலம்தான்.

இணைத் தலைவர்களில் ஒருவர் அமைச்சர். அமைச்சரவை அந்தஸ்து கொண்டவர். மூத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அவரைத் தமது அலுவலகத்துக்கு வருமாறு ஆளுநர் அழைக்கலாமா, அதற்கு அதிகாரம் உண்டா என்றெல்லாம் கேள்வி எழுப்பப்படுகின்றது. அதுவும் அமைச்சர், தாம் இணைத் தலைவராக இருக்கும் மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தை கூட்டியிருக்கும் சமயத்தில், அதற்குப் போட்டியாக எல்லா (ஐந்து) மாவட்டங்களினதும் இணைத் தலைவர்கள் கூட்டத்தை அழைத்து, ஆளுநர் தரப்பு குழப்பத்தை ஏற்படுத்தியதால் அமைச்சர் தரப்பு செமக் கடுப்பில் இருக்கின்றது.

ஆளுநர் அழைத்த கூட்டத்துக்கு எந்த இணைத் தலைவரும் போகவில்லை.

அதிகாரிகளே இங்கு சிலரும், அங்கு சிலருமாக தலையைக் காட்டியிருக்கின்றார்கள்.

அப்படி முடிவெடுத்தமைக்காக எந்த அதிகாரி, யாரிடம் வாங்கிக் கட்டப்போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

★ ★ ★

லிட்ரோ காஸ் நிறுவத்தின் தலைவர் நியமனத்தில் நடந்த இழுபறி அண்ணன் – தம்பி சர்ச்சையை வெளிப்படுத்துவதாக அரச உள்வட்டாரங்கள் கூறுகின்றன.

லிட்ரோ காஸ் நிறுவனத்தில் தலைவர் தேஷர ரணசிங்க. கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதில் பின்புலத்தில் செயற்பட்ட 'வியத்மக' அமைப்பின் தீவிர செயற்பாட்டாளர்.

காஸ் சிலிண்டர் சிக்கல்களை அடுத்து நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடந்த வாரம் அவரைத் திடீரென பதவி நீக்கம் செய்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிர்வாகச் செயலாளர்களில் ஒருவரான தன்னுடைய ஆள் ரேணுக பெரேர என்பவரை அந்த இடத்துக்கு அவர் நியமித்தார்.

ஆனால் சில மணி நேரங்களிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலையிட்டார். தம்பியாரான நிதியமைச்சரின் முடிவை மாற்றி அமைத்தார். பழையவரையே தலைமைப் பதவியில் மீண்டும் நியமிக்கச் செய்தார்.

அண்ணன் – தம்பி உரசுப்பாட்டில் ஒரு தெறிப்பு இது என்று கூறப்படுகின்றது.

இதற்கிடையில் –

மார்ச் மாதத்தில் தொடங்கி ஏப்ரல் மாதம் வரை நீடிக்கப் போகும் ஐ.நா. மனிதஉரிமைகள்கவுன்ஸிலின்ஜெனிவா கூட்டத் தொடரில் மேற்குலகின் அழுத்தம் இலங்கைக்கு எதிராகக் கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகையில், அதை சமாளிப்பதற்கான முன்னெடுப்புகளிலும் கோட்டா நிர்வாகம் ஈடுபட்டிருப்பதாக உள்வீட்டு வட்டாரங்களில் செய்திகள் கசிந்தன.

அதில் முக்கியமான ஒன்று, ஜெனீவா கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நேரடிப் பேச்சுக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாக ஆரம்பித்திருக்கின்றார் என்று காட்டுவது எனக் கூறப்பட்டது.

அத்தகைய பேச்சு ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம், இலங்கை இனப்பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்பட்ட இருதரப்புகளும் தமக்குள் பேசித் தீர்க்க முனைவதால், அதற்கு இடமளித்து, ஜெனிவா முடிவுகளைத் தள்ளிப் போட வைக்க வேண்டும் என்றும் கருத்து நிலைப்பாட்டை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய – கூட்டமைப்பு நேரடிப் பேச்சு முயற்சியில் இந்தியப் பக்கத்தையும் ஏதேனும் வகையில் சம்பந்தப்பட வைப்பதன் மூலம் அப்பேச்சு குறித்து ஜெனிவா மட்டத்தில் ஒரு நம்பகத்தன்மையைப் பெயருக்காவது ஏற்படுத்த முடியுமா என்பது குறித்தும் கொழும்பு ஆராய்வதாக செய்திகள் கசிகின்றன.

இன்னும் சில நாள்களில் அல்லது வாரங்களில் நிலைமை வெளிக்கும் என எதிர்பார்க்கலாம்.

– மின்னல் –

## அமைச்சரவை மறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்தன மற்றும் விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரை இவ்வாறு ஏமாற்றத்தில் இருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இவர்கள் இருவரும் தமக்கு வேறு அமைச்சுக்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர் எனப் பேசப்படுகின்றது.

அமைச்சு ஒன்றை மாற்றும்போது கவனத்தில்கொள்ள வேண்டிய விடங்களைப் பந்துல குணவர்தன விவரித்திருந்தார்.

ஓர் அமைச்சர் தற்போது வகித்து வரும் அமைச்சு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படவில்லை என்றால், அவருக்கு வேறு ஒரு அமைச்சுப் பதவியை வழங்க வேண்டும் எனவும், அமைச்சர் ஒருவர் மோசடியாக நடந்துகொண்டால் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் எனவும் பந்துல குறிப்பிட்டிருந்தார்.

எனினும், ஓர் அமைச்சர் தனக்கு வழங்கிய அமைச்சுப் பதவியில் வெற்றிகரமாகச் செயற்படவில்லை என்பதால், அவருக்கு வேறு ஓர் அமைச்சுப் பதவியை வழங்கும்போது, அவர் எப்படி வெற்றிகரமாகச் செயற்பட முடியும் என்பதை பந்துல குணவர்தன விளக்கவில்லை.

அதேவேளை, தான் வகிக்கும் கமத்தொழில் அமைச்சர் பதவி காரணமாக 35 ஆண்டுகளாகத் தான் உருவாக்கிய அரசியல் விம்பம் அழிந்து போயுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக பந்துல குணவர்தனவும், சேதனப் பசளை பிரச்சினை காரணமாக மஹிந்தானந்த அளுத்கமகேவும் மக்களின் கடும் விமர்சனங்களுக்கும் நகைப்புக் கும் உள்ளாகியுள்ளனர்.

## தமிழர் நல்வாழ்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசின் நிதி உதவியின் ஊடாக இலங்கையில் மலையகப் பகுதிகளில் கட்டி அமைக்கப்பட்ட இந்திய வீடமைப்பு வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பூரணப்படுத்தி அதனைப் பயனாளிகளுக்குக் கையளிப்பதற்கான திறப்பு வழங்கும் வைபவம் நேற்று நடைபெற்றது.

கொட்டகலை சீ.எல்.எவ். வளாகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் இந்த வைபவம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலும், இந்தியாவிலும் மாடுகள் தெய்வங்களாகப் பார்க்கப்படுகின்றன. பொங்கல் என்பது சூரியனுக்கு நன்றி செலுத்துவதாகும். காரணம் சூரியனே எமது வாழ்க்கைக்கு உதவியளிக்கின்றது.

அதற்கும் மேலதிகமாக திருவள்ளுவர் நாளும் இன்றாகும். வள்ளுவர் பெருமான் உலகுக்கு நல்ல பல நெறிகளை தந்துள்ளார் என்பதை மறக்க கூடாது.

இன்று மலையகத்தை வழிநடத்துபவர்களாக ஜீவனும் தொண்டமானும் செந்தில் தொண்டமானும் உள்ளனர்.

மலையகத்தில் இந்திய உதவியின் கீழ் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்திய வீட்டுத்திட்டங்கள் சில நிறைவடையும் நிலையில் உள்ளன.

இலங்கை மக்களின் தேவையறிந்து இந்தியா செயற்படுகின்றது. இதன்மூலம் இந்திய – இலங்கை உறவு சக்திமிக்கதாய் மாறுகின்றது.

எதிர்காலத்தில் மலையகத்தில் பல வீட்டுத் திட்டங்ளை முன்னெடுப்போம். மலையக நண்பர்களின் வீடுக்கான கனவு நனவாகும்.

அனைத்து தமிழ் மக்களுக்கும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள் – என்றார்.










# கல்வியியற் கல்லூரிகளை உடன் திறக்குமாறு பணிப்பு

கொழும்பு, ஜன. 16

கல்வியியற் கல்லூரிகளை நேற்று முதல் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொவிட் தொற்றுநோய் காரணமாக மூடப்பட்ட கல்லூரிகள், தனிமைப்படுத்தல் மற்றும் கொவிட் சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் திறக்கப்படும் மேற்படி கல்லூரிகளின் கல்வி நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசியரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
திருமண சேவை
இல.266, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

| மணமகள் விவரம் | மணமகன் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 14.01.1996 மதம் - இந்து<br>ஜாதி -Vபெண் நட்சத்திரம் - சித்திரை (3)<br>கி.பா - 35 செவ் - 1 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor, Eng. UK, PR மணமகன் | பிறந்த திகதி -03.07.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - விசாகம் 2<br>கி.பா - 37 செவ் 7 இல்<br>தகைமை - BSc. Chartered Eng. தொழில் - Company Colombo எதிர்பார்ப்பு - Eng., Doctor மணமகள் |
| பிறந்த திகதி - 08.12.1990 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - 24 செவ் 8 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor, Eng. மணமகன் | பிறந்த திகதி - 10.06.1991 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - பரணி 3<br>கி.பா - 28 செவ் 4 இல்<br>தகைமை - IT தொழில் - IT Master<br>எதிர்பார்ப்பு - அரசசேவை காரைநகர் மணமகள் |
| பிறந்த திகதி - 25.04.1988 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - ஆயிலியம்<br>கி.பா - 69 செவ் 7 இல்<br>தகைமை - BCom தொழில் - Post Master<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன் | பிறந்த திகதி -30.04.1992 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி<br>கி.பா - 33 செவ் 2 இல்<br>தகைமை - Electronic Eng. தொழில் - விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் |
| பிறந்த திகதி - 20.05.1990 மதம் - இந்து<br>ஜாதி -V சைவம் நட்சத்திரம் - உத்தரட்டாதி 6<br>கி.பா - 35 செவ் 2 இல்<br>தகைமை - G.C.E.A/L தொழில் - Student<br>எதிர்பார்ப்பு - அரச சேவை சைவ மணமகன் | பிறந்த திகதி - 12.04.1981 மதம் - இந்து<br>ஜாதி -P ஆண் நட்சத்திரம் - பூசம்<br>கி.பா - 61 செவ் / சூரி 7 இல்<br>தகைமை - BA தொழில் - DO அரசசேவை<br>எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகள் |
| பிறந்த திகதி - 23.03.1993 மதம் - இந்து<br>ஜாதி -V சைவம் நட்சத்திரம் - பூரட்டாதி<br>கி.பா - 18 செவ் - 12 இல்<br>தகைமை - கல்வியியற்கல்லூரி தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு -உள்நாடு, வெளிநாடு PR மணமகன் | பிறந்த திகதி - 25.03.1988 மதம் - இந்து<br>ஜாதி -K பகுதி ஆண் நட்சத்திரம் - திருவாதிரை<br>கி.பா - 59 செவ் 8 இல்<br>தகைமை - G.C.E .A/L தொழில் -France PR<br>எதிர்பார்ப்பு - ஐரோப்பா மணமகள் PRஉள்ளவர். |
| பிறந்த திகதி - 14.05.1994 மதம் - இந்து<br>ஜாதி K பகுதி நட்சத்திரம் - மிருகசீரிடம்<br>கி.பா - 42 செவ் 12 இல்<br>தகைமை - BA Hons தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன் | பிறந்த திகதி - 02.08.1987 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை<br>கி.பா - 38 செவ்/சூரி 4 இல் தகைமை - G.E.C. A/L<br>தொழில் - நிறுவன உரிமையாளர் எதிர்பார்ப்பு - G.E.C. A/L படித்த மணமகள் (சூரி/ செவ். இருந்தால் நன்று) |
| பிறந்த திகதி - 28.08.1994 மதம் - இந்து<br>ஜாதி Visvakulam நட்சத்திரம் - பரணி 2<br>கி.பா - 32 செவ் 3 இல்<br>தகைமை - BSc தொழில் - அரசசேவை<br>எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன் | பிறந்த திகதி - 20.11.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மூலம்<br>கி.பா - 44 செவ் 6 இல் தகைமை - G.E.C. A/L<br>தொழில் - Swiss PR எதிர்பார்ப்பு - படித்தமணமகள் (Swiss + இலங்கை) இலங்கை வருவார் |
| பிறந்த திகதி - 21.09.1994 மதம் - இந்து<br>ஜாதி P பகுதி பெண் நட்சத்திரம் - உத்தரட்டாதி<br>கி.பா - 31 செவ் - 12 இல்<br>தகைமை - BA Geography Special தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - அரசசேவை வெளிநாடு மணமகன் | பிறந்த திகதி - 30.06.1989 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - பூராடம்<br>கி.பா - 08 செவ் 2 இல்<br>தகைமை - Food and Nutrition தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள் |

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzelan- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.
காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## நீர் விநியோகத்தை துண்டிக்க சென்ற அதிகாரிகள் மீது கோரத் தாக்குதல்!

கட்டணம் செலுத்தாததால் நீர் விநியோகத்தைத் துண்டிக்க வீட்டுக்குச் சென்ற அதிகாரிகளை வீட்டில் இருந்த பெண் ஒருவர் தாக்கிய சம்பம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் கந்தளாய், பெரமடுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலேயே இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

நீர் கட்டணம் செலுத்தாமையால் குழநீர் விநியோகத்தை துண்டிப்பதற்கு அதிகாரிகள் குறித்த வீட்டுக்குச் சென்றிருந்தனர்.

இவ்வாறு அதிகாரிகள் வரும்போது வீட்டில் இருந்த பெண் அவர்களைத் தாக்கியுள்ளார். குறித்த பெண் அதிகாரிகளை தாக்குவதையும் தடுப்பதையும் அதிகாரிகளில் ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்துள்ளார்.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
ஆகாஸ் நகைமாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 - (ஆகாஸ்)

Northern PC Park
Benq
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

## புதிய மாணவர் அனுமதி -2022

வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம் சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை 2022 ஆம் கல்வியாண்டில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும், கல்விக்கான அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். மேலும், மேலதிக வகுப்புக்கள், கணனிக் கற்கைகள், கவின் கலை வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், சுகாதார, மருத்துவ வசதிகள் விளையாட்டு வசதிகள் என்பனவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலைமைகளையுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 15.02.2022. இற்குப் பிந்தாமல் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழி சமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு** : விடுதியில் தங்கியிருக்கும் பிள்ளைகளைப் பெற்றோர்கள் சந்திப்பதற்கோ அல்லது விடுமுறை நாள்களில் வீடு சென்றுவருவதற்கோ அனுமதி வழங்கப்படும்.

தொடர்பு :
தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
தொலைபேசி : 021 224 0146, 076 8286331
(WhatsApp, Viber.)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொரோனாவை வெல்வோம்

கொரோனாப் பேரிடரை எதிர்கொள்ளும் மார்க்கம் குறத்து உலகம் எங்கும் இருக்கும் சகல ஊடகங்களும் பெரியளவில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து விட்டன. ஆனால் நமது மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு ஏற்படவில்லை என்ற களயதார்த்தம்தான் பெரும் விசனத்துக்குரியதாக இருக்கின்றது.

கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் அரசுத் தலைமை சற்று மெத்தனம் காட்டியமையால் அது சற்றுத் தாமதமாகவே நாட்டுக்குக் கிடைத்தது. ஆனால், குறுகிய காலத்துக்குள் பெருமளவு தடுப்பூசிகளை விரைந்து சுவீகரித்து, அவற்றை நாட்டு மக்களுக்குத் தாமதமின்றி அளிப்பதிலும் அரசும் அதன் சுகாதார மருத்துவக் கட்டமைப்பு இயந்திரங்களும் பாராட்டத்தக்க பெறுபேறை எட்டியிருக்கின்றன என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். அதனால் நாடும் மக்களும் கொரோனா நுண்ணுயிரியின் கோரப்பிடியில் இருந்து ஓரளவு மீண்டுள்ளனர் என்பதும் உண்மையே.

ஆனால் கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் நாட்டு மக்கள் இப்போது கொஞ்சம் மெத்தனமாக நடக்க முற்பட்டிருக்கின்றனர், பொறுப்பற்றுச் செயற்படுகின்றனர் என்ற கவலை – விசனம் – மருத்துவ சுகாதார வட்டாரங்களால் தெரிவிக்கப்படுகின்றது. படிப்பறிவு விகிதம் கூடிய இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய மெத்தனம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

மூன்றாவது டோஸ் தடுப்பூசி – பூஸ்டர்(ஊக்கி) தடுப்பூசி – செலுத்துவது கட்டாயம் என்று மருத்துவ – சுகாதார வட்டாரங்கள் சுட்டிக்காட்டி அது பெரியவில் பிரசாரப் படுத்தப்பட்டு மக்களுக்கு களநிலைமை தெளிவாக எடுத்துரைக்கப்பட்ட பின்னரும், இந்த மூன்றாவது தடுப்பூசியைப் பெற வேண்டிய தகுதியுள்ள ஒரு கோடிப் பேர் இன்னமும் அதனை ஏற்றிக் கொள்ளவில்லை.

இந்தத் தடுப்பூசியை ஏற்றுவதற்குத் தேவையான தடுப்பூசிகளைப் போதியளவில் கையிருப்பில் வைத்தபடி, தடுப்பூசி ஏற்றும் மையங்களைத் திறந்து வைத்தவாறு, அதிகாரிகள் காத்திருந்தும் மக்கள் சிரத்தை காட்டவில்லை என்றால், கொரோனாப் பேரிடரை – இந்த நுண்ணுயிரியின் கொடூரத்தை –நாடு எப்படி வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்?

தடுப்பூசியின் முதல் இரண்டு டோஸையும் மக்களுக்குத் தாராளமாக விநியோகித்தமையை அடுத்து கொரோனாத் தொற்றால் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட வேண்டியோரின் எண்ணிக்கை ஐம்பது வீதத்தால் வீழ்ச்சியடைந்தது என்றும் –

மூன்றாவது டோஸ் கொடுக்கத் தொடங்கியதும் அது தொண்ணூறு வீதத்தால் வீழ்ச்சியடைந்தது என்றும் –

மருத்துவப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

மூன்றாவது டோஸ் தடுப்பூசி ஏற்றுவதில் மக்கள் மெத்தனம் காட்ட – இரண்டாவது டோஸ் தடுப்பூசியின் வலிமைக் காலம் மெல்ல மெல்லக் கடக்க – இப்போது மீண்டும் கொரோனாத் தொற்று நோய்க்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவோர் எண்ணிக்கை மெல்ல மெல்ல அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கொரோனா அச்சுறுத்தலுக்குப் பயந்து முதல் இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்வதற்கு விழுந்தடித்த பொதுமக்களுக்கு இப்போது பயம் விட்டுப் போய் விட்டது போலும்.

உயிராபத்தையும், மோசமான பாதிப்பையும் ஏற்படுத்தாத – அதேநேரம் பரவும் வீரியம் அதிகம் கொண்ட – கொரோனாவின் ஒரு திரிவான ஒமிக்ரோன் வைரஸ் தொற்று தன் கைவரிசையை இலங்கையில் காட்டத் தொடங்கிவிட்டது. மோசமாகப் பரவி வரும் அதன் பரவலைக் கட்டுப்படுத்தி நிலைமையை ஒழுங்குக்குள் கொண்டு வருவதற்கு இந்த மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி டோஸ் அவசியம். அதனால் தவறாமல் அதனைப் பெற்றுக்கொள்வோம்.

# விமல் வீரவன்ஸ ஏற்பாட்டில் வவுனியாவில் பொங்கல் விழா





அமைச்சர் விமல் வீரவன்ஸவின் திட்டமிடலுக்கு அமைய வவுனியாவில் பொங்கல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.


அமைச்சரின் வன்னி மாவட்ட இணைப்பு செயலாளர் ம.புஸ்பதேவாவின் வழிகாட்டலில் வவுனியா பழைய பஸ் நிலையத்தில் குறித்த பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

இயற்கை பசளை இட்டு விளைவிக்கப்பட்ட தமிழ் மக்களின் பாரம்பரிய பச்சைப் பெருமாள் நெல்லில் இருந்து பெறப்பட்ட அரிசியில் பொங்கல் நடைபெற்றது.

பௌத்த, இந்து, கத்தோலிக்க மதத் தலைவர்கள் கலந்துகொண்டு பொங்கல் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதில், நகரசபை தலைவர் இ.கௌதமன், உப நகரபிதா சு.குமாரசாமி, வர்த்தக சங்க செயலாளர் அம்பிகைபாகன், மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் சிறிதரன், வவுனியா பொலிஸ் நிலைய பதில் பொறுபதிகாரி அழகியவண்ண, வடமாகாண விமல் அணி தலைவர் சி.ஜோதிக்குமரன், விமல் அணி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பொதுப்பாதுகாப்பு அமைச்சரை கடுமையாகச் சாடிய கர்தினால்!



பொதுப்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவை, கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கடுமையாக சாடியுள்ளார்.

பொரளை தேவாலயமொன்றில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் கர்தினால், தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலிஸார் பொதுவாகத் தங்களுக்கு எது தேவையானதையே வாக்கு மூலமாகப் பதிவு செய்து கொள்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பது அமைச்சரின் எதிர்வினையின் ஊடாகத் தெளிவாகத் தெரிகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் நேர்மையானவர் என்றால் தாம் முன்வைத்த சாட்சிகள் தொடர்பாக விசாரணை செய்திருக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மக்களின் வாழ்க்கையுடன் விளையாடக் கூடாது எனவும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயமொன்றை நிரூபிப்பதற்கு நாம் இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் அமைச்சர் எமக்குக் கூறும் கதைகளைக்கொண்டை கட்டிய சீனர்களிடம் சொல்லட்டும், இவ்வாறான அமைச்சர்களிடம் நீதி நேர்மையை எதிர்பார்க்க முடியாது என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் 150 பேருக்கு மூக்குக் கண்ணாடி!







கொமர்சல் வங்கியின் நிர்வாக இயக்குநரும் மோதர மட்டக்குழி லயன்ஸ் கழகத்தின் உறுப்பினருமான லயன் எஸ்.ரெங்கநாதனின் அனுசரணையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் நேற்;று (சனிக்கிழமை) 150 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கிவைக்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செல்வராகினி தலைமையில் தெல்லிப்பழை, மாவிட்டபுரம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்ற பொங்கல் விழாவும் அதனைத் தொடர்ந்து மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்காபுரம், தந்தை செல்வாபுரம், மாவிட்டபுரம் தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய 150 பயனாளிகள் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்று பயன்பெற்றனர்.

கைதடி லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் மகேந்திரன் - லயன் நிர்மலா தம்பதிகள் இந்த மூக்குக் கண்ணாடிகளுக்குரிய பயனாளிகளைப் பரிசோதித்து அவர்களுக்குரிய கண்ணாடிகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளரும் ஆளுநர் சபையின் பிரதம மாவட்ட இணைப்பாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன், வலயத் தலைவரும் வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் பா.மரியதாஸ், சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் சிவகுமார், லயன் விசாலினி, லயன் க.தினேஸ், லயன் தே.அகிலன் ஆகியோர் கலந்து மூக்குக் கண்ணாடிகளை வழங்கிவைத்தனர்.

மோதர மட்டக்குளி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் எஸ்.ரெங்கநாதன் வடக்கிலுள்ள அனைத்து லயன்ஸ் கழகங்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் தலா 100 மூக்குக் கண்ணாடிகளை வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.







யாழ்.குடாநாட்டில் தைப்பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழிலுள்ள ஆலயங்களில் அதிகாலை முதல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. வீடுகளிலும்,சமய சமூகப் பொது நிறுவனங்களிலும் இடம்பெற்ற பொங்கல் கொண்டாட்டங்களில் மக்கள் உற்சாகத்துடன் பங்குபற்றினர்.

கண்டி சிறி செய்தவிநாயகர் கோவிலில் தைப்பொங்கல் விசேட பொங்கல் வழிபாடுகள் ஆலைய அறங்காவலர் கிருஷ்ணமூர்த்தி கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றன.



யாழ்ப்பாணம் நல்லூரில் கண்டிய நடனத்துடன் பொங்கல்விழா நடத்தப்பட்டது . சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பும் யாழ். நண்பர்கள் அமைப்பும் இணைந்து இந்த பொங்கல் விழாவை நடத்தினர் .

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தைத்திருநாளை முன்னிட்டு விசேட பொங்கல் நிகழ்வும் விசேட பூஜையும் நடைபெற்றன.







இலங்கை இளையோர் விழிப்புணர்வு இயக்கத்தினர் சாவகச்சேரி பகுதியில் முன்னேறிவரும் கிராமமான நுணாவில் மேற்கு அடைப்பு வயல் கிராமத்தில் தைப்பொங்கல் அன்று மிகவும் பெறுமதியான புத்தகங்கள் மற்றும் அலுமாரியுடன் ஒரு நூலகத்தை அமைத்து வழங்கியுள்ளனர்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிராம அலுவலர், நவக்கிரி உலக மக்கள் ஒன்றியம் கனடா பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பித்து இருந்தனர்.

நூலகக் கட்டடத்தை அமைப்பதற்கு வைத்திய கலாநிதி திருமதி. நீலானி நக்கீரன் அவர்களும் பெறுமதியான புத்தகங்கள் மற்றும் அலுமாரியை திருமதி. விஜிதா மயில்வாகனம், திருமதி.ரஞ்சினி பரமசிவம், வைத்திய கலாநிதி திருமதி.நீலானி நக்கீரன், செல்வி. ஞானகி குகனேந்திரன், ஜீவராணி சிவப்பிரியன் மற்றும் திருமதி சீலன் ஆகியோர் நிதி வழங்கி உதவியிருந்தனர்.







‘எதிர்பாராததை எதிர்பாருங்கள்’ என்ற தொனிப்பொருளுக்கு அருந்ததியே எடுத்துகாட்டு. திருமணங்கள் என்பது வாழ்க்கை நெறியில் இன்றியமையாதவை. அத்தகைய திருமணங்களுக்கு இருமனங்களை இணைத்து புது வாழ்க்கையை அமைத்து கொடுக்கிறது அருந்ததி இணைய திருமண சேவை. இதுவரையில் பல பிரம்மாண்ட நிகழ்வுகளை கடந்த காலம் முதலிருந்தே அருந்ததி அரங்கேற்றிவருகிறது. அவற்றுள் பிரம்மாண்டமான நிகழ்வொன்றே மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார காட்சி. பிரம்மாண்டத்தின் படைப்பாக அனைவர் மனதையும் வென்ற இந்த நிகழ்வு வெற்றிகரமாக 2022 ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பாரியார் மற்றும் இலங்கையின் முதல் பெண்மனி சிரந்தி ராஜபக்ஷ அவர்கள் இவ் விழாவிற்கு சிறப்பு அதிதியாக வருகை தந்து சிறப்பித்தார். மேலும் பல பிரதம அதிதிகளும் கலந்து இந் நிகழ்வை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. நாடு முழுவதிலுமிருந்து வருகைத்தந்த 50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களின் பங்கேற்புடன் வெகுவிமர்சையாக இந் நிகழ்வு நடைபெற்றது. அவர்களது ஒப்பனைகளையும், அலங்காரங்களையும் ஏற்று நலினமும்,அழகையும் தாங்கி பார்வையாளர்களை கவர்ந்த அழகிகளும் இவ் விழாவிற்கு கூடுதல் மெருகூட்டினர்.

அருந்ததியின் கெட்டி மேளம் தொலைக்காட்சி நிகழ்வின் உத்தியோகப் பூர்வ அறிமுகப்பாடல் வெளியீட்டு விழாவும் இந் நிகழ்வில் அரங்கேறியது. அத்துடன் அருந்ததியின் 25 வது திருமண பருவ இதழும் சிறப்பு அதிதியினால் வெளியிடப்பட்டது. இவ் விழாவில் கலந்து சிறப்பித்த சிறப்பு அதிதி அவர்களுக்கு விடே கௌரவம் வழங்கப்பட்டது. அத்தேடு பூரண ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இம் மாற்றுமோதிர மணப்பெண் அலங்கார காட்சியில் பங்கேற்ற அனைத்து அழகுக்கலை நிபுணர்களுக்கும் விருதுகளும் பாராட்டுகளும் வழங்கப்பட்டன.


மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்ற அருந்ததியின் மாற்றுமோதிர நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற்று முடிவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய அனுசரனையாளர்களை இவ்விடத்தில் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம். இந் நிகழ்வின் பிரதான அனுசரனையாளர்களாக Sri Vijayas ஆடையகம் மற்றும் Joy Glorious நகையகமும் சாரி ப்ளவுஸ் மற்றும் ஆரி வேலைப்பாடுகளுக்காக The Beads அலங்கார வேலைப்பாடுகளுக்காக Sahana Flowers மற்றும் புகைப்பட ஒழுங்கமைப்புகளுக்கு 3ADS Photographyயும் இந் நிகழ்விற்கு உத்தியோகப்பூர்வ அனுசரனையாளர்களாக கரம் கோர்த்து அவர்களின் சிறந்த ஒத்துழைப்பை வழங்கினர். மேலும் வீரகேசரி பத்திரிகை மற்றும் கப்பிடல் TV & FM ஊடக அனுசரணையாளர்களாக கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற பங்களிப்பு செய்த திருமண சேவை வழங்குனர்கள், அழகுக்கலை நிபுணர்கள், நலன் விரும்பிகள், வாடிக்கையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் அருந்ததியின் ஊழியர்கள் என அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறோம்.

மீண்டுமொரு பிரம்மாண்ட மாற்று மோதிரத்தை அரங்கேற்றும் வரை இணைந்திருங்கள் அருந்ததியோடு....!







காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# எழில் கதிர்





யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிகையலங்காரப் பராமரிப்பு, அழகுக்கலை, ஆடை வடிவமைப்புக் கலைஞர் சிவஸ்திகா பாலேந்திரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

## சிறப்பு நேர்காணல்

**1) முன்னெப்போதுமில்லாத அளவுக்கு தற்கால சமுகத் தில் முடியுதிர்வு தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. புள்ளிவிபரங்களின்படி 25 சதவீதமான ஆண்கள் தமது 21 வயதிற்கு முன்னதாகவே முடியு திர்வுப் பிரச்சனையால் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். மேலும் 45 சதவீதமான பெண்கள் தமது வாழ்வின் ஏதாவது ஒரு புள்ளியில் முடி உதிர்வுப் பிரச்சனையை சந்திக்கிறார்கள் இதற்கான காரணங்களாக நீங்கள் கருதுபவை?**

முதற்காரணமானது வெப்பம், தலைமுடியின் வெப்பத்தை அதிகரிக்கும் எந்த ஒரு செயற்பாடும் முடி உதிர்வை அதிகப்படுத்தும். உதாரணமாக வெந்நீரில் தலைக்கு நீராடுதல், அளவுக்கு அதிகமான hair dryer உப யோகம், ஸ்ட்ரெயிட்னிங் செய்தல் ஆகியன கூந்தலை மிகவும் பலவீனப்படுத்தி முடி உதிர்விற்கு வழிகோலும் அதிக இரசாயனங்கள் - குறிப்பாக சோடியம் சல்பெட் உள்ளடக்கிய ஷாம்போக்களின் உபயோகம் செயற்கையான கூந்தல் அழகு சாதனப் பொருள்களின் அதீத பாவனை, முடி ஈரமாக இருக்கும் போது தலை சீவுதல் . இவைகள் மட்டுமன்றி முறையற்ற உணவுப் பழக்கம், தேவையான அளவுக்கு தண்ணீர் அருந்தாமை ஆகியனவும் முடி உதிர்விற்கு காரணமாக அமையும்.

**2) ஒரு சிகை அலங்கார மற்றும் அழகுக்கலை துறை சார்ந்த பெண்மணியாக நீங்கள் முடியுதிர்வுப் பிரச்சினைக்கு முன்வைக்கக்கூடிய தீர்வுகள் எத்தகையவை?**

அவ்வாறு ஒரே விடயம் அனைவருக்கும் பொதுவான தீர்வாக அமையாது. ஏனெனில் கூந்தலின் தன்மையானது ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படும். கூந்தலைப் பொதுவாக பின்வரும் வகைகளுக்குள் உள்ளடக்கலாம்.

சாதாரண கூந்தல்: இந்த வகைக் கூந்தல் அதிக எண்ணெய்த்தன்மையோ வறண்ட தன்மையோ இன்றி நன்கு அடர்தியானதாகவும் தூய்மையானதாகவும் இருக்கும். பொதுவாக நன்கு பராமரிக்கப்படும் ஆரோக்கியமான கூந்தல் இவ்வகைக்குள் அடங்கும். இவற்றை சாதாரணமாக எவ்வாறு பராமரிக்கிறார்களோ அவ்வாறு ஆரோக்கியமாகவே பேணுதல் போதுமானது.

வறண்ட கூந்தல்:- இந்த வகைக் கூந்தலின் முனைகள் ஒழுங்கின்றி காணப்படும். பேச்சு வழக்கில் கூறுவதாயின் கணை வெடித்துக் காணப்படும். கூந்தலின் நிறம் மங்கல வாகவோ அல்லது பழுப்பு, செம்பழுப்பு நிறங்களிலோ காணப்படும். இவ்வகைத் தலைமுடிகளின் மயிர்கால்கள் வறண்டதாகக் காணப்படும். இவை இயற்கையாக அமைந்ததாகவோ அல்லது மோசமான பராமரிப்பின் விளைவுகளாகவோ இருக்கலாம். இத்தகைய கூந்தலைப் பராமரிப்பது மிகவும் சிரமமானது ஆகும். இத்தகைய கூந்தல் உள்ளவர்கள் அடிக்கடி எண்ணெய் மசாஜ் செய்வதுடன் வாரம் ஒருமுறையாவது எண்ணெய் வைத்து சீயக்காய் பயன்படுத்தித் தலைக்கு நீராடுதல் மிகுந்த பலனளிக்கும். மேலும் இயற்கையான கண்டிஷனர்களைப் பயன்படுத்தி கூந்தலை வரட்சியிலிருந்து பாதுகாக்கலாம்.

எண்ணெய்த்தன்மையான கூந்தல்:- இத்தகைய கூந்தல் அளவுக்கு அதிகமாக எண்ணெய்ப் பசையாக இருக்கும். முடி மிகவும் மெலிந்து காணப்படும். இந்தக் கூந்தலில் உள்ள எண்ணெய்ப் பசைகள் வெளியே உள்ள தூசுகளைக் கவரும் தன்மை கொண்டது. இதனால் கிருமித் தொற்று ஏற்படவும் வாய்ப்பு உண்டு. அத்துடன் பொடுகும் உண்டாகும். இவ்வகைக் கூந்தலை வாரத்தில் 3 முறை ஷம்பே பாவித்து அலசுவதன் மூலம் எண்ணெய்ப் பசையை நீக்கி விடலாம். அத்தோடு எப்போதும் சுத்தமாக வைத்திருந்தால் பொடுகிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

பலவீனமான கூந்தல்:- நேரம் மாறி மாறி உணவு உண்பது, கடினமான நீரை உபயோகிப்பது, தலை முடியை ப்ளீச் செய்வது, வெயிலில் அதிகம் அலைவது, போக்கான உணவின்மை, போதியளவான தூக்கமின்மை, வெந்நீரில் தலைக்கு நீராடுதல் உள்ளிட்ட பல காரணங்களால் கூந்தல் பலவீனமாகிவிடும். கூந்தலின் மற்ற பகுதிகளும் உடைந்து உதிர ஆரம்பிக்கும். இத்தகைய கூந்தல் உள்ளவர்கள் அதிக கவனத்துடன் கூந்தலைப் பராமரிப்பது நல்லது. இவர்கள் தலைகுளித்தவுடன் ஈரத் தலையைவாருதல்கூடாது. எண்ணெய்வைத்தவுடனும் வாராக் கூடாது(கூந்தலின் மேற்பகுதி பலவீனமாக இருப்பதுடன் முடி அதிகமாகக் கொட்டும்). இக் கூந்தலுக்கு அடிக்கடி எண்ணெய் பூசி மசாஜ் செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

**3) இயற்கையான வழிமுறைகளே கூந்தலின் ஆரோக்கியத்தைப் பேணும் என்பதை அனைவரும் அறிந்திருந்த போதிலும் பழைய முறைப்படி எண்ணெய் வைத்து வெளியே செல்வது தற்போது யாராலும் பெரிதாக விரும்பப்படாத ஒன்றாக மாறியுள்ளது. அதற்கு பதிலாகவே கண்டினர்களின் பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது. இதற்குத் தங்களிடம் இயற்கையான தீர்வுகள் உள்ளதா?**

இயற்கையாகவே கண்டினர்களாக உபயோகிக்கக் கூடிய பொருள்கள் பல உள்ளன. இவற்றை உரிய முறையில் உபயோகிப்பதன் மூலம் செயற்கையான கண்டிஷனர்கள் தரும் அதே அழகையும் அத்துடன் மேலதிகமாக கூந்தல் ஆரோக்கியத்தையும் பேண முடியும்.

செவ்வரத்தம் பூ, செவ்வரத்தம் இலை என்பவற்றை விழுதாக அரைத்து தேவையான அளவு தேசிக்காய் சாறும், சிறிதளவு பால் அல்லது தயிர் என்பவற்றையும் கலந்து தலை முடி மற்றும் தலை பூராகவும் பூசி pack போட்ட பின் 8 10 நிமிடம் ஊற வைத்து முழுகி வரவும்.

முதல் நாள் இரவு தேவையான அளவு தயிரில் 1 மேசைக்கரண்டி வெந்தயப் பவுடர் போட்டு ஊற விட வேண்டும். மறு நாள் இதைத் தலை மற்றும் முடி என்பவற்றுக்கு பேக் போட்டு 8 - 10 நிமிடம் ஊற வைத்த பின் தலைக்கு நீராடலாம்.

ஷாம்பே அல்லது சீயக்காய் வைத்து தலை தோய்ந்த பின் தேங்காய்ப்பாலில் போதியளவு எடுத்து 2 நிமிடம் நன்றாக மசாஜ் செய்து முழுக வேண்டும்.

சோற்றுக்கற்றாழை ஜெல்லை எடுத்து முடிக்குப் பூசி 8 - 10 நிமிடம் ஊற வைத்த பின் நீராடலாம்.

இம் முறைகளை இயற்கையான கண்டினர்களாக உபயோகிப்பதன் மூலம் கூந்தலின் அழகையும் ஆரோக்கியத்தையும் ஒரு சேரப் பராமரிக்கலாம்.

**4) இயற்கையான முறையில் முடியை ஸ்ட்ரெயிட்னிங் செய்ய செய்ய இயலுமா?**

ஆம், உறுதியாக இயலும் ஆனால் செயற்கை முறை போன்று உடனடிப் பலன்களை எதிர்பார்க்க இயலாது இருப்பினும் நீண்ட காலத்தில் நிரந்தரப் பலன் நிச்சயம் உண்டு. தேங்காய்ப் பாலை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து அதன் பின் அதனை முடியின் வேர்க்கால் முதல் நுனி முடிவரை பூசி பின் முழு முடியையும் துவாய்த் துண்டால் சுற்றி தலைக்கு குளித்து வருவதால் நீண்ட காலத்தில் நிச்சயம் முடி Straightening செய்தது போலத் தோற்றமளிக்கும்.

**5)இயற்கை முறையிலான கூந்தல் பராமரிப்பில் இளநரைக்கு எவ்விதத்தில் தீர்வு காணலாம்?**

இளநரை என்பது பரம்பரையாக வருகிறது என்பதையும் தாண்டி நம் அன்றாட உணவுப் பழக்கங்களும் அதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கூந்தலின் வளர்ச்சிக்கு மிகத் தேவையான விட்டமின் C நெல்லிக்காயில் காணப்படுகிறது. நெல்லிக்காயை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இளநரை நீங்கி முடி கறுப்பாகும். மேலும் வாரம் ஒரு முறை முளைக்கீரை சாப்பிட்டு வந்தால் இளநரை படிப்படியாக குறையும்.

**6) தற்கால இளைஞர்கள் பலருக்கு இளம் வயதிலேயே வழுக்கை விழும் பிரச்சனை அதிகமாக காணப்படுகிறது. இதற்கு இயற்கை முறையில் நிரந்தரமான தீர்வுகள் உண்டா?**

கீழ்க்காய் நெல்லி வேரை சுத்தம் செய்து சிறு துண்டுகளாக நறுக்கி தேங்காய் எண்ணெய்யில் போட்டுக் காய்ச்சி அதனைத் தொடர்ந்து தலை முடிக்கான எண்ணெய்யாக உபயோகித்து வருவதன் மூலம் வழுக்கைப் பிரச்சினை குறைவதை கண்கூடாக காணலாம். அத்துடன் தேங்காய் எண்ணெய்யுடன் கேரட், எலுமிச்சம் பழச்சாறு கலந்து எண்ணெய்யில் போட்டு காய்ச்சி தலையில் தேய்த்து நீராடினால் வழுக்கை விழுந்த பிரதேசத்தில் முடி வளரும்.

**7) அதிகமாக வெயிலில் அலைவதால் சிலருக்கு முடி செம்பட்டை தன்மையுடன் காணப்படுகிறது. மேலும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பொடுகுப் பிரச்சினைகளால் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். இவற்றிற்கு இயற்கை மருத்துவம் கூறும் தீர்வுகள் யாவை?**

மருதாணி, மரிக்கொழுந்து இலைகளுடன் அவரை இலையையும் சம அளவு கலந்து பூசுவதன் மூலம் முடியின் செம்பட்டை நிறம் நீங்கும்.

பொடுகு உள்ளவர்கள் வேப்பெண்ணை மற்றும் தேசிக்காய் ஆகியவற்றை உபயோகிப்பதன் மூலம் அத் தொல்லையிலிருந்து விடுபடலாம். குப்பை மேனிக் கீரையும் பொடுகுப் பிரச்சனைக்கு நல்ல தீர்வான தொன்றாகும். அத்துடன் பொடுகுத் தலை உள்ளவர்கள் தலைமுடியின் சுகாதாரத்தை நல்ல முறையில் பேணுவதன் மூலம் அப்பிரச்சனையின் தீவிரத்தை குறைக்கலாம்.

**8) நாம் அன்றாடம் காணும் சாதாரண தாவரங்கள், சமையல் பொருள்கள் பல கூந்தலின் ஆரோக்கியத்திற்காக உபயோகிக்கக் கூடியவையாக உள்ளது . அவற்றை தாம் எங்களுடன் பகிர இயலுமா?**

அறுகம் புல், வல்லாரை, கீழ்க்காய் நெல்லி. குப்பை மேனி, அவரைக்கீரை, கறிவேப்பிலை, மருதாணி, கார்போக அரிசி, வெந்தயம், நெல்லிக்காய் ஆகியவை கூந்தலிற்கு மிக்க நலமளிக்கும் இயற்கைப் பொருட்களாகும். இவை கூந்தலின் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான பல சத்துக்களை உள்ளடக்கியது. இவற்றை முடிக்கும் apply செய்யலாம். இவற்றில் உணவாக உள்ளெடுக்கக்கூடிய அறுகம் புல், வல்லாரை, அவரைக்கீரை, கறிவேப்பிலை, வெந்தயம், நெல்லிக்காய் ஆகியவற்றை நாம் உண்ணும் உணவில் பெருமளவு சேர்த்து வந்தாலும் முடி வளர்ச்சிக்கு நல்ல பலனளிக்கும்.

**9) இவற்றை உபயோகித்தும் சிலருக்கு முடி வளர்ச்சியில் மாற்றங்கள் தெரிவதில்லையே அது எதனால் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

வெளிப்புற அழகு சாதனப் பொருள்களை மட்டும் இயற்கையாக மாற்றினால் போதாது. தங்களுடைய உணவுப் பழக்கம் மற்றும் வாழ்க்கை முறையிலும் நல்ல மாற்றத்தை கொண்டு வர வேண்டும். போதியளவு நீர் அருந்துதல், நாளொன்றுக்கு குறைந்தது 8 மணி நேரம் தொடர்ச்சியாக உறங்குதல் மற்றும் வெளியுணவுகளைத் தவிர்த்து வீட்டில் சமைக்கப்படும் உணவுகளையே



நேர்காணல் - விஸ்ணுபிரியா சிறீகாந்தன்

முடிந்தளவு உண்ணுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் வாழ்க்கை முறையிலும் நல்ல மாற்றத்தை கொண்டு வருதல். அவசியமாகும்.

அத்துடன் கலவைகளை மேல் முடிகளுக்கு மட்டும் பூசாமல் நன்றாக மண்டை ஓட்டில் படுமாறு பூசி மசாஜ் செய்ய வேண்டும். எவ்வளவு அதிகமாக நாங்கள் தலைக்கு மசாஜ் செய்கிறோமோ அவ்வளவு அதிகமாக எங்கள் தலையின் இரத்த ஓட்டம் அதிகரித்து முடி ஆரோக்கியமாக வளரும். ஆண்களிற்கு முடி வழுக்கை விழுந்தாலும் தலையின் ஓரங்களில் பெரிதாக முடி கொட்டுவதில்லை. அதற்கான காரணம் பொதுவாக உணவுண்ணும் போது இயற்கையாகவே தலையின் ஓரங்கள் மசாஜ் செய்யப் படுகின்றன. எனவே தலை முடி வளர்ச்சிக்கு மசாஜ் செய்தல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

**10) எல்லோரும் இம்முறைகளை உபயோகிக்கலாமா; அல்லது இவற்றை தவிர்க்க வேண்டியவர்கள் எத்தகையவர்கள்?**

தலையிடி, சைனஸ், ஆஸ்த்துமா உள்ளிட்ட சளிப் பிரச்சினைகள் உள்ளவர்கள் தயிர், வெந்தயம், செவ்வரத்தம் பூ, இலை போன்ற குளிர்ச்சியான பொருள்களை அதிக நேரம் ஊறவிடாது 2/3 நிமிடங்களில் கழுவி விட வேண்டும். அல்லது அதிகமான குளிர்ச்சியான பொருள்களின் பாவனையைத் தவிர்க்கலாம்.

மேலும் எமக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் பொருள்களை தவிர்ப்பதும் நலம் பயக்கும்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# மருத்துவக் கதிர்

## கற்பூரம் உயிரைப் பறிக்குமா?



### அவதானம் தேவை

ஒவ்வொரு குழந்தைப் பிறப்பின் போதும் ஒவ்வொரு பெற்றோரும் தம்மை, தம் குணங்களைப் புதிதாக வடிவமைத்துக் கொள்கின்றனர். இதுவே அக்குழந்தை தவழவோ நடக்கவோ ஆரம்பிக்கும் போது அந்த வீட்டுச் சூழலும் அங்கு பொருள்கள் புழங்கும் விதமும் மீள ஒழுங்கமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

ஏனெனில் நாம் சாதாரணம் எனக் கருதி மேற்கொள்ளும் ஒவ்வொரு செயல்களும் குழந்தைகளின் உயிருக்குப் பேராபத்தை விளைவிப்பதாகக் காணப்படும். அதிலும் குறிப்பாக 1 – 3 வயது வரையுள்ள குழந்தைகள் எதையும் வாயில் போட்டு சுவைத்துப் பார்க்கும் குணம் அதிகமாகக் கொண்டவர்கள். பெற்றோர் எவ்வளவு தூரம் கவனமாக இருந்த போதும் எல்லா விடயங்களிலும் அத்தனை பாதுகாப்பாக இருந்து விட முடியாது. உதாரணமாக நீர்ப் போத்தலை ஒரு மண்ணெண்ணெய்க் கொள்கலனாக மாற்றி வைத்திருத்தல், பூச்சிக் கொல்லி



டொக்டர் - ஆஷா லெனின்
ஹோமியோபதி மருத்துவர்
தமிழ்நாடு, இந்தியா

மருந்துகளை அவர்களின் கைக்கெட்டும் தூரத்தில் வைத்தல் ஆகியன விளையப் போகும் பேரா பத்தை அறியாமல் நாம் செய்யும் தவறுகள் ஆகும்.ஆனால் குழந்தைகள் அவற்றைப் பற்றிய பிரக்ஞை எதுவும் இன்றி அவற்றைப் பருகி விடுவார்கள். இப்போது சில இடங்களில் அவற்றைப் பற்றிய தெளிவு ஏற்பட்டு அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் போதும் நாம் மிகவும் அலட்சியமாக சாதாரணமாகக் கையாளும் ஒரு பொருள் குழந்தைக ளின் உயிரையே பறித்து விடும் என்பது பற்றி அறிவீர்களா? அது தான் கற்பூரம்.

கற்பூரமானது சாதாரணமாகப் பூஜை அறையில் பயன்படுத்தும் ஒரு பொருளாகும். மேலும் சில நேரங்களில் குழந்தைகளின் நெஞ்சுச் சளியைக் குறைப்பதற்கான கை மருத்துவமாகவும் அதனை உபயோகிக்கலாம்.


ஆனால் இந்தக் கற்பூரத்தின் வாசனையால் வெகுவாகக் கவரப்படும் குழந்தைகள் அவற்றை இனிப்பு அல்லது தின்பண்டம் எனக் கருதி உண்டுவிடுகிறார்கள். புள்ளி விவரங்களின் படி இந்தியாவில் மட்டும் நூற்றுக்கு எழுபது வீதமான குழந்தைகள் இப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு மருத்துவ உதவியை நாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.இருப்பினும் ஏனைய உணவு நஞ்சாக்கல்கள் போல் கற்பூரம் உள்ளெடுத்தமை பற்றிப் பெரிதாக வெளியில் தெரிய வாய்ப்பில்லை. ஒரு குழந்தை கற்பூரம் உண்ணும் பழக்கத்தை கொண்டிருந்தால் நீண்ட காலத்திலோ அல்லது உடனடியாகவேனும் அதற்கு வலிப்பு வர வாய்ப்புண்டு. எனவே ஏற்கனவே வலிப்புப் போன்ற பிரச்சினைகள் அற்ற ஆரோக்கியமான ஒரு குழந்தைக்கு காய்ச்சலின்றி வலிப்பு வந்தால் அக்குழந்தை கற்பூரத்தை உண்டிருக்க வாய்ப்புண்டு. மேலும் ஒரு குழந்தை திடீரென வாந்தி எடுக்கும் போது அதில் கற்பூர வாசனை வந்தால் அதற்குக் காரணம் கற்பூரத்தை உண்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை எனவும் கருதலாம்.

கற்பூரமானது உயிருக்கு கடும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஒரு கொடிய நச்சுப் பொருள். கற்பூரத்தை உண்ட ஒருவர் அதை வாந்தி எடுப்பதன் மூலமாக மட்டுமே அந் நஞ்சை வெளியேற்ற முடியும். வயிறு கழுவி விடுதல் உள்ளிட்ட வேறு எம் முறையிலும் நஞ்சை முறிப்பதென்பது இயலாத காரியம். ஆகையினால் தான் ஐக்கிய அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைச்சு கற்பூரம் கலந்த தைலம், மருந்து, அழகு சாதனப் பொருள்கள் அனைத்தையும் தடை செய்துள்ளது. ஆனால் கீழைத்தேய நாடுகளில் குறிப்பாக இலங்கை, இந்தியாவில் கற்பூரம் சமய மற்றும் வெளிப்புற பாவனைக்குரிய மருந்தாக உபயோகிக்கப் படுகிறது. மேலும் சித்த ஆயுர்வேத மருத்துவத்தில் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. கற்பூரத்தை மருந்தாக உபயோகித்தலும் அப்படியே சாப்பிடுதலும் நேரெதிர் விளைவுகளை ஏற்படுத்துபவை. இந்தியாவில் 80 வீதமான குழந்தைகள் காய்ச்சல் மற்றும் மூளை தொடர்பான எந்தவொரு அசாதாரண நோய் நிலைமையும் இன்றி வலிப்பிற்குள்ளாகிறார்கள். இதில் 99% ஆன குழந்தைகள் கற்பூரத்தை உண்டமையாலேயே இந்நிலைக்கு ஆளானமை கண்டறியப்பட்டுள்ளது.

கற்பூரத்தை முழுமையாக உள்ளெடுப்பது மட்டுமன்றி, சிறிது சிறிதாக சுவைத்துப் பார்த்தல் அதனூடாக அச்சுவைக்கு அடிமையாகி அதனை உள்ளெடுக்கும் நிலைமை ஆகியன மெல்ல நஞ்சூட்டல் **(Slow Poisonings)** இற்கு வழி வகுப்பதுடன் குழந்தைகளுக்கு காய்ச்சல் மற்றும் எந்த ஒரு பிரச்சினை நிலைமையோ இன்றிய வலிப்பிற்கும் வழி வகுக்கும். எனவே பெற்றோர் அந்த விடயத்தையும் கவனத்திற்கொண்டு வைத்தியரிடம் கூறுவதன் மூலமாக உரிய சிகிச்சையைப் பெற முடியும்.இந்நிலைமைக்கு மருத்துவரை அனுகி உரிய முதலுதவியோ சிகிச்சையோ பெறாத விடத்து உயிராபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் அமையலாம்.

எனவே குழந்தைகளுக்கு மூன்று வயது வரை கற்பூரம், மண்ணெண்ணெய்,பூச்சிக் கொல்லி உள்ளிட்ட நச்சுப் பொருள்களை அவர்களின் கைக்கெட்டாத உயரத்தில் வைப்பதன் மூலம் இது போன்ற அனர்த்தங்களைத் தவிர்க்கலாம்.

## 2022 இலாவது இந்த கொரோனா பெரும் தொற்று முழவுக்கு வருமா?



(சென்றவாரத் தொடர்ச்சி)

குறிப்பாக இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் அண்மையில் ஏற்பட்டிருக்கக் கூடிய மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடியானது ஒமிக்ரோன் பையனுடைய புதிய திரிவினால் பெரிய பாதிப்புக்களை மக்களுக்கு இன்னும் அதிகரிக்கலாம் என்பதில் எந்தவித அச்சமும் ஐயமும் இல்லை. ஏனெனில் எரிபொருள்களை, பால் மாக்கள் போன்றவற்றை வாங்குவதற்கு அந்நிய செலாவணி இல்லாமல் திண்டாடுகின்ற அரசாங்கம், இந்த ஒமிக்ரோன் தொற்றுக்குரிய புதிய மருந்து வகைகளையும், ஒமிக்ரோன் புதிய தொற்றினால் பாதிப்படைந்த நோயாளர்களுக்கு புதிய மருத்துவ உபகரணங்களையும், ஒருவேளை அவர்களுக்கு எதிராக புதிய தடுப்பூசி வகைகள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த தடுப்பூசிகளை கொள்வதில் கொள்வனவு செய்வதற்கு அந்நிய செலாவணிக்கு எங்கு செல்லும்?

எனவே இலங்கை மக்களாகிய ஒவ்வொருவருக்கும் மிகவும் பாரிய பொறுப்பும் கண்ணியமான நடைமுறை வாழ்க்கையும் தற்பொழுது அவசியமாக இருக்கின்றது.

இலங்கை மக்கள் யாவரும் பின்வரும் நடைமுறைகளை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. காலத்துக்கு காலம், இலங்கை சுகாதார அமைச்சினால் விடுவிக்கப்படும் சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாக கடைப்பிடித்தல்.
2. எங்களுடைய குடும்பங்களில் அல்லது அயலவர்களிடையே கொரோனாவினால் நாங்கள் இறந்த இன்னுயிர்களை எண்ணிப்பார்த்து, இன்னும் மற்ற முதியவர்களையும் மற்றவர்களையும் நாங்கள் இழக்கக் கூடாது என்கின்ற ஒரே ஒரு நோக்கத்தை உயிரே உயிராகக் கொண்டு இவற்றை நாங்கள் கடைப்பிடிக்க வேண்டும்.
3. தேவையில்லாமல் பொது இடங்களுக்கும் வெளியிடங்களுக்கும் செல்வதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
4. விடுதிகள், கேளிக்கை விடுதிகள், திரையரங்குகள் போன்றவற்றை இயன்ற வரை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.
5. உங்களுக்குரிய ஓரளவான சமச்சீர் உணவுகளை அல்லது உங்கள் வீட்டுத் தோட்டங்களில் கிடைக்கக்கடிய உணவு வகைகளை ஆரோக்கியமாகவும் மன சந்தோசத்தோடும் உள்ளெடுத்தல் வேண்டும்.
6. வீட்டைவிட்டு வெளியில் செல்லும் பொழுதும அல்லது பிற இடங்களுக்கு அல்லது வெளி இடங்களுக்கு சென்று விட்டு, வீட்டுக்கு வருகின்ற பொழுதும் கைகளை குறைந்தது 20 செக்கன்களுக்கு நன்றாக சவர்க்காரம் இட்டு கழுவிக் கொள்ள வேண்டும்.
7. வெளியில் சென்று வந்தபோது அணிந்த ஆடைகளை உடனடியாக துவைத்து உலர விட வேண்டும்.
8. தரமான முகக்கவசங்கள் அணிந்து கொள்ளுதல் வேண்டும். அவைகளை அணிகின்ற பொழுது நாடிக்கு கீழோ அல்லது மூக்குக்குக் கீழோ அணியாமல் மூக்கின் மேற்பகுதியில் இருந்து நாடி வரை, வாயை நன்றாக மூடி அணிதல் வேண்டும்.
9. இயன்றவரை சமுதாய இடைவெளிகளை பின்பற்றுதல் வேண்டும்.
10. உங்களுக்கு சாதாரணமாக ஏற்படக்கூடிய காய்ச்சல், தடிமன், இருமல் போன்றவை ஏற்படும் போது அலட்சியம் செய்யாமல் மிக விரைவாக உங்களுக்கு அண்மையில் இருக்கிற வைத்திய அதிகாரியிடம் சென்று உங்களை பரிசோதித்துக் கொள்ளல் வேண்டும். அல்லது அரசாங்க மருத்துவமனைகளுக்குச் சென்று உங்களை பரிசோதித்துக் கொள்ளுதல் வேண்டும். அவர்களுடைய வழிகாட்டுதல்படி நடத்தலும் வேண்டும்.



வைத்திய கலாநிதி.சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன்.
கொழும்பு
தேசிய வைத்தியசாலை.

இந்த இலங்கையையும் உலகத்தையும் கட்டியாண்ட எவ்வளவோ வர்த்தக சாம்ராஜ்யத்தின் தலைவர்கள் எல்லாம் எவ்வளவுதான் பணம் இருந்தும் இறுதியில் இந்தக் கொரோனாவின் கொடும் பிடியினால் பீடிக்கப்பட்டு தங்களின் இன்னுயிரை இழந்திருக்கிறார்கள்.

எனவே, நமது வாழ்க்கை நமது கையில் என்பதை உணருங்கள். உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் மனதில் நினைத்துக் கொள்ளுங்கள். எங்களால் மற்றவர்களுக்கு எந்தவித தொந்தரவும் ஏற்படாமல் வாழ்வதற்கு நாங்கள் முயலுதல் வேண்டும் என்கின்ற ஒரு செய்தியை உங்கள் மனதில் விதைக்க விரும்புகின்றேன்.

# சிறுவர் கதிர்



– விஷ்ணு

## தமிழர் பண்பாடு





தமிழர் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு

– என்று பாடினார் நாமக்கல் கவிஞர். அமிழ்தம் அனைய தமிழ் மொழி பேசும் தமிழர்கள் அன்பை வாழ்வின் அடிப்படையாகக் கொண்டவர்கள். அறச்செயலில் சிறப்புப் பெற்றவர்கள். தமிழர் தம் பண்பாடு பல சிறப்புக்கள் உடையது. பழங்கால மக்கள் காடுகளில் விலங்குகளை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தை உண்டனர். மரப்பட்டைகளையும் இலை தழைகளையும் ஆடையாக அணிந்தனர். மலைகளிலும் குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்தனர். ஆனால் இன்று மக்களின் உணவு, உடை, உறையுள், பழக்க வழக்கங்கள் முதலானவற்றில் வியத்தகு மாற்றங்களைக் காண்கிறோம். மக்களின் இப்புறத்தோற்ற வளர்ச்சியை நாகரிகம் என்பர். இந்நாகரிகம் காலந்தோறும் மாறிக் கொண்டே வரும். நாட்டுக்கு நாடு காலத்திற்கு காலம் வேறுபடும். உள்ளத்தினின்று வெளிப்படும் இயல்புகளைப் பண்பாடு என வழங்குவர். சொல்லாலும் செயலாலும் வெளிப்படுவது பண்பாடு. பண்பட்ட உள்ளம் கொண்டோரைப் பண்பாடு உடையவர் என்போம். இப்பண்பாடே உலக உறவாக வளர்கிறது. இது மாறாதது; என்றும் நிலைத்து நிற்கும். எனவே நாகரிகம் மாறும் தன்மையானது பண்பாடு மாறாத் தன்மையானது. தமிழர் பண்பாட்டில் தலை சிறந்தது மானம். தமிழர் மானத்தை உயிரினும் மேலாக மதிப்பவர். பிறரிடம் இரந்து உண்ணும் பண்பு அவர்களிடம் இல்லை. மானம் இழந்து வாழ்தலிலும் உயிரைத் துறத்தலே பெருமை என்பர். பிறருக்குக் கொடுத்துப் புகழ் பெற்று வாழ்தலே பெருமை என்பர் தமிழர். இல்லையென்னாது ஈயும் பண்பு அவர்களிடம் உண்டு. தமிழ்ப் புலவர் ஒருவரின் வறுமையைப் போக்க தன் தலையை வெட்டத் துணிந்தவன் குமண வள்ளல்.

வீரம், மானம், கொடை ஆகியவற்றை உயர் பண்பாகக் கருதுபவர்கள் தமிழர்கள். தமிழர்கள் ஒழுக்கத்தை உயிர் போலப் போற்றுபவர்கள்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

எனும் வள்ளுவர் வாக்கை அவர்கள் என்றும் மறப்பதில்லை. ஒருவர் எவ்வளவு அறிவு செல்வம் பதவி பெற்றிருப்பினும், ஒழுக்கம் குன்றின் அவர்களை தமிழர் மதியார். தமிழர் தம் வாழ்வில் மானம், வீரம், கொடை, ஒழுக்கம் கொண்டவர்கள். இவற்றைக் கொண்டுள்ளவரே பண்பாளர். இதனையே தமிழர் பண்பாடு என்கிறோம். தமிழர் பண்பாட்டைப் பேணுதல் தமிழர் தம் தலையாய கடமை.

செல்வன்.க. சஞ்சய்
யாழ். இந்துக் கல்லூரி
தரம் 8C



செல்வன். பவிலக்ஷன் - தரம் - 8C

## உப்பு வியாபாரியும் கழுதையின் தந்திரமும்



முன்னொரு காலத்தில் ஒரு உப்பு வியாபாரி இருந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் ஊருக்குள் போக வேண்டும்.

ஒரு நாள் உப்பு வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள ஆற்றை கழுதை கடந்த போது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கிவிட்டது. எனவே, கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்து விட்டது.

கழுதை தவறி விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை நனைந்து விட்டது. கழுதையை வியாபாரி மெல்ல தூக்கிவிட்டான். ஆனால், நீரில் மூழ்கியதால் உப்பு மூட்டை நனைந்தது அல்லவா? அது ஒரு சில நிமிடத்தில் அப்படியே, தண்ணீரில் கரைந்து பாதி மூட்டையாகிவிட்டது.

எனவே, கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை வெறும் சாக்குப் போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. ஆஹா என்ன ஆச்சரியம் இப்போது கழுதை முதுகில் சுமையே தெரியவில்லை.

கழுதைக்கு மிகுந்த சந்தோம். ஆனால் வியாபாரிக்கு பெரிய நஷ்டம். உப்பு வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக் கொண்டு வீட்டிற்கு திரும்பினான்.

மறுநாளும் வழக்கம் போல வியாபாரி உப்பு வியாபாரத்திற்கு கிளம்பினான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை கழுதைக்கு கனமாக இருந்தது. கழுதை மெல்ல நடந்து ஆற்றுப் பாலம் அருகே வந்தது. திடீரென அதற்கு முந்தைய நாள் நினைவு வந்தது. எனவே, மெல்ல தடுமாறுவது போல செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது.

அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை நீரில் கரைந்து விட்டது. இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை இல்லாது போய்விட்டது.

கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்து இதையே செய்த வந்தது. இதனால் தினமும் வியாபாரத்திற்குப் போக முடியாமல் வியாபாரி தொடர்ந்து சிரமம் கொண்டான்.

ஒரு நாள் வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். செல்லும் வழியில் கழுதை கொண்டு வருகின்ற உப்பு எப்படி காணமல் போன்கின்றன என்று யோசித்துக்கொண்டே கழுதையின் நடவடிக்கைகளை கவனித்தான்.

கழுதை வேண்டுமென்றே ஆற்றுக்குள் விழுந்தது. அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரம் புரிந்தது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான்.

அன்று கழுதை முதுகில் வழக்கம் போல உப்பு மூட்டையை ஏற்றவில்லை வியாபாரி. மாறாக, பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூட்டையை கழுதை முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம் போல ஆற்று பாலத்தின் அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவது போல தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது.

மூட்டையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. அடக் கஷ்டமே! கழுதையின் முதுகில் இருந்த பஞ்சு மூட்டை முன்பைவிட அதிகமாக கனத்தது. கழுதையும் மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது.

தனது ஏமாற்று வேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றிவந்த வியாபாரிக்குத் தெரிந்து விட்டத்தை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடக்க முடிவெடுத்தது.

நீதி: நாமும். நம்மை நம்பியவர், நம்பாதவர் யாரையும் ஏமாற்றக் கூடாது. அப்படி செய்தால் ஒரு நாள் நம் செயல் அவர்களுக்குத் தெரியவரும். அன்று அவமானம் அடையும் நிலை வரும். அதற்கான தண்டனையும் நமக்குக் கிடைக்கும்.

## கொப்புத் தாவும் அணிலாரே....!



ஷெல்லிதாசன்
திருகோணமலை

மூன்றுகோடு முதுகில் போட்ட அணிலாரே
மூக்கை மூக்கை சுழிக்கின்ற அணிலாரே
பார்க்க நல்ல அழகான அணிலாரே
பஞ்சு போன்ற மேனியுள்ள அணிலாரே.

கொப்புத் தாவி ஓடுகின்ற அணிலாரே
கூடு கட்டி வாழுகின்ற அணிலாரே
உச்சியிலே தொங்கு கின்ற மாங்கனியை
கச்சிதமாய் கடித்து உண்ணும் அணிலாரே.

பாம்பைக் கண்டால் பயந்துஓடும் அணிலாரே
பலமாக ஒலியை ழுப்பும் அணிலாரே
பச்சைக்காய் கனியைக் கண்டால் இச்சையுடன்
பறித்து உண்டு மனம்மகிழும் அணிலாரே.

நீண்ட வாலைக் கொண்டிருக்கும் அணிலாரே
நிமிர்ந்திருந்து நெல்லுக் கொறிக்கும் அணிலாரே
இராமருக்குப் பாலம் கட்ட உதவியதால்
இறவாத புகழும் பெற்ற அணிலாரே.

கொள்ளை ஆசை உம்முடனே விளையாட
கொஞ்சம் அருகில் வருவீரோ அணிலாரே
அஞ்சாமல் நீரும் வாரும் அணிலாரே
அருந்தப் பசும் பால்தருவேன் அணிலாரே.!

# கலைக் கதிர்






## கவிஞர் அறிமுகம்
# அ. கௌரிதாசன்

கிண்ணியா, ஆலங்கேணியைச் சேர்ந்த அம்பலவாணர் கௌரிதாசன் 1959.05.15 ஆம் திகதி பிறந்தவர். ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார். மகருகிராமம் உப அஞ்சல் அதிபராகப் பணிபுரிந்தவர்.

இவர் கல்வி கற்கும் காலத்தில் அதாவது 1970ஆம் ஆண்டு 'சுடர்' சஞ்சிகையில் வெளியான 'பற்றுக்கள்' என்ற மரபுக்கவிதை மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமானவர். கௌவன்னா, மோகனாமணாளன், தாமரைதாசன், ஆயிலியன் என்பன இவரது புனை பெயர்கள்.

1982 காலப்பகுதியில் ஆலங்கேணி விடிசேவல் கலை இலக்கிய ஒன்றியத்தினால் 'வரப்பு' என்ற பெயரில் வெளியிடப்பட்ட மாதாந்த மரபுக் கவிதை கையேட்டின் பொறுப்பாசிரியராக செயற்பட்டுள்ளார்.

சிந்தாமணி பத்திரிகையில் இவரது அதிகமான கவிதைகள் வெளிவந்துள்ளன. வீரகேசரி, தினகரன், தினக்குரல், தினமுரசு, மித்திரன் போன்ற பத்திரிகைகளிலும், பல்வேறு சஞ்சிகைகளிலும் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. இலங்கையில் தற்போது மரபுக்கவிதை படைப்போரில் இவரும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவர்.

பிரதேச, மாவட்ட, தேசிய மற்றும் சர்வதேச மட்ட கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளார். இதனால் இவரது கவிதைகள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்றுள்ளன.

கௌரிதாசன் கவிதைகள், மழலைப்பா, ஆலையூர்ப் பதிகம், கௌரிதாசன் காதல் பாஷைகள், ஒரு கவிதை எழுதிவிட, என்பாடல் என்பன இவரது கவிதைத் தொகுப்புகள், தேடல் விழுதுகள் என்ற கவிதை நூலின் தொகுப்பாசிரியர் இவர்.

இவரது ஒரு கவிதை எழுதிவிட என்ற கவிதை நூலுக்கு கொடகே சாகித்திய விருது, புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் ஞாபகார்த்த விருது என்பன கிடைக்கப் பெற்றுள்ளன.

பல இலக்கிய அமைப்புகள் இவருக்கு பல்வேறு பட்டங்களை வழங்கியுள்ளன. சென்னை இதய கீதம் இலக்கிய மன்றத்தினால் 'தமிழருவி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தேடல் கலை இலக்கிய மன்றம் 'கவிப்பரிதி' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. கிண்ணியா கலை இலக்கிய மன்றம் 'கலைமாமணி' என்ற பட்டத்தையும், சிறகுகள் இலக்கிய மன்றம் 'மக்கள் கவிஞர்' என்ற பட்டத்தையும், எறும்புகள் பதிப்பகம் 'கவிமழை' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்துள்ளன.

ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தினால் வெவ்வேறு காலப்பகுதியில் 'கவிமணி', 'கவிப்புரவி', 'கவிப்புயல்' போன்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவற்றை விட பாரதியார் விருது, மூத்த எழுத்தாளர் விருது என்பனவும் இவருக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. 2009ஆம் ஆண்டு கிண்ணியா பிரதேச செயலக சாகித்திய விழாவில் கவிநிலா பட்டமும், விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா, வானம்பாடி இஸ்லாமியக் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கவிமாமணி பி.மு.அப்துல் காதர் தலைமையில் 2014இல் காத்தான்குடியில் இலக்கிய நிகழ்வு ஒன்று நடைபெற்றது

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் இந்நிகழ்வின் முக்கியஸ்தர். 'நதியே நீ பாடிக் கொண்டிரு' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராட்டப்பட்ட 10 கவிஞர்களுள் இவரும் ஒருவர்.

கிண்ணியா பிரதேச கலாசார அதிகார சபையின் செயலாளராக செயற்பட்டு வரும் இவர் பல இலக்கிய அமைப்புகளிலும், பொது அமைப்புகளிலும் இணைந்து பணியாற்றி வருகின்றார்.

சிறந்த அறிவிப்பாளராகவும் செயற்படும் இவர் கவிநயத்தோடு தனது பணியைச் செய்வார். பல இலக்கிய நிகழ்வுகளில் அறிவிப்பாளராகப் பணியாற்றி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

# மைக்கேல் கொலின் - நூல் அறிமுகம்

கவிஞர் மைக்கேல் கொலின் அவர்கள் திருகோணமலையில் பிறந்து தற்போது மட்டக்களப்பிலிருந்து இயங்கும் தீவிர படைப்பாளி. தனது மகுடம் பதிப்பகம் மூலமாக பல்வேறு நூல்களை வெளியிட்டுவரும் இவர் தனது படைப்புக்களையும் அண்மைக்காலமாக பிரசுரித்து வருகிறார். இதுவரை நான்கு கவிதை நூல்கள் ஒரு சிறுகதை தொகுதி மற்றும் ஒரு நாவலை வெளியிட்டுள்ள இவர் அண்மையில் வெளிவந்த கவிதைப்பிரதிகள் எழுதித்தீரா பிரியங்கள் மற்றும் இவனை சிலுவையில் அறையுங்கள் ஆகியவையாகும்.




தொன்மங்கள், குறியீடுகள், படிமங்கள் என்பவை ஒரு கவிஞனின் உத்திகள். இவற்றை கையாளாத கவிஞர்களே இல்லை எனலாம். ஆனால் முழுக்க முழுக்க தொன்மங்களை வைத்து பின்னப்படும் படைப்புகள் குறைவு.

ஆனால் கொலினுக்கு தொன்மங்கள் மீதான காதல் அதிகம் போலும். அதனால்தானோ என்னவோ முழுவதும் தொன்மங்களால் நிரம்பிய பரசுராமபூமி என்ற சிறுகதை தொகுதியை வெளி யிட்டிருந்தார். அந்த தொகுதி பரவலாக பேசப்பட்ட ஒரு தொகுதி.

தற்போது வேதாகாமத்தின் பாஸ் கால நிகழ்வுகளின் மறுவாசிப்பாய் வெளியாகியுள்ளது இவனை சிலுவையில் அறையுங்கள் கவிதைப்பிரதி. இந்த பிரதி நாற்பத்தெட்டு கவிதைகளை கொண்டுள்ளது.

சத்தங்களின்றி
இன்னும்
காற்றில்
அலைந்து கொண்டுதானிருக்கிறது
மிகுதியான
யூதாஸ்களின்
முத்தங்கள்
இயேசுநாதர்களைத் தேடியபடி

நெருப்பு பொசுக்கிய பின்பும் தீராத தாகம் புகைக்கு என்பதை எவ்வளவு நாசூக்காக கூறுகிறார் கவிஞர். ஆக போர்கள் எப்போதும் ஓய்வதுமில்லை; தீர்வதுமில்லை.

தட்டுங்கள் திறக்கப்படும்.
திறக்காவிட்டால் உடையுங்கள்
தேடுங்கள் கிடைக்கப்படும்.
கிடைக்காவிட்டால் போராடிப் பெறுங்கள்
வாக்குகள் மாறும்.
வாழ்க்கையும் மாறும்

எவ்வளவு உயர்ந்த தத்துவம் இந்த கவிதையில். கடவுளே கூறியதாயினும் காலமாற்றங்கட்கு ஏற்ப கடவுளின் வார்த்தைகளும்கூட மீள்வாசிப்பிற்குரியதே என்பதை கவிஞர் கூறுகிறார்.

காணாமல் போன ஆடு கிடைத்ததும்
முதல் வேலையாக அதனை
வெட்டி கறிசமைப்பான் மேய்ப்பன்.
வழி தவறிய ஆடுகள் இனி மந்தையில்
சேர்க்கப்படாது

காலமாற்றங்கள் எவ்வளவு வன்மமாக மாற்றி விடுகின்றன மேய்ப்பனின் மென்மனதையும் கூட.. ஆக தக்கன பிழைக்கும் கோட்பாட்டின் அடிப்படையில் இந்த தொகுதி முழுவதுமாக வேதாகமத்தின் பாஸ் கால மொழிதல்களை மீள்வாசிப்பு செய்கின்றது.

நமக்கு மனதுக்கு நெருங்கிய மொழியுடன் பிரதியை நகர்த்தி செல்லும் இந்த பிரதியும் நிச்சயமாக பேசப்பட வேண்டிய ஒன்று.

எழுதித்தீரா பிரியங்கள்.

காதலை பாடாத கவிஞர்கள்தான் ஏது இங்கு. காதல் பாடியோ பேசியோ தீராத ஒன்று. தனது மனைவி மீது கொண்ட காதலை எழுதித்தீரா பிரியங்கள் என்ற தலைப்பில் எழுதித்தீர்த்துள்ளார் கவிஞர் அவர்கள். கண்ணுக்கு அழகியதாக வர்ணப்புத்தகமாக இந்த கவிதைப்பிரதி உள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நான் கொஞ்சுவதற்கும்
நீ விஞ்சுவதற்கும்
இடையில்
காமத்தின் நூலில்
பறக்கிறது
காதல் பட்டம்

காதலுக்கும் காமத்துக்கும் இடையிலான நூலழவு வித்தியாசத்தை பட்டமாக்கி பறக்க விடுகிறார் முகப்பு கவிதையில். நூலின் முகப்பிலேயே தெவிட்டாத தேன்தமிழில் காதலை பாயிரமாக பாடி தொடங்கி நம்மை ஆர்வத்துடன் நூலுக்குள் அழைத்து செல்கிறார் கவிஞர்.

அதீதத்தின்
பிரியங்களுடன்
பெருங்கடலென
பரந்திருக்கிறாய் நீ
என்றுமே தீரா
பெருந்தாகத்துடன்
நீந்தும் மீன் குட்டியாய் நான்'

மீனுக்கும் நீர்நிலைகட்குமிடையிலான தீராத் தொடர்பு தீர்வதில்லை என்பதை நாமறிவோம். ஆனால் இந்த நீர்நிலை கடலாகத்தான் இருக்க வேண்டும் என்பது விதியா? ஏன் அது குளமாகவோ அல்லது குட்டையாகவோ இருக்கக்கூடாது? பதிலை கூறுவதே கவிஞனின் கவித்துவம். குளம் வற்றும் ஆனால் கடல் வற்றுவதில்லை அதுபோல் காதலும். இதனால்தான் கவிஞனின் மீன் கடலில் துள்ளுகிறது.

உன் முத்தத்தின்
சத்தத்தில் பரவுகிறது
கற்பூரவள்ளியின் வாசனை

காதல் கடைச்சரக்காகி போன காலத்தில் மண்ணின் மணத்தை காதலுக்குள் புகுத்தியுள்ளது இந்த வரிகள். கிணற்றடியில் கற்பூரவள்ளி வளர்த்தல் என்பது கிழக்கு மாகாணத்தில் காணப்படும் ஒரு தொன்மையான மரபு. இந்த கற்பூரவள்ளி மிகுந்த வாசனையுடையது என்பதுடன் பல்வேறு நோய் கட்கும் அரிய நிவாரணி. இந்த நிவாரணி இப்போது கவிஞரின் நோய்க்கும் மருந்தாகிறதோ?

இந்த தொகுதி காதல் கவிதைகளை அதிகமதிகமாக கொண்டிருந்தாலும் இது காதலை மட்டுமே பாடும் தொகுதியல்ல. காதலுக்கு அப்பாலான பல்வேறு விடயங்களையும் கூட பேசுகிறது இந்த பிரதியின் கவிதைகள்.

அலையடிக்கும் நினைவுகள் என்ற தலைப்பிலான கவிதை சவுக்கு மரங்களை குறித்து பேசுகின்ற ஒரு கவிதை.

சுனாமி பேரலைகள் சப்பி துப்பினாலும் மீண்டும் மண்ணில் ஆழ வேரூன்றி
வானோடு கதை பேசி நின்றன
சவுக்கு மரங்கள்

எமது வாழ்வியலை சிதைத்த ஒரு கொடு நிகழ்வை நினைவூட்டி மீள எழுந்தோம் என்பதை சவுக்கு மரத்தினை படிமமாக்கி கூறிச்செல்கிறார் கவிஞர். இது கவிஞரின் சமூக அக்கறையன்றி வேறென்ன?

முடிவாக....

இருவேறு விடயங்களை மையமாக்கி சம காலத்தே இரு பிரதிகளை தந்த கவிஞர் மைக்கேல் கொலின் அவர்கள் தீராக்காதலுடன் கவிதைகளை வாசகனிடம் தந்திருக்கிறார். இந்த பிரதிகளின் கவிதைகளை வாசித்து கவியின்பம் நுகர்தல் இனி வாசகர்களின் பொறுப்பு. ஏனெனில் படைப்பின் பின்னாக படைப்பாளி இறந்து விடுகிறான் என்பது கோட்பாடு.


திருஞானசம்பந்தன் லலிதகோபன்.

# CAUSE AND EFFECT

## Read the story and answer the questions.
## [ For grades 7 and 8 children.]

Yesterday after playing with my white mouse on the floor, I put him back into the cage.But I did'nt close the cage tightly and he escaped. I did'nt know that he was loose until I saw something run by my feet. I jumped up quickly and hit the lamp on the table next to me. The lamp fell and crashed to the ground, making a big noise. Soon my dad in my room woke up from his nap.

I walked over to apologise but I stopped in time. My white mouse was sitting in front of me, looking up and smiling. I reached down to grab him, and he took off under the couch and into the kitchen. When I heard the scream I knew my mom had seen my pet. She scooped him into a big strainer and popped him into his cage. I tightly secured the top, and he was back in his cage.




**Complete the following sentences.**

1.My white mouse escaped because........
2.I hit the lamp on the table next to me because...
3. There was a loud noise because.......
4.My dad in my room woke up because....
5.I stopped just in time because......
6. My pet took off under the couch and into the kitchen because....
7.I knew my mom had seen the mouse because....
8.The mouse didn't run away again because......

## Read the story and complete the Effect and Cause given below.

I woke up late this morning because my alarm clock didn't ring. As a result I had to rush to get ready to school and I made a huge mess all overthe house. I missed the bus because I had to go back home to fetch my cellphone. Consequently I was late for school , and my teacher was not pleased me at all. Due to the fact that my day had been going so badly , I was in a bad mood and I shouted at my friends. Since I was in such a bad mood,they didn't want to hang out with me and they left. After they left ,my day only got worse.In view of all that happened today, I have decided to have two alarm clocks instead of one., to make sure that I woke up on time in the morning.



1 . EFFECT:- I woke up late this morning.
CAUSE. :-________________________________________
2. EFFECT :- I made a huge mess all over the house.
CAUSE. :-________________________________________
3. EFFECT :- I had to go back to my house.
CAUSE. :-________________________________________
4. EFFECT :-I missed the bus.
CAUSE. :-________________________________________
5. EFFECT :- I was late for school.
CAUSE. :-________________________________________
6. EFFECT :- My teacher was not pleased with me at all.
CAUSE :- ________________________________________
7. EFFECT :- I was in a bad mood.
CAUSE :-________________________________________
8. EFFECT:- I shouted at my friends.
CAUSE :-________________________________________
9. EFFECT:- My friends didn't want to hang out with me.
CAUSE :-________________________________________
10. EFFECT:- I decided to have two alarm clocks.
CAUSE:-________________________________________

## Read and Answer the Questions

Advertisements have become a part of our lives. We cannot live without them, they attack us from all sides. Step out of the house and they stare at you from all corners, promoting products from needles to CDs, from cricket bats to gold watches. At home, TV programmes are interrupted every five minutes to tell us which toothpaste we should use, what kind of salt is good for us or even which toy we should give to a new-born baby. So many goods are displayed, so many temptations are presented that the poor consumer does not know what to buy or reject. Advertisements are a help because they tell us about a new product. Without them. one would not know what advance has been made in any field. We will not be able to learn about the merits of a new product. It can be anything, a new medicine, a new book, a new - school, a new hospital ------ the list is endless. Advertisements also lead to competition and better products come in to the market.

As long as the competition is healthy, it is good. But advertisements have become cut throat. See the Cola wars. The competition between Coca Cola and Pepsi has made them spend crores on advertisement. Film stars are roped in to make the products popular. Huge hoardings can also prove dangerous for drivers. Some advertisements are in bad taste too. And some of them are so attractively packaged that they persuade people to buy things which they do not need. For example, we buy things at annual sales first because they are cheap.

**(A) Read the passage and complete the following sentences.**

1. We cannot live without advertisements because ____________________
2.The customer does not know what to buy because____________________
3. Advertisements are a help because ____________________
4. Better product can come to the market because____________________
5. People buy things which they do not need because ____________________

**(B). Fill in the blanks with the correct verbs.**

1. Advertisements ________________ us from all sides.
2. T.V programmes are________________ every five minutes.
3. So many goods are ________________ and so many temptations are presented.
4. Advertisements ____________________ to competition.
5. Advertisements ____________________ people to buy things which they do not need.

**Answers:-**
(A) 1. they attack us from all sides. 2. so many things are displayed. 3. they help us to know about new products.4. there is competition. 5. they are cheap.
( B) 1.attack 2. interrupted 3. displayed 4. lead. 5. persuade.



**SKILL:- Identify - Analyse - Infer Cause - Effect Relations.**
**Read the passage and answer questions he questions.**

I have lived in Nilaveli for thirty years. I have seen things change.Now new families are moving in , is and there is a lot of construction of new town homes. I am optimistic.

My son came back from school one evening with a plan that his class made to transform our block of houses. They were going to turn a vacant lot into a garden. He wanted to have lots of flowers in Nilaveli. He said , " We are making progress, our neighbourhood getting better , we can make it even better. We can plant flowers in the vacant lot across the school into the garden; it will inspire people. The community can get to be a really beautiful place. My teacher says everything is interconnected.

I admired my son's idea, but he would face obstacles. He has always been a thoughtful child. I promissed to support his plan and said I would ask my cousins and friends to participate.That way it would be a Nilaveli community collaboration.

His plan started by clearing out the trash from the lot and they needed lots of trash bags because they cleared the trash from the street ,too. Our Block Club joined the effort and it was a clean up day.

People saw the difference they made. Afterward people were not littering so much. They got the idea that it was easier than picking up all the trash if you litter a lot. The boys got some big , green trashcans and put them on the street near the vacant lots. People put their trash into those cans instead of littering.

They planted about 100 flower plants in the lot. Soon they will bloom colourfully. I am sure everybody in the community will be inspired so this progress will be sustained.

Underline the correct answer.

1. Who inspired the boys start the plan?
(a) The teacher (b) Their friends. (c) Their Principal ( d) The Block Club

2.What caused the boys care about the community?
(a) They are committed citizens. ( b) They are in grade 8
( c) They like their teacher. ( c) They live near the school.


3. Why did the students ask the Block Clubs to help them?
( a) They live in the community. (b) They like gardens.
( c) Their Principal told them. (d) They wanted to involve them .

4. What happened because the boys did this project?
(a) They can graduate. ( b) They have changed the community.
(c) They have more friends now. ( d) Their class got money.

5. Why did her son want to plant flowers in the lot?
( a) He wanted to help the community ( b) It would bloom soon .
( c) He likes plants. (d ) It was across from school.

6. Why was there less trash in that area.?
( a) People were recycling ( b) People put the trash in the cans.
( c) The boys picked it up everyday. ( d ) They planted flowers.

7. Why did mother help her son?
( a) He inspired her. ( b) She liked her neighbours.
( c) Her family lived there. ( d) She was proud of him.



# CAUSE AND EFFECT



## Match the effects under aaA with the cause under B.

| (A) | | (B) |
|---|---|---|
| 1.Kumar opened the windows.... | [ ] | (a) because she didn't have her breakfast. |
| 2. They didn't go to the beach.... | [ ] | (b) because there was a traffic jam.... |
| 3.Sita was very hungry....... | [ ] | (c) because he took a short cut road. |
| 4.Anand was late for the meeting.... | [ ] | (d) because it was very hot in his room. |
| 5.The boys didn't swim in the pool...... | [ ] | (e) because he pulled its tail. |
| 6.Ranjan arrived early for the party.... | [ ] | (f) because it began to rain. |
| 7.Rosy will not attend the lectures ... | [ ] | (g) because she got wet in the rain. |
| 8.The dog bit the naughty boy...... | [ ] | (h) because she is very tired. |
| 9.Harini has a cold and fever... | [ ] | (I) because he drove carelessly. |
| 10. Selva met with an accident... | [ ] | (j). because the water was very dirty. |

ANSWERS: 1- d/2- f /3- a /4- b /5- j /6- c/7- h /8- e /9- g/10- i /

## Put the correct letters Under B in the correct boxes



| (A) | | (B) |
|---|---|---|
| 1. Mother washed Mena's frocks.... | [ ] | (a) because our car broke down. |
| 2. The plantain trees grew quickly .... | [ ] | (b) because the alarm went off. |
| 3. Sara got a good grade for her project... | [ ] | (c) because they were dirty. |
| 4. Father made a camp fire...... | [ ] | (d) because it was very cold inside. |
| 5. The firemen came to our house... | [ ] | (e) because he is allergic to it. |
| 6. My jeans are too short for me now..... | [ ] | (f) because we had a night out party. |
| 7. We missed the flight ...... | [ ] | (g) because I grew one inch. |
| 8. Ajit doesn't eat mutton ..... | [ ] | (h) because she worked hard on it. |
| 9. We closed the doors and windows..... | [ ] | (I) because they had a lot of water and sun light. |
| 10. The children are happy.... | [ ] | (j) because dad is taking them to the zoo. |

## Exercise:- Cause and Effect Essays

**(a) Circle the cause and box its effect in each of the following sentences.**

1. After the dog bit her, we took her to the hospital.
2. Her computer stopped working due to a virus.
3. The police arrested him because he committed a crime.
4. She set fire to the curtain and the whole house burnt down.
5. If she gets accepted to university, she will become a doctor.
6. Unless she finds a replacement, she will be fired.
7. Owing to the lack of customers, the restaurant closed down this week.
8. Since she is scared of clowns, she never goes to the circus.
9. He passed his first year at university; so, his parents bought him a motor bike.
10. She is lazy; therefore she has failed all of her subjects.

## Match the causes under (A)with their effects under (B)

| (A). | | ( B) |
|---|---|---|
| 1. It's raining outside. | [ ] | (a) She hurt herself. |
| 2. The phone rang. | [ ] | (b) The puppy began to bark. |
| 3. My cycle chained snapped. | [ ] | (c) I have nothing to wear. |
| 4.Someone knocked at the door. | [ ] | (d) He ate some sandwich. |
| 5. It's a windy day. | [ ] | (e) Kamali answered it . |
| 6. Nilani fell off her bike. | [ ] | (f) I can't ride to school |
| 7. Rajan was hungry. | [ ] | (g) We can't play cricket today. |
| 8. Harini ate a lot of sweets. | [ ] | (h)We saw many animals and birds. |
| 9. All my clothes are dirty. | [ ] | (I) We can fly kite |
| 10. Dad took us a o the zoo. | [ ] | (j) She has a stomach-ache. |

1-g, 2-e, 3-f, 4-b, 5-I, 6-a, 7-d, 8-j, 9-c,10-P



# Environmental pollution

S.Tharunan
Jaffna Hindu College
Grd - 8C



Today the environment is being polluted by various activities

**Causes of environmental pollution**
1. Emissions from motor vehicles.
2. Emissions from factories.
3. Excessive use of chemical fertilizers.
4. Use of chemical pesticides weedicides and insecticides.
5. Dumping of chemical waste.
6. Excessive use of polythene and plastic.
7. Deforestation.

**Effects of environment pollution**
1. Causes health hazards to man and animals.
2. Rise of the sea level.
3. Ozone layer is damaged.
4. Causes climatic change.
5. Causes natural disasters.
6. Causes global warming.
7. Endangers shipping and marine life.
8. Accumulation of waste causes bad odor.

**Ways and means of reducing environmental pollution.**
1. Making deforestation illegal, and planting of trees.
2. Increasing the use of renewable energy.
3. Ban the use of polythene and plastic.
4. Encouraging the use of organic pesticides, weedicides and insecticides.
5. Encouraging the use of organic fertilizers.
6. Ban the dumping chemical waste.
7. Finding alternative ways to control emissions and waste from factories.

In this way, it is hoped that pollution of the environment and can be reduced.

**Thank you**

***"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்***
***திண்ணியர் ஆகப்பெறின்,"*** என வள்ளுவர் பல ஆயிரம் ஆண்டுகள் முன்பே கூறிய பின்பும்,

***"எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணவேண்டும்***
***திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்"***

*- என மகாகவி பாடிய பின்புமே ,*

இக்கேள்வி எழுகிறது என்றால் – இதற்கு அறிவியல் ரீதியான விளக்கம் தான் சிறந்தது.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் மாசறு எமோட்டோ (Masaru Emoto) என்பவர், நம் எண்ணங்களுக்கு அதிக சக்தி இருக்குறது என்றும் ,நம் எண்ணங்களின் மூலமாக நமக்கு ஏற்படும் உணர்வு மற்றும் நாம் பேசும் வார்த்தைகள் தான் நம் வாழ்வை வடிவமைக்கிறது என உறுதியாக இருந்தார். இதை நிரூபிக்க அவர் எடுத்துக்கொண்ட கருவி

நீர் – "நீர் இன்றி அமையாது உலகு" ,நம் பூமி 70 சதவிகிதம் தண்ணீரால் சூழப்பட்டது . நீர் இன்றி அமையாது உடல்,நம் உடலும் 60 சதவிகிதம் தண்ணீரால் உண்டானதே . நீருக்கு நாம் நினைப்பதை விட சக்தி அதிகம்.

எமோட்டோ தண்ணீரை அடிப்படையாய் வைத்து ஓர் ஆய்வை மேற்கொண்டார்.

இரண்டு கண்ணாடி நீர் குடுவையில் அன்பு (Love) ,நன்றி (Thank you) போன்ற நேர்மறை வார்த்தைககளை குடுவையின் உட்புறத்தில் ஒட்டி , அதே போல் நீ ஒரு முட்டாள், உன்னால் முடியாது போன்ற எதிர்மறை வார்த்தைகளை மற்றோரு குடுவையின் உட்புறத்தில் ஒட்டி,அவைகளில் நீரை நிரப்பி, சில மணி நேரம் கழித்து அந்த தண்ணீரை உறைய வைத்து,அதை மைக்ரோஸ்கோப் வழியாக பார்க்கும்போது ,நேர்மறை எழுத்துக்களை எழுதிய குடுவையின் நீர் படிகள் (Water Crystals) அழகிய Symmetrical வடிவத்தோடும், எதிர்மறை எழுத்துக்களை எழுதிய குடுவையின் நீர் அகோரமாக unsymmetrical வடிவத்தையும் பெற்றிருந்தன.

அதே போல் நேர்மறை மற்றும் எதிர்மறை வார்த்தைகளை நீரின் முன்பு வெளிப்படுத்தும் போதும்,நேர்மறை வார்த்தைகளுக்கு அழகிய வடிவமும் ,எதிர்மறை வார்த்தைகளுக்கு கோர வடிவமும் மைக்ரோஸ்கோப்பில் காணப்பட்டது.

நம் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை நீரால் கிரகிக்க முடிகிறது, நம் எண்ணங்களால் நீரின் மூலக்கூறுகலில் (Water Molecules) தாக்கத்தை ஏற்படுத்த முடியும் ,தண்ணீருக்கு உணர்வு உண்டு என மிக முக்கியமான கண்டுபிடிப்பை டாக்டர் எமோட்டோ கண்டுபிடித்தார்.

ஜப்பான் நாட்டில் பியூஜிவாரா அணை (Fujiwara Dam) மிகவும் மாசு படிந்து துர்நாற்றம் வீசியது .அந்த அணையின் நீர் மாதிரியை எடுத்து, எமோட்டோ பரிசோதித்தபோது, நீர் படிகள் அகோர வடிவத்தில் இருந்தது.

சில புத்த துறவிகளை அணைக்கு அழைத்து சென்று ,பிராத்தனை தியானம் போன்று நேர்மறை எண்ணங்களை விதைத்து, பிறகு அந்த நீரை பரிசோதித்தபோது, நீர் படிகள் அழகிய வடிவைத்த பெற்றதாம்.துர்நாற்றம் நாளடைவில் குறைந்ததாம்.

மனிதனின் எண்ணங்கள், தன்னை மட்டும் அல்லாமல் தன்னை சுற்றிருப்பவர்களையும் ,சுற்றுசூழலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எமோட்டோ தான் எழுதிய Hidden Messages in Water,The Miracle of Water,Water Crystal Healing புத்தகங்களின் மூலம் தெரிவித்தார்.

மேலே கூறியது போல் ,நம் உடலும் 60 % நீரால் ஆனதே .நம் எதிர்மறை எண்ணங்கள், நம் உடலை பாதித்து Psychosomatic disorders அதாவது மனநிலை கோளாறுகள் உண்டாகி பல நோய்களுக்கு காரணிகளாகின்றன.

நம் மூளை ,73 % நீரால் ஆனது. டோபாமின் (Dopamine) :மனித மூளையை Complicated Organ என்று அழைப்பார்கள் நம் மூளையில் கிட்டத்தட்ட 100 பில்லியன் நியூரான்ஸ்கள் (Neurons) உள்ளன.

டோபாமின் எனும் ஹோர்மோன் நம் உடலில் பல பணிகளை செய்கிறது. மிக முக்கியமாக, நம் மூளைக்கு நியூரோவ் டிரான்ஸ்மிற்றராக (Neuro Transmitter) பணி செய்கிறது.

எளிதாகக் கூறவேண்டும் என்றால்,நம் மூளையில் உள்ள நியூரான்ஸ்களுக்கு இடையே சிக்னலை பரிமாறும் ஒரு மெஸ்சேன்ஜர் (messenger) பணி .

டோபாமின்னுக்கும் இன்னொரு பெயர் உண்டு.ஹாப்பி ஹோர்மோன்(Happy hormone) என்ற பெயர்.It is a feel good hormone. உங்கள் எண்ணங்கள் நேர்மறையாக இருந்தால், இந்த டோபாமின் ஹோர்மோன் உங்கள் மூளையின் செயல்திறனை அதிகப்படுத்தும். தன்னம்பிக்கை ,Self Motivation,தெளிவான சிந்தனை போன்ற அனைத்து நல்ல விடயங்களும் உங்களுக்கு உங்களின் மூளையின் உதவியால் செயல் ஆகி விடும்

### கார்டிசோல்(Cortisol) :-

கார்டிசோல் , அட்ரீனல் சுரப்பியில் உண்டாகும் ஒரு ஹோர்மோன்.இதற்கும் நம் உடலில் பல பணிகள் உண்டு .நீங்கள் நேர்மறையாக சிந்திக்கும் வரை எந்த சிக்கலும் இல்லை, நீங்கள் எதிர்மறையாக எண்ணினால் இந்த ஹார்மோன் ட்ரிகர் ஆகிவிடும்.அது நேராக உங்கள் நரம்பு மண்டலத்தை (Central Nervous system) தாக்கும்.


எளிதாகக் கூறவேண்டும் என்றால்,கார்டிசோல், மூளையின் முக்கியமான பாகங்களில் (peripheral cortex) பாதிப்பை ஏற்படுத்தும். அதாவது உங்களது சிந்திக்கும் திறன், மன்னிக்கும் தன்மை,பகுப்பாய்வு, Problem solving போன்ற முக்கியமானவற்றை முழுவதும் shut down செய்து விடும். இதனால், மன அழுத்தம் உண்டாகி பல நோய்களுக்கு வித்திடும். மேலும், இதனால்தான் கோபத்தில் நாம் எந்த முடிவும் எடுக்க வேண்டாம் எனக் கூறுகின்றனர்.

கார்டிசோலுக்கு இன்னொரு பெயர் உண்டு, ஸ்ட்ரெஸ் ஹோர்மோன் (Stress Hormone).

டோபாமின் மற்றும் கார்டிசோல் இரண்டும் உடலில் சரியான அளவில் இருக்கும் வரைக்கும் சிக்கல் இல்லை.அளவுக்கு மீறினால் ஆபத்தே .

உதாரணம் :- நாம் ஒவ்வொரு வரும் சில விடயங்களை பிடித்து மிக ஆர்வமாக செய்வோம்.பிறகு அதற்கு அடிமையாகி விடுவோம் அல்லவா .இதற்கு காரணம் ,அளவுக்கு அதிகமான டோபாமின் தான்.

அதே போல் ,கார்டிசோல் அளவு அதிகமானால், ஏற்கனவே கூறியது போல் மன அழுத்தத்தில் தொடங்கி,பல நோய்கள் உண்டாகும். மறந்துவிடாதீர்கள், உங்கள் எண்ணத்துக்கு அதிக சக்தி உண்டு.



## இப்படித்தான் பலர் வாழ்க்கை போகிறது ...

பிறர் என்ன நினைப்பார், அவர் என்ன நினைப்பார், இவர் என்ன நினைப்பார் என நினைத்தே வாழ்ந்து வாழ்ந்து கடைசிவரைக்கும் மனதிற்கு பிடிக்காத முடிவுகளை தேர்ந்தெடுத்து வாழ்வை தொலைப்பது பெரும் கேடு .வீதிகளில் பிறர் தவறாக (விதிமுறைகளை மீறி) தன்னை கடந்து செல்லும் போது கோபம் கொள்வதும், அதையே தான் செய்தால் தனக்கு சமாதானம் சொல்லிக்கொள்வதும்.

பயனற்றது எனத்தெரிந்தும் தேவையற்ற பொருள்களை ஆடம்பரத்திற்காகவும்/ பெருமைக்காகவும் வாங்கி சேர்ப்பது.

தனக்கு கோபம் வரும் என்பதை எளியவரிடமும், பயம் வரும் என்பதை வலியவரிடமும் காட்டுவது.

உண்மை கைக்கெட்டும் தொலைவில் இருந்தாலும், அனைவரும் சொல்லும் பொய்யை ஏற்பது.


பொது விதிகளை தனக்கு தேவைப்படும்/பயன்படும் போது மட்டும் உரக்க கூறுவது, இல்லை எனில் அதே தவறை மன நிறைவுடன் செய்வது (அரசுசார் விதிகள்/தனி மனித ஒழுக்கம்...மேலும் பல)

முன்னெச்சரிக்கைகும் பயத்திற்கும் வித்தியாசம் தெரியாமல், தன் குழந்தைகளுக்கு மீனை பிடித்து மட்டுமே கொடுப்பது (கற்றுக்கொடுக்க பயப்படுவது .முள் குத்திவிட்டால்??)

வாங்கும் பொருள் தரம் மற்றும் பயனை பொறுத்து இல்லாமல் அதன் விளம்பரத்தை பொறுத்து இருப்பது.

தான் திருந்தினால்தான் சமூகம் திருந்தும் எனும் பொது அறிவுகூட இல்லாமல், மாற்றத்தை சமூகத்திடம் மட்டும் எதிர்பார்ப்பது.

எப்பொழுதும் பிறர் பயணித்த/கடந்த/சொல்லும் வழிகளிலேயே பாதுகாப்பாக பயணிக்க நினைப்பது, தோல்விகளை/முயற்சிகளை புறந்தள்ளுவது.



## உங்களுக்கும் தெரிந்த கசப்பான உண்மைகள்

1. வாழ்கை என்பது ஏமாற்றமும், ஏக்கமும் நிறைந்தது.
2. நம்மிடம் இருபதை விட இல்லாததை நினைத்தே துயரப்படுவோம்.
3. அதிகமான பாசம் ஒரு கட்டத்தில் வெறுப்பையும், எரிச்சலையும் உண்டாக்கும்.
4. வெளிச்சம் இல்லை என்றால் உன் நிழல் கூட துணைக்கு வராது.
5. நாம் அதிகமா ஆசைப்பட கூடாது என்றே ஆசைப்படுவோம்.
6. வாழ்க்கையில் எவ்வளோ உச்சத்தை அடைந்தாலும், அடுத்தவருடன் ஒப்பிட்டுக்கொண்டே தான் இருப்போம்.
7. வாய்ப்பை பொறுத்தே கட்டுப்பாடுகள் உருவாக்கப்படும்.
8. அனைவருடனும் நல்லவனாக இருக்க நினைத்தால், அது போலியான முகமூடியாகத்தான் இருக்கும்.
9. தொடாமல் கெட்டவன் இராவணன், கொடுத்து கெட்டவன் கர்ணன், கொடுக்காமல் கெட்டவன் துரியோதனன்.. ஆக மொத்தத்தில் நீங்கள் வாழ்க்கையில் என்ன செய்தாலும் காறி துப்ப 10 பேர் எப்போதும் இருப்பான்.
10. போர் கூட ஒருகட்டத்தில் முடிவுக்கு வரும், ஆனால் சந்தேகச் சண்டை என்றைக்கும் தீராது.




# நெற்செய்கையில் கபில நிற தத்தியின் தாக்கம்



கடந்த முறை காலபோக நெற்செய்கையில் கபில நிறதத்தியின் தாக்கம் பரவலாக அவதானிக்கப்பட்டது. நெற்தாவரத்தின் மீது மிக அதிக எண்ணிக்கையில் இத்தத்திகள் பெருகி தத்தி எரிவை ஏற்படுத்துகின்றமை இவற்றின் தாக்கத்தினால் நெற்தாவரத்தின் அடியிலிருந்தே தாவரத்தின் சாற்றினை உறிஞ்சிக் குடிப்பதினால் மட்டங்கள் தாய் தாவரம் என்பன உலர்ந்து தத்தி எரிவு ஏற்படுகின்றது ஆரம்பத்தில் இலைகள் மஞ்சள் நிறமாகி பின்னர் படிப்படியாக உலர்ந்து வயல் எரிந்தது போன்று தோற்ற மளிக்கும்.

### சேத அறிகுறிகள்

• தாவரத்திலிருந்து சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் தாவரம் முதலில் வாடும்.

• இதனை அருந்த தாவரம் எரிந்தது போன்று தோற்றமளிக்கும் தாக்கம் அதிகளவில் உள்ள போது வயல் தொட்டம் தொட்டமாக எரிந்தது போன்று தோற்றமளிக்கும்.

• நீர் மட்டத்தில் வெள்ளை நிற செதில்கள் காணப்படும்.

• வயலில் பயிர்கள் அடர்த்தியாக உள்ள பகுதியில் பிரித்து அவதானிக்கும் போது அடிப் பகுதியில் அனேக சிறிய பூச்சிகள் காணப்படு வதை அவதானிக்கலாம்.

• இளம் மஞ்சள் நிறமான பூச்சிகள் கைகளில் ஊர்வதை அவதானிக்கலாம்.

• தத்திகள் தமது தேவைக்கு அதிகமாக மிதம் மிஞ்சிய அளவில் தாவர சாற்றை உறிஞ்சி குடிப்பதனால் மேலதிக தாவரச்சாறு தத்திகளின் உடலில் இருந்து துளியாக வெளியேறும் இதில் அதிகளவான வெல்லம் உள்ளது. இத் தேன் துளி தாவரத்தின் அடிப் பகுதியில் விழும் தேன் துளியின் மீது சூட்டிமோல்ட் பாங்கசு வளரும். எனவே அவ்விடங்களில் கறுப்பு நிற புள்ளிகளை அவதானிக்கலாம்.

### வாழ்க்கை வட்டம்

• நெற்பயிரை முதலில் அடையும் நீண்ட சிறகுகள் உடைய நிறையுடலிகள் இலை மடலில் அல்லது மத்தியில் இலை நரம்புகளினுள் 300 முட்டை வரை குவியலாக இடுக்கின்றது. 7 - 9 நாள்கள் அடைகாத்தலின் பின்னர் அணங்குகள் வெளியேறும் 5அணங்கு பருவங்கள் காணப்படுவதனால் இதற்கு 13 - 15 நாள்கள் எடுக்கும் முதலாவது அவத்தையில் உள்ள அணங்குகள் வெண்ணிறமாக காணப்படும் பின்னர் கபிலமாக மாறும் நிறையுடலிகள் 14 நாள்கள் உயிர்வாழ்வதோடு கட்டையான அல்லது நீண்ட சிறகுகள் கொண்டது. பறந்து செல்ல கூடிய சிறகுகளை கொண்ட தத்திகள் அதிக எண்ணிக்கையில் உருவாகும். ஊடனடியாக கிருமி நாசினிகள் விசிற வேண்டாம். மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் உங்கள் வயலில் அவதானித்ததும் கலவரம் அடைந்து உடனடியாக பூச்சி நாசினி விசிற வேண்டாம்

### முதலில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

• நீரை வயலில் இருந்து முற்றாக வடித்து விடுங்கள்

• வரம்பில் உள்ள களைகளை கட்டுப் படுத்துங்கள்

• பயிர்கள் மீது சூரிய வெளிச்சம் விழக் கூடியவாறு வயலில் இறங்கி பயிரினை பிரித்து விடவும்

• நைதரசன் அடங்கிய யூரியா உரத்தை உடனடியாக நிறுத்தவும்.

• உங்கள் வயலில் அடுத்துள்ள வயல்களில் நெல்லை பயிர் செய்யும் விவசாயிகளை விழிப்படைய செய்யவும்.

• பயிர் முதிர்ச்சியடைந்திருப்பின் இயலுமானவரை விரைவாக அறுவடை செய்யுங்கள்.

### தத்திகள் அதிக அளவில் பெருகுவதற்கான காரணிகள்

• அதிக அளவிலான ஈர பதனும் அதிகரித்த வெப்ப நிலையும்.



• தத்திகளில் இருந்து உங்கள் பயிர்களை பாதுகாப்பதற்கு உங்கள் வயலில் உள்ள தத்திகளின் எண்ணிக்கையில் அவதானமாக இருங்கள்

• வயலின் மத்திய பகுதியில் சென்று தத்திகளை அவதானித்து பாருங்கள்.

• எண்ணிக்கை அதிகமாக காணப்படுமாயின் அதிக இடங்களில் பரிசோதித்து பாருங்கள்

• அடிக்கடி வயலை பரிசோதித்து பாருங்கள்

• குறைந்தது வாரத்தில் இரண்டு முறையாவது பரிசோதித்து பாருங்கள்.

• நெல் பயிர்கள் மீது சூரிய ஒளி படக்கூடியவாறு வரிசைகளை பிரித்து விடவும்.

• ஒரே நேரத்தில் அனைத்து விவசாயிகளும் நெல்லை விதைக்காமை.

• அதிக அடர்த்தியாக விதைத்தல் நாற்று நடுதல்

• தேவையற்ற நேரங்களில் கிருமி நாசினிகளை விசிறுதல்

• அநாவசியமாக வயலில் நீரை தேக்கி வைத்தல்

• பருவம் பிந்தி பயிர் செய்தல்

### சேதன கட்டுப்பாட்டு முறைகள்

இது தத்திகள் அடுத்த போகத்தில் பரவாமல் இருக்கவும் உதவும்.

1. ஆழமாக உழுதல்
2. மண்ணுக்கு அதிக சேதனப்பசளை இடவும்
3. எதிர்ப்புத்தன்மை கொண்ட பயிர்களை நடவும்
4. தேவையில்லா நாசினியை விசிற வேண்டாம்
5. சரியான அடர்த்தியில் பராமரிக்கவும்.
6. சிபார்சு செய்யப்பட்ட அளவில் பசளை இடவும்
7. பன்றி நெல் உங்கள் வயலில் அல்லது உங்கள் வயலுக்கு அருகில் காணப்பட்டால் அது தத்திக்கு விருந்துவழங்கி என்பதால் அதனை அழிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும்.
8. தத்திகளின் தாக்கம் அவதானித்தால் துணியில் மண்ணெண்ணெயை ஊற வைத்து பந்தம் போல் செய்து தடியில் குத்தி 15 அடிக்கு ஒன்று எனும் வீதத்தில் வைத்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் மண்ணெண்ணெயின் வாசனைக்கு தத்திகள் வயலுக்குள் உட்புகுவதை தடுக்கலாம்.



• சிபாரிசு செய்யப்பட்ட பசளையை விட தேவைக்கு அதிகமாக நைதரசன் பசளையை இடல்.

• தத்திக்கு விருந்து வழங்கியாக காணப்படும் பன்றி நெல்லை கட்டுப்படுத்தாமல் விடல்.

ஆக்கம்:-
செ.சஞ்சீவன்.
மாணவன் NVQ தரம் 6.
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்.
மருதனார் மடம்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# மரணத்தின் தூது



திருக்கோவில் கவியுவன்



பாகம் 01

இருட்டுகும் மிருட்டு! என் அடிமனதைப் போல் வெளியில் ஒரேயிருட்டு. ராத்திரியை சிவராத்திரியாய் மாற்றிக் கொண்டிருக்கும் நான். என் கன்னமேட்டில் வழிந்து செல் லும் கண்ணீர் நதி. என் பாதம் ஈரப்படுகிறது. சில துளி கள் பாதங்களையும் சந்திக்கதிராணி யில்லாமல் நிலத்தை நோக்கு கின்றன.

'இது பொய்! நான் நம்பமாட்டன். என் மகன் செத்திருக்கமாட்டான்! நான் நம்பமாட்டன்! நான் நம்ப மாட்டன்'

ஈனஸ்வரத்தில் என் மனைவியின் முனகல் கேட்கிறது. இரவு முழுவதும் ஒப்பாரி வைத்து இப்போது இயலாமையில் ஒரு முனகல். அவள் நெஞ்சுக் கூட்டுக்குள் கண்டு கொண்டிருந்த கனவுகளும் நம்பிக்கைகளும் கீழே நீர்த்திவலைகளாக சிதறிக் கிடக்கின்றன. கைகள் பரபரக்கிறது, அவளின் தோளைப் பற்றி ஆறுதல் சொல்ல. என்னை எழுப்பவே யாரோ தேவைப்படுகிறது போல் இருக்கிறது. இரங்கிய பார் வையு டன் அவளை ஏறிட்டுப் பார்க்கி றேன். என் பார்வையைப் பற்றி அவள் அக்கறை காட்டவில்லை. இன்னும் புலம்புகிறாள். இறக்கும் தறுவாயில் இருக்கும் குப்பி விளக்கை வெறித்துப் பார்க்கிறாள். வாய் ஏதோவெல்லாம் முணுமுணுக்கிறது.

எனக்குக் கேட்கவில்லை. கேட்பதையும் நான் விரும்பவில்லை. அவள் கையில் கசக்கப்பட்ட அக் கடிதம் கோபந்தாங்கியாகச் சுருண்டு கிடக்கிறது. அது வெறும் கடிதம் அல்ல. இரண்டு உயிர்களின் இதயத் துடிப்பை ஒரே நேரத்தில் ஒரு நிமிடம் நிறுத்தி வைத்த யமதூதன்! வித்தைத் தடவி வந்த வெள்ளைப் பேப்பர் மனிதம் மலிந்திருந்த என் மகனின் முகத்தில் மரணத் தடம் பதித்து உருக்காட்டிய ஒரு விகற்ப ஓவியன். அவளையே பார்த்திருந்த போது என் கால்களை ஏதோ நக்கியது. பாம்போ என்று ஒரு கணம் பயந்து விட்டேன். ஒரு கணம்தான். மறுகணம் பாம்பு கடித்தாவது சாகக் கூடாதா என்று எண்ணம் தோன்றியது. நான் வளர்க்கும் நாய் என் கால்களை நக்கிக் கொண்டிருந்தது. இரவு சாப்பிடவில்லை என்பதை நக்கிச் சொல்கிறது போலும், இனிமேல் எமது சாப்பாடு சாப்பாடாக இருக்க மாட்டாது என்பதை நான் யாரிடம் சொல்வேன். எப்படிச் சொல்வேன்.


என்னையறியாமல் என்கைகள் நாயின் கழுத்தைத் தடவியது. மனம் மனைவியை நினைத்துக் கொண்டது, மகனை நினைத்துக் கொண்டது. என் கைவிரலைப் பிடித்துக் கொண்டு கடைத்தெருவைச் சுற்றிவரும் என் மகனின் பிஞ்சுமுகம் தெரிகிறது. நேற்றையது, நாளை யது எல்லாமே நிகழ்வது போல் நினைவுகளில் ஒரு தடம் புரள்தல் நிகழ்ந்து கொண்டிருந்தது, என்மகனின் வெற்றிச்சான்றுகள் இங்கே தாறுமாறாக வீசப்பட்டுக்கிடப் பதைப் போல். என் தோள்கள் வலித்தது - அதில் அவன் சவாரி செய்ததால், என் கண்கள் பனித்தது - அது அவனை அடிக்கடி விழுங்கிக் கொண்டதால், என் மனம்? அது என்ன செய்து கொண்டிருந்தது என்று எனக்கே தெரியாது. மலேரியாக் குளிசை விழுங்கியவன் போல் நான். நானே இப்படியென்றால் என் மனைவியைக் கேட்கத் தேவையில்லை.

டொக்.டொக்.டொக் நாய்களின் குரைப்புகளுக்கு மத்தியிலே ஜீப் ஒன்றின் உறுமல் வீட்டுவாசலில் அடங்கிய சில நிமிடங்களில் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறக்கிறேன். துப்பாக்கியின் வழிகாட்டலில் சிலர் என் வீட்டினுள் பிரவேசித்தார்கள். வேறு சந்தர்ப்பங்களில் என்றால் நான் வெலவலத்துப் போயிருப்பேன். இப்போது எதுவுமே நடக்காதது போல் என்மனம் சுத்தகுன்யமாய் விறைத்துக் கிடந்தது. எங்கே உனது மகன்'

மனித உருத்துப்பாக்கியொன்று இரைந்தது.....

(தொடரும்)

# இலக்கிய நயம்



யாழ். மகள் சைந்தவி

திணை : குறிஞ்சி

பாடியவர் : ஔவையார்

பாடல் 8: மகவுடை மந்தி, தலைவியை சந்திக்க முடியாமல் இருக்கும் துன்பத்தில் தலைவன் பாடும் பாடல்

**நல்லுரை யிகந்து புல்லுரை தாஅய்ப்**
**பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல**
**உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி**
**அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்**
**பெரிதா லம்மநின் பூச லுயர்கோட்டு**
**மகவுடை மந்தி போல**
**அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே**

காதல் தொடரும் போது, ஆணும் பெண்ணும் படும் மகிழ்ச்சியும், துக்கமும் அளவிலாதது. காதலில் முதல் நிலையில் ஆண் பெண்ணை நோக்கி செல்கிறான், காதலில் கடை நிலையில், பெண் ஆணை நோக்கி செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறார். காதலில் முதல் நிலையில் ஆண் பெண் சந்திப்பு, அவர்களிடையே நிகழும் பேச்சு மிகவும் மகிழ்ச்சியை தருகிறது, அதுவும் யாருக்கு தெரியாமல் சந்திக்கும் சந்திப்பும், பேசும் பேச்சும் சுவை மிகுந்தது. இப்படி சந்திக்கும் வேளையில், பெண்கள் தீடீரென சந்திப்பின் கால இடைவெளியை நீட்டுவதும், தவிர்ப்பதும் காதலில் இயல்பு, கொஞ்சம் காலம் தவிக்க விட்டாத்தான் தன் அருமை தெரியும் என்ற காரணத்திலோ, வீட்டுக்கு தெரிந்து விடும் என்ற காரணத்திலோ இது நிகழ்கிறது. இப்படி ஒரு சூழலில் தலைவியின் சந்திப்பை மறுக்கும் தோழியால் அவதிக்குள்ளான ஒரு தலைவன் புலம்பும் புலம்பல் இது – இன்றைய ஆண்கள் தலையணையையும், பெண்கள் கரடி பொம்மையையும் கட்டிக்கொண்டு தூங்குவது இது போல் உள்ள தவிப்பினால் தானோ?

அதாவது பாடலின் இலக்கிய சுவை இதுதான் – சுடப்படாத பச்சை களிமண்ணால் செய்யப்பட்ட மண் பானை, நீர் பிடிக்க மழையில் வைத்தால், அந்த பானை நீரை உள்ளே வைத்துக் கொள்ள முடியாது, மொத்தமாக நீரை சிந்தவும் முடியாது, நீரின் ஈரம் தாங்க முடியாமல் கொஞ்சம் கொஞ்சமாக நீரை சிந்தும், அது போல் நல்ல உரைகளை விட்டு, தலைவியை காண முடியாது என்று மனதுக்கு துன்பம் தரும் உரைகளை கேட்டு வருத்தப்படும் என் நெஞ்சே, காதலியை வேண்டாம் என்று தூக்கி போட முடியவில்லை, காதலியை நெருங்கவும் முடியவில்லை. அவளுடைய பிரிவு மனதுக்கு வருத்தத்தை தருகிறது. மரத்துக்கு மரம் தாவும் பொழுது தாயின் மார்பை கெட்டியாக கட்டிக் கொள்ளும் குரங்குக் குட்டியைப் போல், என் குறையை கேட்டு, என்னை தேற்றி, என்னை மார்போடு கெட்டியாக – நெருக்கமாக அணைத்துக் கொள்ள எப்போது என் தலைவி வருவாள் என்று அவளுக்குகாக வருத்தப்படும் நெஞ்சே உன் போராட்டம் மிக பெரியது , பெருமை உடையது.



சிறுகதை

பி.சரணியா

# நள்ளிரவுக் கவிதை

கதவு திறக்கும் சத்தம் ரீரீரீச்ச்ச்

இவராகத்தான் இருக்கும் நாய் குரைக்கவில்லையே!

(முணுமுணுப்பு மொழி)

ஆத்திரத்தில் ஆரவாரமின்றி மேலும் சுருண்டு கொள்கிறாள் மெத்தையோடு மெலினா

என்னவளே உன்னவன் நான் வந்தேன்

ஊர் உறங்கும் நேரம் இது உம் கடமை முடித்து கண்ணுறங்கும்; கவிதை மொழி தணிக்காது என் குரோதம்

உறங்காது ஊடலோடு தான் உள்ளாயா?

மனையவள் மறந்து ஊதியத்திற்கு மண்டியிடும் உமக்கு எதுகை மோனை யார் உரைத்தாரோ

(மெல்ல புன்னகைத்து நகர்கிறான் மெலினா அருகே)

என் இதயம் இனம் காட்டிய கவிதை புயல்; உன் சுழற்சியில் சற்று காற்றுப் பட்டு கவிதை மேவினேன் இருந்தாலும் உன்னை கரை காண முடியவில்லை

(நளின நகையோடு மெலினாவை அடைந்தான் அஸ்விதன்)

மெல்லிய அல்லி இதழ் மெலினாவை மெல்லக் கரம் கொண்டு கொய்து அணைத்தான். அல்லி இதழ் மெல்லிடை மெலினா கொட்டி விழுகிறாள் மெத்தையில் அப்படியே வைத்து தடவி தாரைவாக்கிறான் முத்தங்களை. அல்லியவள் ஆத்திரம் முத்த ஈரத்தில் தணிந்த வார்த்தைகளாய் சொட்டுகிறது.

ஏன் இவ்வளவு நேரம்

வழமையான வாதத்திற்கு வழமையான விடை தானே மெலினா

“வம்பு வேண்டாம் பதில் வேண்டும்”

வார இறுதி அன்றோ அண்ணாத்தை கணக்கு எல்லாம் முடிக்க வேண்டி இருந்துச்சு அரை கணக்கு முடிக்கவே அரை நாள் ஆகிட்டு பாக்கி இருக்கட்டும் பாக்கியவதி பார்த்திருப்பாள் என்று பாதை மறைந்த இருளில் நிலாவேணி துணைகொண்டு படலை வந்தேன்

(என்று கவியூடே காரணம் கூறி மெலினாவின் கூந்தலை வருடினான் அஸ்விதன்)

பிடித்தமான வருடல் என்றாலும் வம்புக்கு வெறுத்து மெத்தையின் ஓரமாய் சென்று ஒதுங்கி கூந்தலையும் கூட்டி ஒதுக்கி கொண்டாள் தன்னோடு, பறக்க தயாராக விரித்துக் கிடந்த கருப்புச் சிறகை மூடிக்கொண்டதாக அமைந்த அழகை மொத்தமாய் குடித்துவிட எண்ணித் தோற்றான் அஸ்விதன்காரணங்களும் அதற்கு புனைந்த பொய் பூக்களும் என்னை வளைக்க இட்ட வரிகளும் ஓர்புறம் இருக்கட்டும் யாரது? நிலா வேணி

வேடிக்கை நகையோடு கிள்ளி சிவக்கச் செய்தான் மெலினாவின் கன்னத்தை

இந்த மாமன் மனம் மாய்த்த மாருத மார்புகளை கொண்டவளே வீதி முழுக்க விழிமூடும் இருளடி வான மங்கை நிலவின் ஒளி பெற்று வீடு வந்து சேர்ந்தேன் என்றுரைத்தேன் பேதையே

கவிதை கணல்களில் வித்தைக்காரி நீ என்மீது கொண்ட அளவு கடந்த பாசம் இதைக்கூட ஆய்ந்துணர விடாது அறிவுக்கண்ணை இறுகப் பொத்திக்கொண்டததோ? (என்று நகைத்தான்)

தோற்றதை ஒப்புக்கொள்ளாது வாதத்தை நீட்டினாள் மெலினா

ம் ஆகா சொல்லத்தான் வேண்டுமா? பெண்களின் பெருமையை செய்த தவறை உள்ளதால் உணர்ந்தாலும் வெளியில் உரைத்திட விடுமோ? இதில் என் மனையாளி மட்டும் குறைந்தவளோ? (என்று காதல் கணைகளை கண்களால் தொடுத்தான் அஸ்விதன்)

சரி சரி இருக்கட்டும் இப்படியே கவிபாடிக் கொண்டு இருந்தால் நீர் ஒன்றும் இருபத்திமூன்றாம் புலிகேசி புலவர் ஆகிவிட முடியாது.பொழுது புலர்ந்தபின் மீண்டும் வேலைக்கு ஓட சரியாக இருக்கும் ஒவ்வொரு முறையும் நீங்க என்னை சமாளித்தது போதும் இன்று நான் உமது மாயவலையில் மசிவதாகவும் இல்லை மன்னிப்பதாக இல்லை

கொதித்து புகைந்தெழுந்த எண்ணெய் வற்றிய சட்டியில் இட்ட கடுகு போல் கடுகடுத்து சொல்லி முடித்தாள்

(காதல் கலந்த மொழி பேசத் தொடங்கினான் அஸ்விதன்)

மெலினா..........

தினமும் உன் வேடிக்கைப் பேச்சின் தோல்வியை எனைத் தவிர யார் அறிவார் என்றுதானே தட்டுத்தடுமாறி தடையின்றி வார்த்தைகளை மட்டும் கொட்டி முடித்தாய் என் அழகே (கருணைக் குரலில்)

இன்றும் இருள் கண்டுவிடும் உன் குரோதத்தை என்று சிரித்தான்

சுருண்டு கிடந்த மெலினா உடல் அழகைக் கண்டு ரசித்து விளக்கை அணைத்தான் அஸ்வின்

(உடல் நடுங்காது மெல்ல நகைக்கிறாள் மெலினா)

அல்லோலப்பட்டு அடங்கிய கவியரங்கு ஓசையின்றி மண்டியிட்டுக் கொள்கிறது;

அணைத்த பதத்தில் கரங்களில் கரையும் காரிருள் உள்ளே கண்ணியமாய் மொழியும் கரைந்தது. அமைதியோடு இருளும் இரசித்துக் கொண்டிருக்கிறது

# நானும் சொல்கிறேனே...!

இந்த வாரத் தலைப்பு

## கடிதம் எழுதிய காலங்கள்

நானும் சொல்கிறேனே.....!
காலைக்கதிர் வாரஇதழ்
Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna
மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com
Whatsapp & Viber - 076 443 8622
சமூகவலைத்தளங்கள் - kalaikkathir (காலைக்கதிர்)

06

## கடந்த வாரத் தலைப்புகள்

உறவுகள் தரும் உறுதி,
குழந்தைகள் எப்படி எம்மை வளப்படுத்து கிறார்கள் தெரியுமா?

**கடந்த வாரங்களில் நாம் வழங்கிய தலைப்புகளில் தங்கள் எண்ணங்களை எழுத்தாக்கி அனுப்பி வைத்திருப்பவர்களின் பதிவுகள் சில இந்த வாரம் இடம்பெறுகின்றன.**

## உறவுகள் தரும் உறுதி!

இன்றைய வாழ்வியலில் எமக்கு அடிக்கடி மனச்சோர்வும், எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கையும் ஏற்படுவது இயல்பான ஒன்றாக மாறிவிட்டதாகவே நான் கருதுகிறேன்.

ஒரு காலத்தில் எத்தனையோ இடர்களுக்கு மத்தியில், யுத்தத்தின்போதுகூட ஏற்படாத இந்தச் சிக்கலுக்கு எமது உறவுகள் தரும் உறுதிதான் ஒரே அரு மருந்தாக உள்ளது.

வார்த்தைகளாலும், செயல்களாலும் அவர்கள் எம்மைத் தாங்கிப் பிடித்திடும் தூண்களாக நிற்கிறார்கள். எண்ணங்கள் அலைபாய்ந்து, தடுமாற்றமான முடிவுகளை நாம் எடுத்திடும் பொழுதுகளில் உறவுகள் தரும் உறுதி மட்டும் இல்லையெனில் நாம் சிதைந்துபோவதற்கான சாத்தியங்களே அதிகமென்பதுதான் உண்மை!

உறவுகளே உங்கள் உறுதுணை என்றென்றும் எமக்கு வேண்டும்!

**பி.திருமகள்,**
**வவுனியா**

## குழந்தைகள் எப்படி எம்மை வளப்படுத்துகிறார்கள் தெரியுமா?

நான் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற காலப்பகுதியில் ஒரு முறை அதிஷ்டலாபச்சீட்டு விற்பனை செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் கட்டாயம் நூறு சீட்டுக்கள் விற்கவேண்டிய நிர்ப்பந்தம்.

நானும் வீடு வீடாகச் சென்று விற்பனையில் ஈடுபட்டபோது ஒரு வீட்டில் ஒரு பெண்மணியும் அவருடைய சிறு பிள்ளையும் நின்றிருந்தனர். ஒரு டிக்கட் எடுக்குமாறு அந்த பெண்மணியிடம் கோரினேன். அதற்கு அப்பெண்மணி அவர் நித்திரை என்றார். இதைக் கேட்ட அச்சிறு பிள்ளை இல்லையம்மா அப்பா முழிப்பு என்று கூறி டிக்கட் புத்தகத்தை வாங்கி அப்பாவிடம் கொண்டு ஓடியது. அவரும் நான்கு டிக்கட் எடுத்தார்.

பொய் சொல்லக்கூடாது பாப்பா என்ற பாரதியின் வரியை கடைப்பிடித்த அந்தப் பாப்பாவால் நான்கு டிக்கட் விற்ற மகிழ்ச்சி எனக்கு. பொய் சொல்லக்கூடாது பாப்பா என்பது பாப்பாவுக்கு மட்டுமல்ல. பெரியவர்களுக்கும்தான்.

**பா.துஷ்யந்தி ,**
**கொக்குவில்**

## உறவுகள் தரும் உறுதி

உறவுகள் தரும் உறுதி எனும்போது மண்ணுக்காய், ஆகுதியான உறவுகள் தொடக்கம் புலம் பெயர்ந்து வாழும் உறவுகள் வரை இந்த மண் உயர்ந்து, நிமிர்ந்து, பரந்து உறுதியோடு வரமாகியுள்ளது. வரமாக்கியும் உள்ளது.

2009 இற்குப் பின்னர் குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் வாழ்வாதாரத்தில் சொற்ப வெற்றி பெற்றிருக்கின்றோமெனில் அது எமது உறவுகள் அளிக்கும் உறுதி எனும் நம்பிக்கை உதவிகளினாலேயாகும்.

தாய் தந்தை, தாத்தா, பாட்டி, அயலவர், உறவினர், நண்பர்கள் சமூகத்தின் பங்காளிகள் எனும் உறவுகள் தரும் உதவிகளினாலும், அவர்களின் வருகை எனும் வரவேற்பினாலும் இந்த மண் உறுதி கொண்டு மண் வாசனை பெற்றுள்ளது. உறுதி என்பது, எதற்காக இந்த மண்ணின் வாசனை உலகம் முழுவதுமாக சுயநிர்மாணம் பெற்றதோ, அதற்காக உணர்வோடு உழைத்து எம்மை அதற்கு வரமாக்குவதாகும்.

எமது மண் மீட்பர்கள் எனப்படும் முன்னாள் போராளிகளின் விடுதலை - சொட்டும் வேட்கை இந்த மண்ணிலே வேர் விட்டு வேதமாகி, உறுதியாகி, உரமாகி உன்னதமாகியுள்ள நிலையில் அட, நாம் அந்த எல்லையில் நிற்கிறோமா? எல்லையிலிருந்து நழுவி விட்டோமா? அல்லது மாய வித்தைகள் செய்து சோடோபசாரம் செய்யும் உபசார உபத்திரவ கொண்டாட்டங்களில் கொடியேறி மோசம் போகிறோமா? அல்லது கண்காட்சிக் கூடங்களில் மதிமயங்கிக் கடவுளையே வர்த்தகப் பொருளாக்கிக் காலம் கழிக்கிறோமா?

கோடிக்கணக்கில் கட்டிடங்களையும் காணிகளையும் விருந்தயசாரங்களையும் கொள்முதல் செய்தும் மாய வித்தை செய்தும் தம்பட்டம் அடிக்கிறோமா? அவரவர் பிரிந்து விடுதலை வேட்கைக்கு விடுமுறை வழங்கிவிட்டோமா? போரில் மரணித்த உறவுகளின் குருதியிலேதான் நாம் வாழ்கிறோம் என்ற மாண்பினை மறந்துவிட்டோமா?

மண்ணில் உறங்கும் மரணித்த உறவுகளின் உறுதியை எண்ணி அரசியல் வாதிகளும் சரி, ஆன்மீக வாதிகளும் சரி செயற்படாமல் போவார்களாயின் இந்தமண் தினம் தினம் எதேச்சாதிகாரர்களினால் தீண்டப்படும் சீண்டப்படும். இந்த மண்ணின் கற்பு சூறையாடப்படும். அது இப்பொழுது நடந்து கொண்டேயிருக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டோர், 92000 பெண் தலைமைக் குடும்பங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், காணி அபகரிப்பு, தொல்லியல் தொடர்பாக உருப்படியான உறுதியான நடவடிக்கைகள் இன்னுமே வெற்றி பெறவில்லை. அண்மையில் ஒரு திருமண வைபவமே பேச்சு வார்த்தையை ஸ்தம்பிக்க வைத்துள்ளது. உறவுகளின் உறுதிக்கு நாம் இன்னும் நெருங்கவேயில்லை. மேடைகளுக்குக் குறைவேயில்லை. 13 பாடையை நோக்கி செல்லக் கூடாது. ஒற்றுமைக்காக உறவுகள் தந்த, தரும் உறுதி சோடை போதலாகாது.

**கே. எஸ். சிவஞானராஜா**
**கொக்குவில்**



ஜூன் 2 - இஸ்ரேலின் ஜனாதிபதித் தேர்தலில் ஐசாக் ஹெர்ஸ்வக் வெற்றியடைந்தார்.



ஜூன் 5 - G7 அமைப்பு வரி தவிர்ப்பு நடவடிக்கைகளை குறைக்கும் நோக்கத்தோடு கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் ஆகக் குறைந்த வரிவீதத்தை 15% ஆக குறைக்க அனுமதி வழங்கியது.

ஜூன் 11 - UFEA Euro சம்பியன் கிண்ணப் போட்டித் தொடரில் இங்கிலாந்தை வீழ்த்தி இத்தாலி வெற்றி பெற்றது.



ஜூன் 7 - ஜூனோ என்ற விண்கலம் வியாழனின் துணைக் கோளான Ganymede இல் தரை இறங்கியது. இதன் மூலம் 20 வருடங்களின் பின் ஒரு துணைக் கோளில் வெற்றிகரமாக தரை இறங்கிய விண்கலம் என்ற சாதனையைப் படைத்தது.





ஜூன் 9 - மொங்கோலியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் உக்னா குறெல்சுக் வெற்றி பெற்றார்.

ஜூன் 13 - COPA அமெரிக்க கிண்ணப் போட்டித் தொடரில் பிரேசிலை 1 - 0 என்ற கணக்கில் வீழ்த்தி ஆர்ஜென்டீனா கிண்ணம் வென்றது. இதில் ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த ஏன்ஜெல் டீ மரியா என்ற வீரர் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.




ஜூன் 23 - ICC உலகக் கிண்ண டெஸ்ட் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது.



ஜூலை - 3 மின்னல் தாக்குதலின் காரணமாக மேற்குக் கனடாப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீக்களால் 450 ஹெக்டேயர் பரப்பு எரிந்து சாம்பலானதுடன் 600இற்கும் மேற்பட்ட மரணங்கள் பதிவாகின.

ஜூலை 7 - ஹெயிட்டியின் ஜனாதிபதி ஜுவானல் மொய்ஸ் அவரது வீட்டில் வைத்துப் படுகொலைசெய்யப்பட்டார்.





ஜூலை 12 - ஐரோப்பாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக ஜேர்மனி மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளின் எல்லைப்பகுதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. மேலும் இதனால் 229 பேர் மரணமடைந்தனர்.



ஒகஸ்ட் - 1 அமெரிக்காவில் நடத்தப்பட்ட 2021இற்கான CONCACAF தங்கக் கிண்ணத்தை அமெரிக்கா வெற்றி கொண்டது.



ஜூலை 19 - யயிற்ளநுஷஷ்ஆஷ்ஜ நிறுவனம் தனது முதலாவது, மனிதர்களுடன் கூடிய மீளப் பயன்படுத்தக்கூடிய பரிசோதனை விமானத்தை நியூ செப்பர்ட் ரொக்கெட் உடன் சேர்த்து விண்வெளிக்குஅனுப்பிவைத்தது.



ஒகஸ்ட் - 3 கிரேக்க நாட்டில் காட்டுத்தீ ஆரம்பமாகியது




ஒகஸ்ட் - 14 ஹெயிட்டில் ஏற்பட்ட பாரிய நில நடுக்கம் காரணமாக 2100ற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர்.






ஜூலை 21 - 2032ற்கான கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் பரா ஒலிம்பிக் போட்டிகளை அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடாத்துவதற்கு சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அனுமதி வழங்கியது.

ஒகஸ்ட் - 15 ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை தலிபான்கள் கைப்பற்றினர்





ஒக்ரோபர் - 1 ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்படும் உலகப் புகழ் பெற்ற கண்காட்சியான 2020இற்கான World expo கண்காட்சி 2021 துபாயில் நடாத்தப்பட்டது

செப்ரெம்பர் - 5 மேற்கு ஆபிரிக்க நாடான குனியாவில் ஜனாதிபதி அலபா கொண்டே தலைமையிலான ஜனநாயக ஆட்சி கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆணையாளர் மமடி டாம்போயா தலைமையிலான இராணுவ ஆட்சி நிலை நிறுத்தப்பட்டது.






செப்ரெம்பர் - 15 அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய வல்லரசுகள் இணைந்து தமக்கிடையில் AUKUS என்றமுக்கூட்டு பாதுகாப்பு அமைப்பை உருவாக்கின. சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தலும் அவுஸ்திரேலியாவின் அணுஆயுதம் தாங்கிய கப்பல் படையை பலப்படுத்துவதும் இதன் நோக்கங்கள் ஆகும்.

செப்ரெம்பர் - 7 உலகின் முதல் நாடாக எல் சல்வடோர் இலத்திரனியல் நாணயத்தை தன் உத்தியோக பூர்வ நாணயமாக ஏற்றுக்கொண்டது.





ஒக்ரோபர் - 4 Fumio Kishida ஜப்பானின் 100 ஆவது பிரதமராக தெரிவு செய்யப் பட்டார்.



ஒக்ரோபர் - 3 உலகத் தலைவர்களின் பதுக்கப்பட்ட நிதி தொடர்பான ஆதாரங்களை உள்ளடக்கிய Pandora Papers வெளியாகி பெரும் சர்ச்சையை தோற்றுவித்தது.



ஒக்ரோபர் - 6 முதலாவது மலேரியாத் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியது.






நவம்பர் - 14 எதிர்பாராத மழை காரணமாக பசிஃபிக் பிராந்தியத்தின் வடமேற்குப் பகுதிகளில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

நவம்பர் - 26 தென்னாப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிகிரேன் திரிவு தொடர்பான உலக சுகாதார ஸ்தாபனத்தின் அவசர ஒன்றுகூடல் ஜெனிவாவில் மேற் கொள்ளப்பட்டது.

ஒக்ரோபர்-25சூடானிய இராணுவம் சதிப்புரட்சி மேற்கொண்டு அந்நாட்டின் பிரதமரை வீட்டுக்காவலில் வைத்தது. இதனைத்தொடர்ந்து அந்நாட்டின் ஜனாதிபதி அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தியதுடன் ஆட்சியையும் கவிழ்த்தார்.



ஒக்ரோபர் - 31 ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கெதிரான மாநாடு இங்கிலாந்தில் இடம் பெற்றது.





டிசம்பர் - 6 சீனாவின் மனித உரிமைகளுக்கு எதிரான போக்குகளை எதிர்த்து ஐக்கிய அமெரிக்கா சீனாவின் தலை நகர் பெய்ஜிங்கில் இடம் பெற இருந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டித் தொடரை புறக்கணிப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவித்தது.






டிசம்பர் - 18 ஃபிபா அரேபியன் கிண்ணத் தொடரில் கட்டாரை வீழ்த்தி அல்ஜீரியா கிண்ணம் வென்றது.





டிசம்பர் - 19 சிலி நாட்டின் ஜனாதிபதியாக கபிரியேல் போரிக் தெரிவு செய்யப்பட்டார்

காலைக்கதிர் Kalaikkathir

**MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECT TO SCHOOL FOR THE AWARD OF BURSARIES.**

# மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை

வினாத்தாள் ஆக்கம்
புலமைப்பாதை ஆசிரியர்
திரு.சு.அஜீந்தன் BA

## வினாத்தாள் - I

**1 மணித்தியாலம்**


**சுட்டெண் : .........**




### பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.


1. உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
2. மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.
4. ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன.
அவற்றுக்கிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் பொருந்தாத கூறுகள் உள்ள படத்தினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.




(1) (2) (3)

02. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?





(1) 4
(2) 5
(3) 3

03, 04 ஆகிய வினாக்களில் முதலிலி தரப்பட்டுள்ள படத்திற்கான மாற்றுப் படத்தினைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.



(1) (2) (3)



(1) (2) (3) .

05, 06 ஆம் வினாக்களில் தரப்பட்ட சொற்களுக்கு இடையிலான தொடர்பினை கொண்டு சரியான விடையினைத் தெரிவு செய்க.


05. பசி → உணவு எனின் தாகம் → ?

(1) மருந்து (2) கஞ்சி (3) தண்ணீா

06. மனிதன் → கால்கள் எனின் வாகனம் → ?

(1) பெற்றோல் (2) சில்லுகள் (3) சாரதி

07. தரப்பட்டுள்ள படத்தில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை



(1) 10
(2) 12
(3) 14

08. ஒரு வீதியில் இரண்டு கம்பங்களுக்கிடையே 2 கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது எனின், முதலாவது கம்பத்திற்கும் 10 ஆவது கம்பத்திற்கும் இடையிலான கொடிகளின் எண்ணிக்கை யாது?

(1) 20 (2) 16 (3) 18

09. பை ஒன்றில் சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள் ஆகிய நிறத்தில் பென்சில்கள் ஒரே அளவிலனதாக மூன்று வீதம் உள்ளன. பையில் இருந்து ஒரு சிவப்பு நிறப் பென்சிலை எடுப்பதற்கு எத்தனையாவது தடவை எடுத்தல் வேண்டும்?

(1) 3 (2) 7 (3) 5

10, 11 ஆகிய வினாக்களில் வெற்றுப் பெட்டிகளில் வரவேண்டிய கணிதக் குறியீடுகளை தெரிவு செய்க.

10. 648 ☐ 8 = 27 ☐ 3

(1) × + (2) ÷ × (3) ÷ +

11. 71 ☐ 13 = 14 ☐ 6

(1) − + (2) + − (3) + ×

12. 300 இன் 1/4 பங்கை, 5 ஆல் வகுத்தால் பெறப்படும் விடை

(1) 25 (2) 15 (3) 10

13, 14 ஆம் வினாக்களில் கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

13. அன்று கிராமத்திற்கு செல்லும் கடைசிப் பேருந்தினை குணபாலன் தவறவிட்டான். தனியாக நடந்தே வந்த அவர் , கிராம மயானத்தைக் கடந்த போது திடீரென ஓடி வந்த நாயைக் கண்டு பயந்து போனார்.

(1) சிரிப்பு வருதல் (2) அழுகை வருதல் (3) வியர்த்தல்

14. பாலன் ஒரு ஏழை மாணவன். குடும்பத்தில் வறுமை அதிகம். துரதிஸ்டவசமாக புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நோய்வாய்ப்பட்ட தந்தையும் காலமானார். அம்மாவின் முயற்சியால் பாடசாலைக்குச் சென்று உதவித் தொகையை எதிர்கொண்டு பரீட்சையில் சித்தியடைந்தான். பாலன் பற்றிய சரியான கூற்று

(1) அதிர்ஸ்டசாலி (2) முயற்சியாளன் (3) ஏழை

15. ஒரு லீற்றர் பெற்றோலில் 40km தூரம் பயணிக்கும் வாகனம், 100km தூரம் பயணிக்கத் தேவையான பெற்றோலின் அளவு யாது?

(1) 2 L 250ml (2) 2.5 L (3) 2 L 750ml

16.START என்ற ஆங்கில எழுத்தினை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் வடிவத்தினைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

17. PENCIL என்ற ஆங்கில எழுத்தினை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் வடிவத்தினைத் தெரிவு செய்க.




(1) (2) (3)


18. கீழுள்ள படத்திலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை



(1) 7 (2) 9 (3) 5


19, 20 ஆகிய வினாக்களில் புள்ளிக்கோட்டில் வரவேண்டிய இலக்கத்தின் கீழ்க் கோடிடுக.

19.




(1) 17 (2) 19 (3) 21

20.




(1) 18 (2) 20 (3) 22

மிகுதி ஞாயிறு இதழில் ....

புதிய கல்வியாண்டு - 2022
LEARN EASY - KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
ZOOM வகுப்புக்கள்
Grade 2 - O/L
Medium
TAMIL / ENGLISH
ICT Tamil
Maths History
English Science
Commerce Sinhala
Learn Easy புலமைவளரி
Call: 76667 4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk







# கல்விக்கதிர்



# உலகை ஆளும் தங்கம்

● கனக.தீபகாந்தன்

தங்கத்தின் மீதான மனித குலத்தின் தேடல் எப்போது உருவானது என நாம் ஆராய முற்பட்டால் தங்கம் எப்போது உருவானது என்பதையும் அறிய வேண்டுமல்லவா?

விண்வெளியில் 1,000 பில்லியன் கிலோ மீற்றருக்கு அப்பால் 13 கோடி ஆண்டுகளுக்கு முன் நடந்த பிரமாண்ட நட்சத்திரங்களின் மோதலினால் தங்கம், பிளாட்டினம் போன்ற உலோகங்கள் உருவாகியிருக்கலாம் என்ற கூற்று அண்டவெளி ஆராய்ச்சியின்போது பூமிக்கு வந்த ஈர்ப்பு அலைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாம் வாழும் இந்த பூமியில் மனித இனம் உருவாகி அதன் பின்னர் சுமார் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தொன்மவியல் குகைகளில் தங்கமானது துகள்களாக இருப்பதை இன்றைய தொல்பொருள் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறிந்துள்ளனர், எனினும் குகைகளில் முன்னதாகவே தங்கம் இருந்ததா அல்லது நம் முன்னோர்கள் தங்கத்தை சேமித்து தம்மோடு வைத்திருந்தார்களா என அறிய முடியவில்லை.

பண்டைய எகிப்தில் தங்கத்தை முதலில் பயன்படுத்தியதாக தெரிகிறது இதற்கு சான்றாக பிரமிடுகளில் கிடைத்த தொல்பொருள்களில் தங்கம் அதிகமாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோல் பண்டைய கிரேக்கத்தின் வரலாற்றிலும் தங்கமானது அதி உயர் மதிப்புடைய பொருளாகவும் சமூகத்தகுதியை வெளிப்படுத்தும் அளவுகோலாகவும் உச்சத்திலும் காணப்பட்டது.

நமது பண்டைய தமிழர் வரலாறுகளிலும் தங்கத்தின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதை பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றன, அத்துடன் கோயில்கள், சிற்பங்கள், ஆபரணங்கள், தளவாடங்களின் பலவற்றிலும் தங்கம் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளதை தொல்பொருள் ஆய்வுகள் மூலம் அறிய முடிந்தது. தங்கத்தை நம் முன்னோர் பயன்படுத்திய அதியுயர் தொழில்நுட்ப அறிவு இதன் மூலம் நாம் அறிந்து கொண்டோம்.

தங்கத்தின் மீதான அதீத ஈர்ப்பின் காரணமாக நாணய பரிமாற்றங்களும் பண்டமாற்ற முறைகளிலும் தங்கத்தின் ஆதிக்கம் உயர்ந்துகொண்டே வந்தது. மேலும் உலகம் முழுவதும் தங்கத்தின் மீதான ஆதிக்கத்தால் ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய அம்சமாக தங்கமானது திகழத் தொடங்கியது.

1792 பின்னர் அமெரிக்கா தங்கத்தின் விலையை டொலரில் ஒரு நிலையான விலைக்கு நிலை நிறுத்தியது, இதுவே 1873 பின்னர் அமெரிக்காவானது பொருளாதாரத்தில் உலகளவில் உயர்வதற்கு வழிவகுத்தது.

நம் உலகத்தை வடிவமைப்பதில் தங்கமானது பெரும்பங்கை கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை, அன்று தொட்டு இன்று வரை தங்கத்தின் மீதான தேடலினால் மனித குலம் கண்ட அழிவுகளையும் பல வரலாறுகள் நமக்கு சான்று பகிர்கின்றன.

தென்னாபிரிக்காவில் தான் தங்கம் அதிகமாக கிடைக்கிறது. மேலும் கனடா, அமெரிக்கா, கொரியா, ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளிலும் தங்கம் கிடைக்கிறது. இதுவரை 1,71300 தொண் தங்கம் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. இதில் 50 % நகைகளுக்கும் 40 % கட்டிகளுக்கும் 10% தொழிற்சாலை உற்பத்தி பொருள்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

கரட் என்ற அலகால் தங்கம் மதிப்பிடப்படுகிறது. 24 கரட் என்பது தூய தங்கம் ஆகும், அதில் ஆபரணங்கள் செய்ய முடியாது 22 தொடக்கம் 9 கரட் வரை உள்ள தங்கத்திலேயே ஆபரணங்கள் உருவாக்கப்படுகின்றன. தங்கத்துடன் செம்பு, வெள்ளி போன்ற உலோகங்கள் கலக்கப்பட்டு ஆபரணங்கள் வடிவமைக்கப்படுகிறன.

தங்கத்தின் விஞ்ஞான குறியீடு Au எனவும், அணு எண் 79 ஆகவும், அடர்த்தியானது 19.3 ஆகவும் விஞ்ஞானம் கூறுகிறது.


இன்றைய வானியலில் விண்கலங்களின் உற்பத்தியிலும் செயற்கைக்கோள் உருவாக்கத்திலும் தங்கம் அதியுயர் மின்கடத்தியாக பயன்படுத்தலின் தேவை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியான 2021.12.25 இல் நாசாவினால் விண்ணிற்கு ஏவப்பட்ட கால இயந்திரத்துக்கு ஒப்பானதாக கருதப்படும் ஜேம்ஸ் வெப்ஸ் பேஸ் தொலைநோக்கியானது சூரியக் கதிரின் வெப்பத்தை தாங்கும் வண்ணம் அதன் தகடுகள் முழுவதும் தங்கத்தால் மூடப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. இத் தொலைநோக்கி மூலம் 135லட்சம் மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பிரபஞ்சத்தில் ஒளிர்ந்த நட்சத்திரங்களின் ஒளியை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இதைவிட வேற்றுக்கிரகவாசிகள் தங்கம் மீதான தேடலுக்காக பூமியை பயன்படுத்தியதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் உள்ளன. ஏன் உலகின் ஒவ்வொரு மூலையிலும் தங்கத்திற்காக நடக்கும் சட்ட விரோதச் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டு தானே இருக்கிறோம்?

ஒரு நாட்டின் பொருளாதாரம் தங்கத்தின் இருப்பை வைத்து மதிப்பிடப்படுகிறதென்பது நமக்குத் தெரியும் அல்லவா? இன்று நமது நாட்டின் தங்கத்தின் இருப்பு பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. மேலும் இருப்பில் உள்ள தங்கம் மத்திய வங்கியினால் விற்பனையும் செய்யப்படுகிறதென்பதும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறாயினும் ஓர் உலோகம் உலகை ஆள்கிறது என்பதை நாம் அறிந்து கொண்டோமல்லவா. தங்க வேட்டை தொடரும்.





## இலங்கையின் மிகப்பெரிய இரத்தின கல்

இலங்கையில் உள்ள ரத்தினபுர என்கிற இடத்தில் அதிக அளவிலான விலை உயர்ந்த இரத்தின கற்கள் கிடைத்து வருகின்றன.பொதுவாக பழமையான பொருள்களுக்கு எப்போதும் மதிப்பு கூடிக்கொண்டே இருக்கும். நமது வீடுகளில் இருக்கக்கூடிய பழமையான பொருள்களுக்கு கூட அதிக மதிப்பு இருக்க வாய்ப்புண்டு. சில நேரங்களில் வீடு கட்டும்போது பூமிக்கு அடியில் தோண்டினால், விலை உயர்ந்த தங்க புதையல்கள் அல்லது பழங்கால பொருட்கள் கண்டெடுக்கப்படும். எப்போதாவது ஒரு முறை தான் இது போன்ற புதையல் நிகழ்வுகள் நடக்க வாய்ப்புள்ளது.

ஆனால் இலங்கையில் உள்ள ரத்தினபுர என்கிற இடத்தில் அதிக அளவிலான விலை உயர்ந்த இரத்தின கற்கள் கிடைத்து வருகின்றன. இலங்கையின் தலைநகரான கொழும்பில் இருந்து 85 கிலோ மீட்டர் தொலைவில் இந்த ரத்தினபுர உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக ஏராளமான விலை உயர்ந்த இரத்தின கற்கள் இந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 3 மாதத்திற்கு முன்பு மிக பெரிய நீல நிற இரத்தின கல் ஒன்று அங்கு கிடைத்தது.


அந்த நீலக் கல்லை ஆராய்ந்து பார்த்துவிட்டு இது தான் உலகிலேயே மிக பெரிய நீல இரத்தின கல் என்று அறிவித்தனர். தேசிய ரத்தின கற்கள் மற்றும் ஆபரண ஆணையம் என்கிற அரசு நடத்தும் நிறுவனமானது இந்த விலை உயர்ந்த நீல ரத்தினக் கல்லிற்கு சான்றளித்துள்ளது. மேலும் கூடிய விரைவில் சர்வதேச சந்தையில் இந்த நீலக்கல்லை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்த இரத்தின கல்லை கொண்டு இன்னும் சில பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் திலக் வீரசிங்க தெரிவித்துள்ளார். இந்த பெரிய நீல கல்லிற்குள் இன்னும் சில தூய்மையான கற்கள் இருக்கக் கூடும், ஏற்கனவே ஒன்று அல்லது இரண்டு தூய்மையான கற்களை வெளியில் இருந்து பார்க்க முடிகிறது என்று கூறியுள்ளார்.

இந்த இரத்தின கல்லை இன்னும் சர்வதேச ரத்தின நிறுவனங்கள் சான்றளிக்கவில்லை. மேலும் இந்த நீலக் கல்லின் சிறப்பம்சமாக இதில் உள்ள அலுமினியம் ஆக்சைடு, டைட்டானியம், இரும்பு மற்றும் நிக்கல் ஆகிய வற்றை இரத்தின கல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த விலை உயர்ந்த நீல இரத்தின கல்லிற்கு 'குயின் ஆஃப் ஏசியா' (ஆசியாவின் ராணி) என்று பெயர் சூட்டி உள்ளனர்.

இந்த கல் சுமார் 310 கிலோ எடை கொண்டது. இதன் மதிப்பை ஆய்வு செய்தபோது மிக அதிக விலைக்கு இது போகும் என்று வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார சூழ்நிலையில் இந்த இரத்தின கல்லை உலகினருக்கு அறிமுகம் செய்து, சர்வதேச சந்தையில் அதிக விலைக்கு இதை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

# இலங்கையின் குளங்கள்



கி.பி. 300 காலப்பகுதியில் பண்டுகாபய மன்னனின் காலத்தில் ஆரம்பகால நீர்ப்பாசனங்களிலிருந்து அடுத்து வந்த ஆயிரம் ஆண்டுகளாக தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்ட புராதன இலங்கையின் நீர்ப்பாசன கைத்தொழில் புராதன உலகில் இருந்த நீர்ப்பாசன முறைமைகளிடையே மிகவும் சிக்கலானவற்றைக் கொண்டிருந்தன. நிலக்கீழ் கால்வாய்களை அமைப்பதற்கு மேலதிகமாக, நீரைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக முழுமையாகவே செயற்கை நீர்த்தேக்கங்களை அமைத்த முதல் இனங்களிடையே சிங்களவர்களும் இடம்பெற்றிருந்தனர். இந்த நீர்ப்பாசன முறைமை பராக்கிரமபாகு மன்னன் ஆட்சிபுரிந்த காலத்தில் (கி.பி.1153 - 1186) விரிவாகப் புனரமைக்கப்பட்டுத் தொடர்ந்து விரிவாக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றின் பிரகாரம், முதலாவது வாவி கி.மு. 437 - 367 வரை ஆட்சிபுரிந்த பண்டுகாபய மன்னனால் அமைக்கப்பட்டது. அவர் மூன்று வாவிகளை, அதாவது, அபயவாவி, காமினிவாவி, ஜயவாவி என்பவற்றை அமைத்ததார் எனக் கூறப்பட்டாலும் தற்பொழுது பசவக் குளம் என்ற வாவியை மட்டும் அடையாளம்காணமுடியும். பண்டுகாபய மன் னனின் பின்னர் பராக்கிரமபாகு மன்னன், தற்பொழுதுகூட விவசாயத்துக்காக நீர் வழங்கப்படுகின்ற பராக்கிரம சமுத்திரம் உள்ளிட்ட பல வாவிகளை அமைத்துள்ளார். இலங்கையை ஆட்சிசெய்த மன்னர்கள் பலர் ரஜரட்டை முழுவதிலும் உள்ள வாவிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நிர்மாணிப்பதற்கும் பங்களிப்புச் செய்துள்ளனர் என்பதைக் குறிப்பிட முடியும்.

நீர்ப்பாசன எண்ணக்கரு மேம்பாடடைந்தமை மானிட நாகரிகத்துடன் மேலெழுந்து வந்தது. பயிர்ச் செய்யும் தேவைக்கு மேலதிகமாக புத்த தர்மத்தின் கலாசார வழித்தோன்றலையும் புராதன இலங்கையர்கள் நீர்ப்பாசன நீர் வழங்கும் விவசாயத்துக்குப் பயன்படுத்தினர்.


குளமும் - கோயிலும் (தாதுகோபுரமும்) என்ற புகழ் பெற்ற வரலாற்றுரீதியான எண்ணக்கருவின் பிரகாரம் ஒரு கிராமத்தில் முதலில் பன்சலையும் (புத்த கோயிலும்) அதன் பின்னர் குளமும் உருவானது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அகழப்பட்ட நல்ல நிலையிலிருந்த மண் தாதுகோபுரம்(ஸ்தூபம்) அமைக்கப் பயன்படுத்தப்பட்டது.

அடுத்த வாரம் தொடரும்...

# சர்வதேசத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்

## புனிதரான கதையும் அவரைச் சந்தித்த புதுமையான அனுபவமும்

- கலாநிதி ஞுபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம். ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர்- யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)



### 26 ஆண்டுகள் திருச்சபையின் தலைவராக திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்

உரோமையில் நகரம் என அழைக்கப்படும் வத்திக்கான் நகரம் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடம். உரோமாபுரியின் ஆயரும் உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவருமான திருத்தந்தையின் வாசஸ்தலம். இங்குதான் திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் கத்தோலிக்க திருச்சபையின் 264ஆவது திருத்தந்தையாக - 26 ஆண்டுகள் 168 நாள்கள் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக பணியாற்றி கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக அதிக காலம் பணியாற்றிய திருத்தந்தையர்கள் வரிசையில் 3ஆம் இடம் பிடித்தவர்.

### 20ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவர்

1920 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி போலந்தில் ஆசிரியரான தாய்க்கும் இராணுவத்தினரான தந்தைக்கும் பிறந்தத இவர் 9 வயதில் (1929) தாயையும், 12 வயதில் (1932) ஒரே சகோதரரையும், 21 வயதில் (1941) தந்தையையும் இழந்தவர்.

24 ஆவது வயதில் (1939) 2ஆம் உலப்போர் காலத்தில் போலாந்து ஹிட்லரின் பிடியில் இருந்த போது இராணுவ ஆட்சியையும் அடிமைத்தன வாழ்வையும் அனுபவித்தவர். 26 வயதில் (1946) குருப்பட்டத்தையும், 28 வயதில் (1948) கலாநிதிப் பட்டத்தையும், 33 வயதில் (1953) இரண்டாவது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். 38 வயதில் (1943) ஆயராகவும், 43 வயதில் (1964) பேராயர் ஆகவும், 47 வயதில் (1967) கருதினால் ஆகவும், 58 வயதில் (1978) திருத்தந்தை ஆகவும் பணியின் படிகளில் ஏறியவர்.

மூவர் திருத்தந்தையர்களாக இருந்த ஆண்டு என வர்ணிக்கப்படும் 1978ஆம் ஆண்டு இரும்புத்திரை போடப்பட்ட கம்மியூனிஸ நாட்டில் இருந்து வந்து பல சாதனைகளைப் படைத்து 20ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவர் எனப் போற்றப்பட்டவர்.

### போலந்தின் முதலாவது திருத்தந்தை


1978ஆம் ஆண்டு ஒக்டோபர் 16இல் திருத்தந்தையாகி கரோல் யோசேப் வொய்த்திவா என்ற தன் பெயரை இரண்டாம் அருள் சின்னப்பர் என மாற்றிய இவர் 2005 ஏப்ரல் 2ஆம் நாள் காலமானார். அடிமைத்தன வாழ்வில் கற்சுரங்கத்தில் கல்லுடைத்துப் பிய்ந்துபோன கைகளோடும் தொழிற்சாலையில் சுண்ணாம்பு பட்டு அவிந்து போன கால்களோடும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்ட நிலையில் இரவிரவாக இரகசியமாக படித்து இரண்டு டாக்டர் பட்டம் பெற்ற இவர் ஒரு நடிகன் - கவிஞன் - உதைபந்தாட்ட வீரன். மலையேறுதல் - பனிக்கட்டி சறுக்குதல் - நீந்துதல் என்பன இவரின் விருப்பமான பொழுது போக்குகள்.

போலந்து நாட்டைச் சேர்ந்த முதலாவது திருத்தந்தை - 400 ஆண்டுகளுக்குப் பின்னர் இத்தாலியர் அல்லாத ஒரு திருத்தந்தை - 1,340 பேருக்கு அருளாளர் பட்டமும் 483 பேருக்கு புனிதர் பட்டமும் வழங்கியவர். தமது 26 ஆண்டு ஆட்சிகாலத்தில 129 நாடுகளுக்கு பயணம் செய்தவர். இந்தப் பலமான பின்னணியோடு அரசியற் பலமோ அதிகார வல்லமையோ எதுவும் இல்லாத போதும் தமது திருத்தந்தை பதவியையும் ஆன்மீக வல்லமையையும் பணயம் வைத்து யாருக்கும் அஞ்சாமல் முழு உலகிற்கும் கேட்கும் விதமாக நீதியை உரத்துச் சொன்னவர். உலக சமாதானத்திற்காக - அது யாருக்கு எதிரான குரலாக இருந்தாலும் - எந்த ஐயமோ பயமோ இன்றி வலியுறுத்தி வந்தவர்.

### இளைஞர்கள் கவர்ந்தவர்

குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரையும் அன்பு செய்தவர். நோயாளர்களை,கைவிடப்பட்டவர்களை, அடக்குமுறைக்கு உட்பட்டவர்களை கனிவோடு அணுகியவர். இளைஞர்கள்பால் அளவு கடந்த அன்பு கொண்டு அரவணைத்தவர். உலக இளையோர் தினங்களில் உலகெங்கும்வாழ் இளைஞர்கள் பலர் தம் அன்பை வெளிப்படையாக எண்பித்தவர். இதனால் நட்சத்திரங்களின் படங்களைக் கொண்டு திரிந்த பல இளைஞர்கள் திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பரின் படங்களைக் கொண்டு திரியத் தொடங்கினார்கள். அவரின் படங்கள் பொறிக்கப்பட்ட பெனியன்களை அணியத் தொடங்கினார்கள். அவரின் பெயரையும் படத்தையும் தம் நெஞ்சுகளிலும் கைகளிலும் பச்சை குத்தும் அளவிற்கு அவரில் அன்புப் பைத்தியமானாகள். மரணப்படுக்கையில் இருந்து போது தம்மைப்பார்க்க வந்த இளைஞர்களிடம் நான் உங்களைத்தேடி வந்தேன் - நீங்கள் ஆள் கொள்ளப்பட்டர்கள் - இப்போது என்னிடம் வந்திருக்கிறீர்கள் என்றார்.

திருச்சபையின் இறுக்கமான சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் மிகவும் நுணுக்கமாகவும் பிரமாணிக்கமாகவும் கடைப்பிடித்து திருச்சபையின் புனிதத்தையும் இறுக்கத்தன்மையையும் என்றும் பாது காக்க விரும்பி நின்றார். செயற்கை முறைக்குடும்பக் கட்டப்பாடு - கருக்கலைப்பு - செயற்கை மனித உயர் உருவாக்கம் - ஒழுங்கற்ற திருமணம் - ஓரினத்திருமணம் என்பவற்றிற் கெதி




ராக தெளிவாகவும் அனைவர்க்கும் விளங்கும் விடயமாகவும் ஐயம் திரிபற கருத்துகளை விளக்கினார். பெண்கள் குருத்துவம் - குருக்கள் திருமணம் - மரண தண்டனை - கருணைக் கொலை என்பவற்றிற் கெதிராக தமது ஆட்சிக் காலத்தில் ஒரே நிவைப்பாடுதான் என்பதை தெளிவாக்கினார்.

### பல பட்டங்களும் விருதுகளும் அவரைத் தேடி வந்தன

பல பட்டங்களும் விருதுகளும் அவரைத் தேடி வந்த போது அவற்றை இறைவனின் மகிமைக்காகவும் தமது கொள்கைளை வலுப்படுத்தவும் தமது பணியை இன்னும் நிரூபிக்கவும் பெற்றுக்கொண்டார். 1994ஆம் ஆண்டு ரைம்ஸ் சஞ்சிகை ஆண்டின் சிறந்த மனிதராக இவரைப் பிரகடனப்படுத்தியது. 2004ஆம் ஆண்டு ஐரோப்பிய சமாதான விருது இவரைத் தேடி வந்தது. போலாந்துப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கியது. உலகப் புகழ் பெற்ற பி.பி.சி நிறுவனம் தலைசிறந்தவர் என வர்ணித்தது. உலக ஊடகங்கள் அவரை என்றும் முன்னுரிமைப்படுத்திக் காட்டத் தொடங்கின.

### புனிதர் பட்டம் அளிப்பதற்கான விசாரணைகள உடனேயே ஆரம்பம்


புனிதர் பட்டம் அளிப்பதற்கான விசாரணைகள் ஒருவர் இறந்து ஐந்து ஆண்டுகள் பின்னரே பொதுவாக ஆரம்பம் ஆகும். ஆனால் திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பர் இறந்த சிறிது காலத்திற்குள்ளேயே அவருக்கு புனிதர் பட்டம் அளிப்பதற்கான விசாரணைகள் தொடங்கப்பட்டன. திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் அவர்கள் திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பர் இறந்த சிறிது காலத்திலேயே புனிதர் பட்டம் அளிப்பதற்கான விசாரணைகள் தொடங்க ஆணையிட்டு ஐந்து ஆண்டு கால எல்லைக்கு விதிவிலக்கு அளித்தார்.

### அருளாளர் என அறிவிப்பு

திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளன்று திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பரை அருளாளர் என அறிவித்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பருக்கு அருளாளர் பட்டம் அளிக்கப்பட்ட சில மணி நேரம் சென்ற உடனேயே அவருடைய பரிந்துரையின் பயனாக ஒரு புதுமை நிகழ்ந்ததாக செய்தி வந்தது. கோஸ்ட்ரரிக்கா நாட்டு புளோரிபெத் மோரா என்ற பெண்மணிக்கு ஏற்பட்ட மூளை இரத்த அழற்சி திருத்தந்தை இரண்டாம் இரண்டாம் அருள் சினனப்பரை நோக்கி மன்றாடியதன் விளைவாக அற்புதமான விதத்தில் மறைந்ததாகவும், அதற்கு வைத்தியர்களால் விளக்கம் தர இயலவில்லை என்றும் செய்தி வெளியானது. இந்த நிகழ்வை ஆய்ந்த வத்திக்கான் பேராயம் அதை ஒரு புதுமை என்று அறிக்கையிட்டது.

### இரு திருத்தந்தையர்களுக்கும் புனிதர் பட்டம்

திருத்தந்தையர்கள் இருபத்தி மூன்றாம் அருளப்பர், இரண்டாம் அருள் சினனப்பர் ஆகிய இரு திருத்தந்தையர்களுக்கும் புனிதர் பட்டம் ஒரே நாளில் - 2014ஆம் ஆண்டு ஏப்பிரல் 27ஆம் நாள் - வழங்கப்பட்டமை ஒரு சிறப்பு நிகழ்வாயிற்று. அத்தோடு திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் திருத்தந்தைப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற திருத்தந்தையான பதினாறாம் பெனடிக்ற் ஆகிய இருவரும் இணைந்து அந்நிகழ்வில் கலந்து கொண்டமையும் வரலாற்றுச் சிறப்பானதாகும். புனிதர் பட்டம் வழங்குவதற்காகத் தேர்ந்துகொள்ளப்பட்ட நாள் 2014 ஏப்பிரல் 14 ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்கருக்குச் சிறப்பான நாள். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வருகின்ற அந்த ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய மாலை




யில்தான் திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பர் இறந்தார். மேலும் பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறான அந்த நாள் இறை இரக்க ஞாயிறு என்ற பெயரால் கொண்டாடப்பட வழிவகுத்தவர்.

உலகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்த சுமார் 150 கர்தினால்மார், 700 ஆயர்கள் மற்றும் 1,000 குருக்களும் கலந்துகொண்டனர்.

நான் சந்தித்த திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சினனப்பர் தம் அருள் வரங்களை தேவையில் இருக்கும் அனைவர் மேலும் பொழிவாராக.











# மரண அறிவித்தல்



## விநாயகமூர்த்தி நீலலோஜனன்

(இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர்)

இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர் விநாயகமூர்த்தி நீலலோஜனன் கொழும்பில் கடந்த ஞாயிறன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.விநாயகமூர்த்தி – கங்காதேவி தம்பதியரின் அன்பு மகனும், கொழும்பு றோயல் கல்லூரியின் இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியை புஷ்பராணியின் கணவரும், அமரர் ஷயாகுமாரி சிறிகாந்தா (UK), ஷர்ணியகுமாரி விக்னராஜா(uk) ஆகியோரின் சகோதரரும், ஶ்ரீகாந்தா (uk), விக்னராஜா(uk), நாகதாசன், காலஞ்சென்ற சிவதாசன், நிர்மலராணி பூலோகசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், நிஷோதா அனுராஜ் (பிரதி அதிபர், Gate Way சர்வதேச பாடசாலை), நிஷாந்தனன் (இலத்திரனியல் பொறியியலாளர் USA ) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.அனுராஜ், லோரா மெலன் ஆகியோரின் மாமனாரும், அ.பிரியன் (தரம் 10 Gate Way மாணவன், அ.பூர்ணிமா (தரம் 6, Gate Way மாணவி) ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த புதன்கிழமை 12ஆம் திகதி காலை 8 மணி முதல் கொழும்பு, பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணி முதல் இறுதி கிரியைகள் நடைபெற்று, மாலை 4.30 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**நிஷோதா (மகள்) - 0777745521**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.01.2022 இல் வெளியிடப்பெற்றது.

# பாலியல் பிரச்சினை, மலட்டுத்தன்மை கொவிட் தடுப்பூசியால் ஏற்படமாட்டாது!

## விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 16

கொவிட் தடுப்பூசியால் பாலியல் பிரச்சினைகள் மற்றும் மலட்டுத்தன்மை என்பன ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று தொற்றுநோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இன்று உலக நாடுகள் கொவிட் நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசி வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளன. இலங்கையிலும் தற்போது மூன்றாவது டோஸ் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதால் அதன் பின் விளைவாக, பாலியல் பிரச்சினைகள், மலட்டுத்தன்மை மற்றும் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன என வதந்திகளும் இடம்பெற்றுவருகின்றன. மக்கள் மத்தியில் அச்சமும் இடம்பெறுகின்றன. மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. கொவிட் தடுப்பூசியால் இவ்வாறான பக்கவிளைவுகள் ஏற்படும் என்பதற்கான எவ்வித தகவல்களும் இதுவரையிலும் நிரூபிக்கப்படவில்லை என்பதுடன் அவ்வாறான முறைப்பாடுகளும் எமக்குக் கிடைக்கவில்லை.

ஆனால், கொவிட் தொற்று ஏற்பட்ட ஒருவருக்கு பிற்காலத்தில் நோய் பின் விளைவு காரணமாக இந்தக் குறைபாடுகள், அதாவது பாலியல் பிரச்சினைகள் மற்றும் மலட்டுத்தன்மை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே, வதந்திகளை நம்பாது தமது ஆரோக்கியத்துக்காக தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டு இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து பாதுகாப்பு பெறுமாறும் விசேட வைத்திய நிபுணர் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

கொவிட் தொற்றால் ஏற்படக்கூடிய மரணங்களை குறைத்துக் கொள்வதற்கு பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது மிகச் சிறந்தது என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் விசேட வைத்திய நிபுணருமான நீலிகா மல்லவிகே தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதன் அவசியம் தொடர்பாக மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், இடம்பெற்ற இந்த நிகழ்வில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொவிட் தொற்றால் அதிகமாகப் பாதிக்க கூடியவர்களாக முதியவர்கள் காணப்படுகின்றார்கள். பொதுவாக 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நீண்டகால நோய்களை கொண்டவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றமையுடன், மரணங்களையும் சந்திக்கின்றனர்.

இலங்கையில் கொவிட் டெல்டா வகை திருப்பினால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. தற்போது ஒமிக்ரோன் திரிவு நாட்டில் மிகவும் வேகமாக பரவும் நிலை காணப்படுகின்றது.

டெல்டா வகை வைரஸ் திரிவுடன் ஒப்பிடும்போது ஓமிக்ரோன் வைரஸ் திரிவு ஊடாக பாதிப்புக்கள் மற்றும் மரண வீதம் என்பன குறைவாகக் காணப்படுகின்ற போதிலும், இந்த ஒமிக்ரோன் வைரஸ் டெல்டா வகை திரிவை விட மிக வேகமாக பரவக்கூடியது.

அமெரிக்காவில் நாளொன்றிற்கு ஒரு பில்லியன் தொற்றாளர்கள் பதிவாகின்றனர். வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்படுகின்றன. அதி தீவிர சிகிச்சை பிரிவுகளில் இடப்பற்றாக்குறை காணப்படுகின்றது. அத்துடன் நாளொன்றுக்கு சுமார் 1500 – 2000 பேர் வைரஸ் தொற்றால் இறக்கின்றனர்.

அதேபோன்று பிரித்தானியாவிலும் வைரஸ் தொற்றால் நாளொன்றுக்கு சுமார் 300 பேர் மரணிக்கின்றனர். அதிதீவிர சிகிச்சை பிரிவுகளில் இடப்பற்றாக்குறை காணப்படுகின்றது.

அந்த நாடுகளில் தடுப்பூசித் திட்டங்கள் வெற்றிகரமாக செயற்பட்ட போதிலும், அதிகளவிலான நோயாளர்கள் மற்றும் மரணங்கள் பதிவாகின்றன. இதனால் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக என்ன பயன் காணப்போகின்றோம் என்பது தொடர்பாகப் பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்புகின்றனர். இதற்கு முக்கிய காரணம், அமெரிக்காவில் 12.5 வீதமானோர் அதாவது 85 மில்லியன் மக்கள் ஒரு டோஸ் தடுப்பூசியைக்கூட பெற்றுக்கொள்ளாதவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் அங்கு நோய் தொற்று மிக விரைவாகப் பரவுகின்றது. வைத்தியசாலைகளில் அனுமதிக்க கூடிய நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றன. இதன் காரணமாக அதி தீவிர சிகிச்சை பிரிவுகளில் இடப்பற்றாக் குறை காணப்படுகின்றது.

ஐரோப்பியா மற்றும் அநேகமான நாடுகளிலும் இந்த நிலைமை காணப்படுகின்றது. அவர்கள் தடுப்பூசியை எதிர்க்கின்றனர். அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது இலங்கை அதைவிட முன்னிலையில் இருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், கொவிட் தொற்று ஏற்பட்டால் மிக விரைவில் மரணத்தை சந்திக்க கூடியவர்களாக முதியோர்கள் மற்றும் தொற்றுக்கு உள்ளானவர்கள் காணப்படுகின்றனர். தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொள்வதன் ஊடாக நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலை களில் சேர்க்கக் கூடியவர்களின் எண்ணிக்கையை 50 வீதமாகக் குறைத்துக் கொள்ள முடியும். ஆனால் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்வதால் பாதிக்கப்படுவோர் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட வேண்டிய நிலை 90 சத வீதத்தால் குறை வடையும் என்றும் அவர் தெரிவித்துள் ளார். எனவே, மக்கள் வதந்திகளை நம்பி அச்சம் கொள்ளாது, தம் உடல் நலத்துக்காக பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது மிகவும் சிறந்தது என்றும், அதன் ஊடாக நாட்டின் நாளாந்த நடவடிக்கைகளை எவ்வித தடையுமின்றி முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் விசேட வைத்திய நிபுணருமான நீலிகா மல்லவிகே மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழருக்கு சிறந்த தீர்வு கிடைக்கும் ஆண்டாக இந்த ஆண்டு அமையும்!

## இரா.சாணக்கியன் உறுதி







தமிழர்களுக்கு சிறந்த தீர்வொன்று கிடைக்கக் கூடிய ஆண்டாக இந்த ஆண்டு அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் கலாசார பிரிவின் ஏற்பாட்டில் நந்தவனம் முதியோர் இல்லத்தில் பொங்கல் நாளான வெள்ளிக் கிழமை பொங்கல் விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். நாங்கள் அனைவரும் நம்பிக் கையுடன் பயணிக்கவேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியிருந்தார். இதேவேளை, குறித்த நிகழ்வில் கிராம முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பல் வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய மக்கள் சக்தி கல்விக்கே முன்னுரிமை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாவகச்சேரி மந்துவில்ல் தெரிவிப்பு



ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது எனவும், எனவே கல்வியை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசியமானது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தென்னை ஓலைகளாலான கூரை வேய்ந்த சிறிய கூடங்களில் படிக்கும் குழந்தைகள் இந் நாட்டில் உள்ளனர் எனத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், அத்தகைய காலங்கள் சிறப்பான முடிவைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் எதிர்காலம் குழந்தைகளால் கையகப்படுத்தப்படுகிறது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான பிள்ளைகளுக்கு கல்வியை சிறந்த முறையில் தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது அதிகாரிகளின் பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கல்வியையே முதன்மை முன்னுரிமையாகக் கருதுவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதாகவும் தெரிவித்தார்.

பொது நலன்புரி அரசியலில் ஈடுபடுவதாக சில சிறு பிரிவினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு அனுதாபம் தெரிவிப்பதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், தென்னை ஓலைகளாலான வகுப்பறையில் ஒரு ஜோடி செருப்பு கூட இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு படிக்கும் ஆயிரக் கணக்கான குழந்தைகளுக்கு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய தான் ஒரு போதும் தயங்கமாட்டேன் என்றும் கூறினார்.

சாவகச்சேரி மந்துவில் பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 253

**649.எவற்றை நினைவில் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்?**

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் (TRRO) தோன்றி இயங்கிய 1977 காலப் பரப்பு வேறு. இன்றுள்ளது வேறு. அன்றும் இவர்கள் விடுதலைப் போராளிகளுக்கு உதவி தருகிறார்கள் என்றே நெருக்குதலுக்கு ஆளாக்கப்பட்டார்கள். ஆயினும் தொடர்ந்து பணியாற்றக் கூடிய பரிமாணத்தை அரசியல் சுழிவுகளால் எங்களால் தக்கவைத்துக் கொள்ள முடிந்தது. பின்னர் அவை தமிழ் மக்களின் வேறுபாடுகளாலேயே அழிக்கப்பட்டன.

எவ்வாறானாலும் 1977 இல் இருந்து வாழ்வாதாரத்துக்கும் புனர்வாழ்வுக்கும் அப்பொழுதுகளிலே சென்று பயணித்தவை தவிர தேசிய கட்டமைப்புக்கென்று விதைக்கப்பட்டவையெல்லாம் பெரும்பாமையால் அழிக்கப்பட்டன. உதாரணத்திற்கு எல்லைக் கிராமங்களான ஒதியமலையில் (இது பதவியாவை அடுத்தது. முன்னர் பதவிகுளம்) ஹென்ற் (Kent), டொலர் (Dollar) என்ற 171 மற்றும் 123 ஏக்கர் கொண்ட இரண்டு பண்ணைகளில் நிதியத்தின் உதவியோடு 1977 இல் பாதிக்கப்பட்ட மக்களைக் குடியமர்த்தி புனர்வாழ்வு தரப்பட்டது. இவை தனியாருக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட காணிகள். அதில் கென்ற் பண்ணையில் 98 குடும்பங்களும், டொலரில் 120 குடும்பங்களும் வாழ்ந்தார்கள். நிதியத்தின் மேற்பார்வையில் அங்கு பாடசாலைகள், மாங்காய், தென்னந் தோட்டங்கள், பால் மாடுவளர்ப்பு என்பன உருவாக்கப்பட்டன.

22 ஒகஸ்ட் 1983 அரசாங்கம் இந்தக் காணிகளை கிராம விஸ்தரிப்புக்கென சுவீகரித்தது. வழமையாக அரசாங்க நிரல்களின்படி கிராம விஸ்தரிப்புக்கு விவசாயிகளை அந்தப் பகுதியிலிருந்து முன்னுரிமை கொடுத்து தேர்ந்தெடுத்து குடியிருத்துவதுதான் வழமை. ஆனால் இங்கு இவையெல்லாம் புறக்கணிக்கப்பட்டு பழைய குற்றவாளிகள் தென்பகுதிகளிலிருந்து புனர்வாழ்வு பெறுவதற்கென்று குடியமர்த்தப்பட்டனர். ஏற்கனவே குடியிருந்த தமிழர்கள் விரட்டப்பட்டனர். இப்படிக் கோண்டு வந்து குடியமர்த்தப்பட்டவர்களில் பலர் 1983 ஆம் ஆண்டு வெலிக்கடை ஜெயிலில் தமிழ் கைதிகளைக் கொலை செய்தவர்கள்.

இப்படியான உத்திகளே நிதியம் உதவிகள் தந்த அம்பாறை, கந்தளாய், அல்லை, நிலாவெளி, புல்மோட்டை பகுதிகளிலும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவிலும் நடந்தன. கெனற், டொலர் பகுதிகளில் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியிருந்தாலும் ஆயுதப் படைகளின் உதவியோடு முன்னைய குற்றவாளிகள் எல்லைக் கிராமங்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் படைகள் வந்தபின், ஈ.பி.ஆர்.எவ். எவ்வோ, புளொட்டோ இந்தப் பகுதிகளில் இருந்து இந்த குடியிருப்பாளர்களை விரட்டி விட , இவர்களுக்கு இந்தியப் படைகள் பின்னணியில் இருக்கிறார்கள் என்ற பயத்தில் இந்தக் குடியிருப்பாளர்களே தங்களது மூடை முடிச்சுக்களுடன் வெளியேறினார்கள்.

அதே வெளியேற்றங்கள் கந்தளாய், திருகோணமலை பகுதிகளிலும் நடந்தன. இவைபற்றி முக்கியமாக இந்தியாவின் அசிரத்தையை ஒட்டி ஜே.ஆர். குற்றம் சாட்ட, இந்திய முப்படை தளபதிக்கும் வெளிவிவகார மந்திரிக்கும் ஜே.ஆரோடு சந்திப்பு நடந்தது. அந்தச் சந்திப்பில் ஜே.ஆரின் மகனே சிங்கள மக்களை அங்கு குடியேற்றியவர் தான் எனவும், அவர்கள் விரட்டியடிக்கப்பட்டபோது இந்தியப்படைகள் மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர் எனவும், அவற்றுக்கு ஆதாரங்கள் தன்னிடம் உள்ளன எனவும் என வாதங்கள் நடந்தன.

**650.இந்தியாவின் பதில் என்னவாக இருந்தது?**

இவை தமிழ்ப் பிரதேசங்கள். அவற்றில் எழுந்த அத்துமீறிய குடியிருப்புக்கள் எனவும் தெரிகிறது. அவற்றைத் தமிழ் மக்கள் மீளப்பெற அதிகாரம் அவர்களுக்கு உண்டு என நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்தச் சூழ்நிலைகளைப் பாவித்து - தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்துக்கு இந்தப் பகுதிகளில் தரப்பட்ட திட்டங்களைப் பயன்படுத்தி - தேசியக் கட்டமைப்புக்களைப் பலமாக்க எவ்வளவோ பேச்சுக்கள் யாழ்ப்பாண பிரஜைகள் குழு மூலமும் நடத்தப்பெற்றன. அவை தங்களால் பார்க்கப்படும் என்ற பதிலே வந்தது.

இந்தியப் படைகள் திருப்பி அனுப்பப்பட்டு, மாகாண சபையும் கலைக்கப்பட்டதும், இந்தப் பகுதிகள் மட்டுமல்லாமல், மணல் ஆற்றைக் கூட இழந்து, தற்பொழுது நெடுங்கேணி, முல்லைத்தீவு கிராமங்களே ஆக்கிரமிப்பில் இருக்கின்றன.

இன்றைய அரசியல், இராணுவ சூழ்நிலை அதுவல்ல. பழையபடி இந்தியா தனது இராணுவத்துடன் வந்து நிற்கும் என்று மனப்பால் குடிப்பதற்கும் எங்களது அரசியலே கேள்விக்குறியாய் நிற்கிறது.

**651.ஆரியகுளம் அதிகார குளமாக மாறுகிறதே?**

ஆரியகுளம் புனரமைக்கப்பட்டு, அதன் திறப்பு விழாவின் பின் அதைப்பற்றி எழும் சமாசாரங்கள் எவரது அதிகாரத்தின் கீழ் அந்தக் குளம் வரவேண்டும் என்ற சர்ச்சையாக அமைந்தது. அதை வலியுறுத்தவோ என்னவோ ஆரியகுளத்தின் புனருத்தார விழாவில் நாகவிகாரையிலிருந்து கண்டிய நடனம் தருவித்து இப்பொழுது அந்த நாகவிகாரை இருக்கும் காணி வண்ணார்பண்ணை சிவன்கோவிலில் ஆதனம் என்றெல்லாம் தகவல்கள் வருகின்றன. இவை ஏன் இப்போதுதான் தோற்ற வேண்டும்?




அவற்றை சீர்படுத்தி திருத்திக் கொள்ள வேண்டும் என்ற பெருங்கதைகளைக் கூடிப்பேசலாம். ஆனால் அவற்றைச் செய்து கொள்ளக் கூடிய அதிகாரங்கள் உண்டா? இருப்பவை முழுமிடுமா? வழக்குகள் வருமா?

1982 இலிருந்து தமிழீழ விடுதலை முன்னணி ஆரம்பித்த நாள் முதல் விடுதலை வருகிறது என்று ஒவ்வொரு பொங்கலுக்கும் செய்திவரும். முள்ளிவாய்க்காலுக்குப் பின் அரசியல் தீர்வு வந்துவிடும் என்று ஆரவாரங்களுடன் பொங்கல் அறிவுப்புகள் வரும். இந்த வருடமோ பொங்கலோடு இன்னுமொரு அரசியல் கட்சி பொங்கல் பானை சின்னத்துடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பும் வந்துள்ளது. ஊடகங்கள் என்னவோ மக்களுக்கு இரந்து அளிக்கப்பட்ட பொங்கல் பானையும் பொங்லுகலுக்கானவையும் பெற்றுக் கொள்வதைத்தான் பிரசுரித்திருக்கின்றன. இவ்வளவு கால அரசியலுக்குப் பிறகும் தமிழ் மக்களது அரசியல் அவர்களைப் பொங்கல் செய்வதற்கே கையேந்துபவர்களாக ஆக்கியிருக்கிறது. இந்த நிலையில் வாழ்வாதாரத்துக்காக நிதியங்கள் கல்விக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் அத்தியாவசிய தேவைக்காக அர்ப்பணிப்புடன் பணி புரிபவை அவசியம். அதேசமயம் சுற்றுசூழலின் அழிவை தவிர்க்கவும் அதைப் பாதுகாக்கவும் பசுமை இயக்கங்கள் பணிபுரிவதும் பலமான ஆதரவுக்குள்ளாக வேண்டும். அவை பொது நோக்குக் கொண்டவை.

நடத்தப்படும் பல ஆய்வுக் கூட்டங்களிலும் களனி மகாநாடுகளிலும் கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அபிப்பிராயங்களே கேட்கின்றன. அவை தேவைதான். ஆனால் இன்று அவை இயங்கக்கூடிய அரசியல் பரப்பையும் இராணுவ அதிகாரத்தையும் கணக்கெடுத்தல் வேண்டும். இருக்கின்ற அரசியல் கட்சிகள் - முக்கியமாக பாரம்பரியமான தமிழரசுக் கட்சி - அதனது கட்சிக் கிளைகளை விஸ்தரித்து, முழுநேர பணியாளர்களை அமர்த்தி, அவற்றைப் பணிமனைகளாக உருவாக்கலாம். அவற்றிலிருந்து தங்களது நியமனங்களுக்கு உழைக்கக் கூடியவர்கள் உருவாகலாம் என்ற மனப்பயமோ என்னவோ அவை நடப்பதில்லை. புலம்பெயர் இளைஞர்கள் இப்படியான கட்சிக் கிளைகள் உருவாக்கத்தை நிர்ப்பந்திக்கலாம்.

வழமையான தேர்தல் காலத்தில் மாவட்டங்களுக்கு நிதிதேவை என உண்டியல் சேர்ப்பதுதான் வழமை. உதாரணத்துக்குப் பார்த்தால் 1977 இற்குப் பிறகு காணிகள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாவதை அரசுகள் சட்ட மூலங்களின் மூலம் செய்தது அரிது. அநேகமாக எல்லைக் கிராமங்களை சிங்களப் பகுதிகளுடன் இணைத்தும் சிலவற்றின் நடைமுறை அதிகாரங்களை சிங்கள கச்சேரிக்குள் கொண்டுவந்தும் கென்ற், டொலர் போன்று கிராம வளர்ச்சி என்ற திட்டங்களின் கீழ் வர்த்தமானி அறிவித்தல்களிலேயே செய்யப்பட்டன. அரசியல் கட்சிகள் தங்களது ஆளுமையுள்ள சட்டத்தரணிகள் மூலம் அந்த ஆண்டிலிருந்து இப்படியான கிராம வளர்ச்சி திட்டங்களின் மூலமோ அல்லது வர்த்தமானி அறிவித்தல்கள், கையகப்படுத்திய காணிகளின் விவரங்களைத் தொகுத்து உணர்வில் வெளிப்படும் இளைஞர்களுடன் இணைந்து, தகவல்களைப் பரிமாறி, அவற்றின் அடிப்படையில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்தல் வேண்டும். இந்த இளைஞர்கள் அவற்றை, தமிழ் மக்கள் பரப்பிலும், ஊடகங்களிலும் விவாதித்து, சர்ச்சைப்படாமல் ஐ.நா.வின் மற்ற கட்டமைப்புக்களின் மூலம் ஆக்கிரமிப்பை ஒட்டி அழுத்தங்கள் தர வேண்டும். அதைத் தவிர தன்னார்வ நிதியங்கள், கட்டமைப்புக்கள் இயங்குவதற்கான தடைகள் எவ்வளவு மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற தகவல்கள், அவற்றின் தாக்கங்களை அனுசரித்தே இவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியத்துக்கான கட்டமைப்புக்கள் விடுதலைப் புலிகளின் மீளாக்கத்துக்கானவை என்று முளையிலேயே முடித்துவிடும் எண்ணப்பாங்குதான் அரசின் எந்த பகுதியிலும் இருந்து வரும்.

2009ஆம் ஆண்டு போரின் முடிவில் சென்ற நல்லெண்ணக் குழுவில் லண்டனிலிருந்து எழுத்தாளர் ராஜேஸ் பாலசுப்பிரமணியமும் பங்கு பற்றியிருந்தார். சர்வதேசத்தில் சில கட்டமைப்புக்களை உருவாக்கி, அவர்கள் மூலம் திரட்டப்படும் நிதியை நிரந்தர அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுத்துவது என அவர் அரசாங்கத்துடன் முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளில் ஒரு பொது அறநிலையத்தை ஸ்ரீலங்காவில் நிறுவி அதன் மூலமாக செயல்படுவது என ஒத்துக்கொள்ளப்பட்டது. ராஜேஸ் பாலசுப்பிரமணியம் ஏற்படுத்த முயன்ற அறநிலையத்தின் கட்டுக்கோப்புக்களைப் பார்த்து அறிவுரைகள் தந்தேன். ஆயின் வைக்கப்பட்ட நிபந்தனையோ அந்த அறக்கட்டளையின் முகவர்களாக (Trustee ஆக) இரண்டு அரசாங்க மந்திரிக் வைக்கப்பட வேண்டும் என்பதாலும் அவர்களது அதிகாரத்தை ஒட்டியும் அது மேலெடுக்கப்படவில்லை.

ஆகவே தேசியம் வளர்வதற்கு முதலில் அதிகாரம் தேவை. அந்த அதிகாரத்துக்கான வழிவகைகள் ஐ.நாவின் கட்டமைப்புக்களிடையே வளர்ப்பதில் தான் புலம்பெயர் இளைஞர்கள் தங்களது பல் இயல் அறிவுகளை அர்ப்பணிப்பு செய்ய வேண்டும்.

– வளரும் –

காலைக்கதிர் Kalaikkathir

# அரசை விமர்சிப்போர் வெளியயே போகலாம்

## கதவுகள் திறந்துள்ளன என்கிறார் பிரதமர்

அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு கதவுகள் திறந்தே இருக்கின்றன எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்

அரசாங்கத்திற்குள் இருந்துக்கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது மிகப் பெரிய அரசியல் தவறு.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறி அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு கதவுகள் திறந்தே இருக்கின்றன.

அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பது மேல் நோக்கிப் பார்த்து எச்சில் துப்புவதை போன்றது.

அதேபோல் ஊடகங்கள் மூலம் நடத்தப்படும் அரசியலுக்கு ஆயுள் குறைவு. நான் 50 வருடங்களாக அரசியலில் அனுபவங்களைப் பெற்றுள்ளேன்.

எனினும் எந்த சந்தர்ப்பத்திலும் அரசியல் கொள்கைகளில் இருந்து விலகிச் சென்றதில்லை. - எனவும் தெரிவித்துள்ளார்.



## இளைஞர்களுக்கிடையிலான மோதலில் சமாதானம் பேசியவரின் வீடு உடைப்பு!

யாழ். ஓட்டுமடம் - காக்கைதீவு வீதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பல் வீட்டின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஓட்டுமடம் - காக்கைதீவு வீதியில் ஒரு இளைஞரை மற்றொரு இளைஞர் குழு தாக்குவதை அப்பகுதியால் வாகனத்தில் வந்த ஒருவர் அவதானித்துள்ளார்.

இதையடுத்து வாகனத்தை நிறுத்திய அவர் சமாதானமாகப் பேச்சி பிரச்சினையை முடித்துவைக்க முயற்சித்த நிலையில், அங்கு இளைஞர் ஒருவன் மீது தாக்குதல் நடத்திய குழு சமாதானம் பேச முயற்சித்தவர் மீதும், அவருடைய வாகனத்தின் மீதும் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளது.

இதையடுத்து அந்தப் பகுதியால் சிவில் உடையில் வந்த பொலிஸார் எனக் கூறப்படும் நபர்களைக் கண்டதும் அங்கு குழப்பம் விளைவித்த குழு அங்கிருந்து சென்றுள்ளது.

இந்நிலையில், சமாதானம் பேசுவதற்குச் சென்றவரையும், தாக்குதலுக்கு இலக்கான இளைஞரையும் அங்கு சிவில் உடையில் வந்த பொலிஸார் எனக் கூறிய நபர்கள் அழைத்து சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்யுங்கள் என்று ஆலோசனை வழங்கியிருக்கின்றனர்.

அதற்கமைய இருவரும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்த நிலையில் சமாதானம் பேச முயற்சித்தவரின் வீட்டுக்குள், வாள்கள் மற்றும் கம்பிகளுடன் நுழைந்த கும்பல் வீட்டிலிருந்த பொருள்களை அடித்து நொருக்கியதுடன், கதவுகளை வாளால் வெட்டி அட்டகாசம் புரிந்தது எனவும், வீட்டிலிருந்த ஒரு தொகைப் பணத்தை ரவுடிகள் எடுத்துச் சென்றனர் எனவும் பாதிக்கப்பட்ட வீட்டார் கூறியுள்ளனர்.

வீட்டுக்குள் வன்முறைக் கும்பல் புகுந்துள்ளது எனப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியும் அவர்கள் சம்பவ இடத்துக்கு நீண்டநேரமாக வந்திருக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனினும், பின்னர் அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## உயிரிழந்த மீன்கள் பெரும் அளவில் நெடுந்தீவில் கரை ஒதுங்குகின்றன

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் கடற்கரையில் அதிகமான மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவு கிழக்கு கடற்கரையில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் இறந்த நிலையில் மீன்கள் கரையொதுங்குவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய இழுவைமடி மீன்பிடியினை மேற்கொள்ளும் மீனவர்களே இதற்கு காரணமாக இருக்கக் கூடும் என மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## விபத்தில் வயோதிபர் மரணம் பஸ் தீக்கிரையாக்கப்பட்டது

### அவிசாவளையில் சம்பவம்



அவிசாவளை மாலியன்கம ரிட்டிகஹவெல பகுதியில் விபத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றதை அடுத்து ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் பஸ் ஒன்றைத் தீவைத்து கொளுத்தியுள்ளனர்.

அந்த பஸ்ஸில் மோதுண்டு, சைக்கிளோட்டியான 65 வயதான வயோதிபர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்தே பஸ் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது

தொழிற்சாலையில் பணி புரியும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸே இந்த விபத்தில் சிக்கியது.

விபத்தை அடுத்து, பஸ்ஸின் சாரதி தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அவிசாவளை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைதந்து, பஸ்ஸைத் தமது பொறுப்பில் எடுக்க முயற்சித்த வேளையே இந்த தீ வைப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த அமைதியின்மையினால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

## தமிழக மீனவர் கைதான இடத்தை ஆதாரப்படுத்த நீதிமன்று உத்தரவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.16

இந்திய மீனவர்கள் 43 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்ற எல்லைக் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய போதுதான் கைது செய்யப்பட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும் வரைபடத்தை ஆதாரமாகச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. அந்த ஆதார வரைபடத்தைத் தயார் செய்வதற்காக கடற்றொழில் திணைக்களம் அளவைத் திணைக்களத்தின் உதவியை நாடியுள்ளது.

நெடுந்தீவு அருகே கடந்த வருடம் டிசம்பர் 19ஆம் திகதி எல்லைதாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 43 பேர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டமையுடன் அவர்களின் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு கடந்த தவணை எடுக்கப்பட்டபோது மேற்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் கைது செய்யப்பட்ட இடத்தின் வரைபடங்களை, இந்திய படகுகளில் இருந்த ஜி.பி.எஸ். தொழில் நுட்பக் கருவிகளின் உதவியுடன், தயாரிப்பதற்காக அளவைத் திணைக்களத்தின் உதவியை கடற்றொழில், நீரியல்வளத் திணைக்களம் நாடியுள்ளது.

இந்த வரைபடம் கிடைக்கப்பெற்றதும் அதன் அடிப்படையில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

## நாகவத்தைக் கடலில் மூழ்கிய ஒரு மாணவனின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு மாவட்டம் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாகவத்தை கடலில் நேற்று முன்தினம் குளிக்கச் சென்ற மாணவர்களில் இருவர் காணாமல் போயுள்ள நிலையில் அவர்களை தேடும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வந்தது. பாடசாலை வீதியை சேர்ந்த எஸ். அக்சயன் (வயது 16) என்ற மாணவனின் சடலம் கிடைக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எட்டு மாணவ நண்பர்கள் குளிக்கச் சென்றதில் அவர்களில் மூவரை கடல் அலை அடித்துச்சென்றுள்ளது. அவர்களில் ஒருவர் தத்தளித்த நிலையில் மீனவர்களின் உதவியுடன் காப்பாற்றப்பட்டார். மற்றைய இரண்டு மாணவர்கள் காணமல் போன நிலையில் ஒருவரது சடலம் நேற்று கிடைக்கப்பெற்றுள்ளது.

அத்தோடு கிரான் பிரதான வீதியை சேர்ந்த ஜீ.சிவானந்தன் (வயது 16) என்பவர் குறித்து எத்தகவலும் இல்லை.

பொங்கல் தினத்தில் கிரான் தேசிய பாடசாலையில் ஒரே வகுப்பில் கல்வி பயிலும் 08 மாணவர்கள் நண்பகல் வேளை அருகிலுள்ள கடற்கரைக்குச் சென்று குளித்துள்ளனர். அப்போதே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

### நான்காவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸ்தேவைப்பட்டால், அது இந்த நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தடுப்பூசி வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை கொள்வனவு செய்யப்பட்ட டோஸ்களுக்காக சுமார் 35 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### பொரளையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையை மறைப்பதற்காக சம்பவத்துடன் தொடர்பில்லாத ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாட்டில் புதைந்து கிடக்கும் அனைத்துக் குற்றங்களின் பின்னணியிலும் கண்ணுக்குத் தெரியாத அரசியல் கரமும் பாதுகாப்பும் இருக்கின்றன. இவ்வாறானதொரு சூழலில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. - என்றார்.

### நாட்டில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர உறுதிப்படுத்தியுள்ளார்.

ஒமக்ரொன் தொற்றாளர்களைக் கண்டறிவதற்காக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்ட 182 மாதிரிகள் தொடர்பான இறுதி அறிக்கை இன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம்கையளிக்கப்பட்டதை அடுத்து இந்தத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# வல்வைப் பட்டங்கள் நேற்று கட்டைக்காட்டில் பறந்தன!




யாழ்ப்பாணம் வடமராட்சி - கிழக்கு கட்டைக்காடு பகுதியில் மாபெரும் பட்டத் திருவிழா நேற்று மாலை தொடங்கி சிறப்புற நடைபெற்றது.

முப்பரிமாண பட்டங்களை போட்டியாளர்கள் பங்கேற்க செய்யும் வகையில் ஏற்பாட்டாளர்களால் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

32பட்டங்கள்அங்கு பறக்கவிடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றில் பல பட்டங்கள் வல்வெட்டித் துறையில்நடைபெறும் பட்டத்திருவிழாவில் பங்கேற்கும்போட்டியாளர்களால் கட்டப்பட்டு பறக்கவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

வல்வெட்டித்துறையில் தைப்பொங்கல் நாளில் நடைபெறும் பட்டத்திருவிழா கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இடைநிறுத்தப்படுவதாக பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே கட்டைக்காட்டு பட்டத் திருவிழா நடந்தேறியது.

கட்டைக்காடு சென் மேரீஸ் விளையாட்டுக்கழகமும், பட்டப்போட்டிஏற்பாட்டுக் குழுவும் ஒழுங்குசெய்திருந்த இந்தநிகழ்வில் யாழ் மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் கே.சயந்தன், சுகிர்தன், பருத்தித்துறை.பிரதேச சபைத்தலைவர் அரியகுமார்,மருதங்கேணி பிரதேசசெயலாளர் பிரபாகரமூர்த்தி ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.











## துன்பத்தை அறிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கட்டமைப்பு வசதிகளைப் பூரணப்படுத்தி அதனைப் பயனாளிகளுக்குக் கையளிப்பதற்கான திறப்பு வழங்கும் வைபவம் நேற்று நடைபெற்றது.

கொட்டகலை சீ.எல்.எவ் வளாகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் இந்த வைபவம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த இந்திய வீட்டுத்திட்டத்தை தற்போதைய அரசு மலையக பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தியுள்ளது.

அமரர். தொண்டமான் நாட்டில் ஸ்திரமான அரசு ஒன்றை உருவாக்கப் பாடுபட்டவர். அதேபோல் தற்போதைய ஜீவனும் மலையக மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வருகின்றார்.

மலையகத் தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்தின் மூலமே நாட்டுக்கு அந்திய செலவாணி கிடைக்கின்றது.

நாட்டில் உருவான ஒவ்வொரு அரசும் மலையக மக்கள் தொடர்பில் பேசினார்கள். ஆனால், ஆட்சியமைத்ததுடன் உங்கள் துக்கங்களை அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

சுதந்திரம் பெற்று 74 வருடங்களாகியும் மலையக மக்களுக்கு உரிய காணிகள் வழங்கப்படவில்லை.

அதேபோல் சுதந்திரக் கல்வியும் மலையக மாணவர்களுக்கு உரிய வகையில் கிடைக்கவில்லை. எனவே, ஒவ்வொரு அரசுக்கும் மலையக சூழலையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் ஊக்குவிக்க வேண்டிய கடமை உண்டு.

அதன்படி இன்றைய அரசு சிரமங்களுக்கு மத்தியிலும் தடைப்பட்டிருந்த அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்கின்றது.

அதற்கமைய மலையகப் பகுதிகளில் வீதிகள் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுகின்றன.

பெருந்தோட்டப் பாடசாலைகள் இன்று தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. பொருளாதார ரீதியில் உலகமும் எமது நாடும் பல சவால்களை சந்தித்துள்ளது.

ஜனாதிபதியும், பிரதமரும் தலையிட்டு பெருந்தோட்ட மக்களுக்குக் கோதுமை மா சலுகையை வழங்கத் தீர்மானித்தனர்.

அதன்படி 80 ரூபாவுக்கு கோதுமை மா வழங்கப்படுகின்றது. ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கமையவே இந்த விடயம் சாத்தியமாகியுள்ளது.

ஆகவே, நாட்டு மக்களின் துன்பத்தை அறிந்த மக்களால் உருவான அரசே இதுவாகும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பெருந்தோட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படும் - என்றார்.

# கட்டுவனில் தனியாரின் காணிகளை சத்தமின்றி சுவீகரிக்க நடவடிக்கை?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 16

கட்டுவனில் தனியார் காணிகளை இரகசியமாக - காதோடு காது வைத்த விதமாக - அபகரிக்க விமானப்படை முயற்சி செய்வதாக ஒரு தகவல் கசிந்துள்ளாது.

சர்ச்சைக்குரிய பகுதியை நேற்று முன்தினம் ட்ரோன் மூலம் படம் பிடித்துச் சென்ற விமானப் படையினர் நேற்றுக் காலை 7 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், மற்றும் ஒப்பந்தகாரர் ஆகியோரோடு அப்பிரதேசத்திற்கு வருகை தந்து, நிலைமையை நேரில் ஆராய்ந்துள்ளனர்.

வலி. வடக்கில் கட்டுவன் - மயிலிட்டி வீதியில் விமான நிலையத்திற்கான பாதை ஏற்படுத்தும் நோக்கில் தாா்ப் படுக்கை வீதி அமைக்கப்பட்டது. இதன்போது 400 மீற்றர் நீளத்திற்கு 25 மீற்றர் அகலம் கொண்ட தனியார் நிலத்தை வீதியுடன் சேர்த்து பாதுகாப்பு வேலி அமைத்துள்ள படையினர், அந்த அளவு தூரத்தை விடுவிக்க கடந்த ஐந்து ஆண்டுகளாக மறுத்து வந்தனர். இதனால் வீதி அமைப்பு இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

இந்த நிலமையில் நேற்று முன்தினம் விமானப்படையினர் சகிதம் வந்த அதிகாரிகள் ட்ரோன் மூலம் படம் பிடித்துச் சென்றனர். நேற்றுக் காலை 7 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் படையினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் ஒப்பந்தகாரர் ஆகியோர் அப்பிரதேசத்திற்கு வருகை தந்து, நிலைமையை நேரில் ஆராய்ந்துள்ளனர்.

இதற்கு அமைய பழை வீதியைப் புனரமைக்காது, படையினர் அமைத்துள்ள வீதியோரம் 6.3 மீற்றர் அகலத்திற்கு தனியார் காணியின் ஊடாகவே பாதை அமைக்க தற்போது இரகசிய முயற்சிகள் இடம்பெறுகின்றன எனக் காணி உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.